பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 73 தை 25ஆம் நாள் வெள்ளிக்கிழமை 08 பெப்ரவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2050

போதைப் பொருள் விற்பனை தொடர்பான

## தகவல் வழங்கிய மாணவன் மீதான தாக்குதலை பொலிஸார் திசை திருப்பியமை அம்பலமாகியது

கிளிநொச்சி, பெப். 8
கிளிநொச்சி மாவட்டத்தில் கஞ்சா மற்றும் கசிப்புக் கடத்தல் தொடர்பில் தகவல் வழங்கிய பாடசாலை மாணவன் மீதான தாக்குதல் வழக்கை பொலிஸார் திசை திருப்பியமை அம்பலமாகியுள்ளது. வன்னிப் பிராந்தியப் பொலிஸ்மா அதிபர் நேற்றுமுன்தினம் முன்னெடுத்த விசாரணைகளின் போதே இந்தச் சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.
இதனையடுத்து கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்புக்கு அமைவாக மாணவனின் தந்தையால் புதிய முறைப்பாடு நேற்றுமுன்தினம் >> 25

கூட்டு அரசு அமைப்பதிலிருந்து

## ரணில் அரசு பின்வாங்கல்

இரவோடு இரவாக முடிவு



கொழும்பு, பெப்ரவரி 8
கூட்டு அரசை அமைப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த தீர்மானம் பிற்போடப்பட்டுள்ளது. 'தீர்மானத்தை இன்று (நேற்று) சமர்ப்பிக்கப்போவதில்லை' என சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல நேற்றுத் தெரிவித்தார். >> 25

## யானையால் தாக்கப்பட்ட நபர் மருத்துவமனையில்

ஒட்டுசுட்டான், பெப். 8
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் யானையால் தாக்கப்பட்ட வயோதிபர் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். ஒட்டுசுட்டான் சம்மளங்குளம் சின்னக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை வேளை வயல்க்காவலுக்கு >> 24



## ஒரு தொகுதிக் காணிகள் கிளிநொச்சியில் விடுவிப்பு

கிளிநொச்சி, பெப்.8
கிளிநொச்சியில் இராணுவத்தினரிடம் இருந்த மக்களது காணிகளில் 21.24 ஏக்கர் காணிகள் உரிமையாளர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.
கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வைத்து வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் இந்தக் காணிகள் >> 25

## வடக்குக் குடிநீர் பிரச்சினை ஆளுநர் நேற்று ஆராய்வு

கிளிநொச்சி, பெப்.8
வடக்கு மாகணத்தில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்றுள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த செயலர்கள், >> 24

ஐ.நா. சபையில்

## இலங்கை மீதான அழுத்தம் கூடும்!

மைத்திரியே காரணம் என்கிறார் மங்கள

யாழ்ப்பாணம், பெப். 8
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நடப்புக் கூட்டத் தொடரில் இலங்கை மீதான பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தம் மேலும் அதிகரிக்கும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகளே >> 25

## மலையக மக்களின் அவலத்துக்கு அனைத்து அரசுகளுமே காரணம்!

இந்த நிலை இனியும் தொடராது என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, பெப். 8
மலையக மக்களின் பொருளாதார பின்தங்கிய நிலையில் இருக்க இந்த நாட்டில் பதவியில் இருந்த அனைத்து அரசுகளும் காரணம் என்று தெரிவித்தார் நீதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர.
மலைநாட்டு புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று வியாழக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த >> 25

## தோற்கடிக்கப்பட்டது ஐ.எஸ்.

வொஷிங்டனில் வைத்து நேற்று அமெ. அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு



டமஸ்கஸ், பெப். 8
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்பட்டது என்று அறிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் நேற்று உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர். >> 25

## அரசியல் கைதியாக இருந்த குடும்பப் பெண்ணுக்கு பிணை

மன்னார், பெப். 8
கடந்த நான்கு வருடங்களாக அரசியல் கைதியாக இருந்த ஒரு குடும்பப்பெண் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப்பிணையில் நேற்று விடுவிக்கப்பட்டார். முல்லைத்தீவு மாவட்டத்தின் >> 24

## தமிழ் மக்களின் செல்வாக்கை இழக்கவில்லை கூட்டமைப்பு!

சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.8
'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழக்கவில்லை. நூறு வீதம் சரியான முடிவுகளை எடுத்து நேரான பாதையில் நாம் பயணிக்கின்றோம். இது எமது மக்களுக்கு நன்றாகத் தெரியும்' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
'அரசியல் தெரியாத விக்னேஸ்வரனைக் கொண்டு வந்து வடக்கு மாகாண முதலமைச்சர் ஆக்கியமை முதலாவது பிழை' எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
ஆஸ்திரேலியாவுக்கு அண்மையில் பயணம் செய்திருந்த அவர், >> 25

## பால்மா தொடர்பில் விவாதம் காரசாரம்

கொழும்பு, பெப். 8
இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மா தொடர்பில் பிரதி அமைச்சரால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் முற்றிலும் பொய்யான தகவலாகும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைச்சர் உண்மை சொல்கிறாரா? பிரதி அமைச்சர் உண்மை சொல்கிறாரா? என்பது தொடர்பில் தெளிவுபடுத்தவேண்டும் என சபாநாயகரை கேட்டுக் >> 25

## மலக் கூடத்தில் மயங்கி முதியவர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், பெப். 8
சகோதரியின் வீட்டுக்கு வந்த முதியவர் இயற்கைக் கடன் கழிக்கச் சென்ற வேளையில் மலக்கூடத்துக்குள் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார் என்று அவரது உறவினர்கள் தெரிவித்தனர். >> 25

DFCC வங்கி தரும்
அதிகூடிய வட்டி
12.5%
6 மாத நிலையான வைப்பிற்கு
ஆ.ச.வ. 12.89%
DFCC நிலையான வைப்பு
சிரேஷ்ட பிரஜைகளுக்கு 13% வட்டி. ஆ.ச.வ. 13.42%
24மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாளை

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகக் கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், பெப். 8

**காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலையை வெளிப்படுத்துமாறு கோரி யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாளை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.**

உயிரோடு கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே? எனக் கேட்டுப் போராடும் உறவுகளுக்கு ஆதரவாக 'மறைக்கப்படும் நீதியை வெளிப்படுத்தக் கோரி' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் கச்சேரி முன்னால் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. காலை 10 மணி முதல் 11 மணி வரை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. போராட்டத்தின் முடிவில் ஆளுநரிடம் மனுவொன்று கையளிக்கப்பட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (ம)

## பாதாள உலகக்குழுவினர் மூவர் நேற்று கைதாகினர்

கொழும்பு, பெப். 8


வத்தளையில் நேற்றுக் காலை மூவர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பாதாள உலகக்குழுவின் தலைவர் மாகந்துரே மதுஷ் மற்றும் டீ.மஞ்சுவின் உதவியாளர்கள் என்று கருதப்படுகின்றது.

சிறப்பு அதிரடிப்படையினரால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் வசமிருந்த ஐஸ் உள்ளிட்ட 20 போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்தார். சந்தேக நபர்களே கைதுசெய்யப்பட்டனர். 26, 29, 32 வயது. அவர்கள் விசாரணைகளின் பொருட்டு போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தரப்பு மேலும் தெரிவித்தது. (ம)

### நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு

## நீதியரசர் சில்வாவுக்கு எதிரான மனு மே 8ஆம் திகதியன்று பரிசீலனைக்கு

கொழும்பு, பெப். 8



முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராக நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுதொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த மனு உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, மூர்து பெர்னாண்டோ மற்றும் இ.ஏ.ஜி.ஏ அமரசேகர உள்ளிட்ட மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த வழக்கு விசாரணைகளிலிருந்து விலகுவதாக நீதியரசர் பிரியந்த ஜயவர்தன இன்று உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்தார். இதனால், குறித்த மனுவை வேறொரு தினத்தில் பரிசீலனைக்கு உட்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சரத் என் சில்வா சிவில் ஆடையில் வருகைதந்து சட்டத்தரணி ஆசனத்தில் அமர்ந்தமை தொடர்பில் மனுதாரர்கள் சார்பில் முன்னிலையாகிய அரச தலைவர் சட்டத்தரணி உபுல் ஜயசூரிய மன்றில் கண்டனம் வெளியிட்டார். 2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் திகதி மருதானைச் சந்தியில் வைத்து தேசிய ஒருமைப்பாட்டுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணியில் நிகழ்த்திய உரையில் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டதாக சரத் என் சில்வா மீது குறித்த மனுவில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. பேராசிரியர் சந்திர குப்த தேனுவர உள்ளிட்ட மூவரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி இவ்வாறான நடவடிக்கையில் மீண்டும் ஈடுபடாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இடைக்கால உத்தரவொன்றை பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளனர். (ம)

## போராடி சங்கிலியைக் காத்த பெண் நீதிமன்றில் சாட்சியம்

யாழ்ப்பாணம், பெப். 8

கோப்பாய்ப் பொலிஸ் ஆளுகைப் பிரிவில் 'குடும்பப் பெண்ணின் தாலிக் கொடி அறுக்கப்பட்ட வழக்கு விசாரணையின் சாட்சியங்கள் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று பதிவுசெய்யப்பட்டன.

நல்லூர் பகுதியில் வசிக்கும் அவர் வீதியால் சென்றபோது தாலிக் கொடியை இனம்தெரியாத நபர் ஒருவர் அறுக்க முற்பட்டுள்ளார். அவருடன் போராடி அறுந்த நிலையில் தாலிக் கொடியை அவர் பத்திரப்படுத்திக் கொண்டார்.

சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தாலிக்கொடி அறுக்கமுற்பட்டவனைப் பிடித்து நையப் புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நீதிவான் ஏ.எஸ்.பி. போல் முன்னிலையில் நேற்று விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்தப் பெண் சாட்சியளித்த போது தெரிவித்தாவது

தாலிக் கொடி அறுத்த நபர் என்னைக் கடுமையாக அடித்து, உதைத்து வீழ்த்தினார். தாலிக்கொடியைப் பறிகொடுக்கக்கூடாது என்பதற்காக நான் அவருடன் போராடினேன். நான் அணிந்திருந்த தாலிக்கொடி அறுந்த நிலையில் வழக்குக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தேன். பின்னர் அதைத் தந்து வழக்கின் சாட்சியத்தின்போது கொண்டுவருமாறு கூறியிருந்தனர். அதனால் கொண்டுவந்தேன் என்று மன்றில் அதைக் காட்டினார்.

குறுக்கு வினாக்கள் ஏதும் இருப்பின் சாட்சியிடம் கேட்கலாம் என்று சந்தேகநபருக்கு அறிவுறுத்தப்பட்டது.

"திருட்டில் ஈடுபட்டவர்கள் தொடர்பாக அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டபோது என்னைக் கண்டீர்களா?" என்று சந்தேகநபர் கேட்டார். அதற்குச் சாட்சி, "இந்த வழக்குத் தொடர்பில் எவ்வித அடையாள அணிவகுப்பும் நடத்தப்படவில்லை. திருட்டுச் சம்பவம் நடைபெற்ற அன்றையதினமே சந்தேக நபரை மின்கம்பத்தில் மக்கள் கட்டி வைத்துப் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்" என்று கூறினார். பொலிஸாரும் அவ்வாறான அடையாள அணிவகுப்பு நடைபெறவில்லை என்று தெரிவித்தனர்.

வழக்கு தொடர் விளக்கத்துக்காக எதிர்வரும் மார்ச் மதம் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-8)

## கூட்டு அரசு அமைப்பதற்கு எதிரான மைத்திரியின் நிலைப்பாடு சரிதான்!

### அவரது நிலைப்பாடு தொடர வேண்டும் என்று திஸாநாயக்க, டிலான் பெரேரா வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 8

ஐக்கிய தேசிய கட்சியால் மீண்டும் கூட்டு அரசு அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டமைக்கு சுதந்திரதின நிகழ்வன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்ப்பு வெளியிட்டிருந்ததைப் போன்று அந்த முடிவில் அவர் உறுதியாக இருக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் டிலான் பெரேரா ஆகியோர் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவினுடைய இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் தேசிய அரசை அமைத்து அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சிக்கின்றது. இதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் இணைத்துக் கொண்டு 122 பெரும்பான்மை தம்மிடம் காணப்படுவதாக தெரிவித்து வருகின்றனர். எனினும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சிக்கு அவர்கால் சமர்பிக்கப்பட்ட பிரேரணையை நிறைவேற்றிக் கொள்வதற்கான பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியாமலுள்ளது.

கடந்த காலங்களிலும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவே அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரித்தார். அதனையே இப்போதும் செய்ய முற்படுகின்றார். அவரது இந்த எண்ணம் ஒரு போதும் நிறைவேறப் போவதில்லை. அதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஒரு போதும் இடமளித்துவிடக் கூடாது என்பது எமது கோரிக்கையாகும்.

தற்போது ஐக்கிய தேசிய கட்சி - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து கூட்டு அரசை அமைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகளுடன் இணைந்து ஐக்கிய தேசிய முண்ணனி என்ற கூட்டமைப்பு அமைக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு தமது கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியுடன் கூட்டு அரசை அமைப்பதென்பது வெட்கப்பட வேண்டிய விடயமாகும் என்று திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்த தாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மைய அரசியல் நெருக்கடிகளின் பின்னர் கலந்து கொண்ட முதலாவது நாடாளுமன்ற அமர்விலேயே இந்த விடயத்துக்கு தமது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார். இதன் மூலமே அவர்களது இந்த நோக்கம் நிறைவேறப் போவதில்லை என்பது தெளிவாகின்றது.

நாட்டில் அரச தலைவரால் கூட சுயாதீன ஆணைக்குழுவினை மீறி சில தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. எனினும் தற்போது அந்த சுயாதீன ஆணைக்குழுவையும் மீறி சில தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரசமைப்பு சபைகூட கட்சி சார்பாகச் செயற்பட்டு வருகின்றது.

அத்தோடு ஒரு கட்சியால் முன்வைக்கப்படுகின்ற பிரேரணைக்கு பதிலளிக்க வேண்டிய தேவை சபாநாயகருக்கு இல்லை. எனினும் அவர் இன்று (நேற்று) நாடாளுமன்றத்தில் அந்த தீர்மானம் தொடர்பாக கருத்து வெளியிடுகின்றார் - என்றார். (ம-61)

## இந்துக்கள் குறைகேள் அரங்கு

யாழ்ப்பாணம், பெப். 8


யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை எதிர்வரும் 24ஆம் திகதி இந்து மக்களின் குறைகேள் அரங்கொன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

பௌத்த மதத்தைக் காப்பாற்ற சிங்கள அரசியல் தலைவர்கள் துணிவுடன் செயற்படுகின்றனர். முஸ்லிம் மக்களைப் பாதுகாக்க முஸ்லிம் தலைவர்கள் செயற்பட்டு வருகின்றனர். கிறிஸ்தவ மதத்தைப் பாதுகாக்க தமிழ் அரசியல் தலைவர்களும் சிங்கள அரசியல் தலைவர்களும் இணைந்து செயற்படுகின்றனர். எனினும் இந்து மக்களைப் பாதுகாக்க எவரும் முன்வருவதில்லாதிருப்பது இந்துக்கள் அரசியல் அநாதைகள் என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளது. எனவே இது தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுக்கும் விதத்தில் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது என்று இந்து சமயப் பேரவை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## 40 ஆயிரத்து 800 தொன் நெல் கொள்வனவு செய்யத் திட்டம்

### நெல் சந்தைப்படுத்தல் சபையின் கிளிநொச்சிக் காரியாலயம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8



நெல் சந்தைப்படுத்தல் சபையால் 40 ஆயிரத்து 800 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக சபையின் கிளிநொச்சி பிராந்திய காரியாலயம் தெரிவித்துள்ளது.

நெல் அறுவடை தற்போது வடக்கு மாகாணத்தில் ஆரம்பித்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை முதல் சபையில் அரச நிர்ணய விலையின் கீழ் நெல் கொள்வனவு செய்யப்படுகிறது. ஒரு கிலோ சம்பா 41 ரூபாவுக்கும், ஒரு கிலோ நாடு 38 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகிறது.

ஒரு விவசாயிடம் இருந்து 2ஆயிரம் கிலோ கிராம் நெல் வரையில் கொள்வனவு செய்யப்படும். இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 32ஆயிரம் கிலோ கிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருள்கள் திருடியவருக்கு தண்டத்துடன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 8

வர்த்தக நிலையத்தில் பொருள்கள் திருடியவரைக் கடுமையாக எச்சரித்த யாழ்ப்பாண நீதிவான் மன்று அவருக்கு 500 ரூபா தண்டம் விதித்து விடுவித்தது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவற்றைத் திருடியமை, உடமையில் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களை நீதிமன்றில் அவர் ஏற்றுக் கொண்டார்.

அதனையடுத்து அவருக்கு 500 ரூபா தண்டம் விதித்த நீதிவான் ஏ.எஸ்.பி.போல், இனிவரும் காலங்களில் இவ்வாறான செயல்களில் ஈடுபடக் கூடாது, அவ்வாறு ஈடுபட்டால் விளக்கமறியலில் வைக்கப்படுவீர் என்று எச்சரித்தார். (த-8)

## கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 8

கம்பகா,வீரகுலப் பகுதியில் இரண்டேகால் கிலோகிராம் நிறையுடைய கேரளாக் கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் வீரகுல பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய வீரகுல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)



இலங்கைக்கான நோர்வே தூதுவர் தர்பயன் கவுஸ்ரட்செதர் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆளுநர் அலுவலகம் தகவல்களை வெளியிடவில்லை. (ஐ-21)

# ஒழுக்கம் இன்றி வந்தால் மறியல் செல்ல நேரிடும்

### யாழ்ப்பாண நீதிமன்று எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், பெப். 8**

**நீதிமன்றுக்கு வருவோர் நேர்த்தியாக ஆடை அணியாமல், தலை முடி வெட்டாமல் என்றவாறெல்லாம் ஒழுக்கம் பேணாது வருவார்களேயானால், விளக்கமறியலில் வைக்கப்படுவர் என்று யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பி.போல் கண்டிப்பான அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணம் நல்லூர், முடமாவடியில் வீடுகளை அடித்து உடைத்தமை, வாள்வெட்டில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் மீதான வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது.

மன்றில் முற்பட்ட சந்தேக நபர்கள் நேர்த்தியாக ஆடைகள் அணியாது, தலை முடி வெட்டாது காணப்பட்டனர். அவர்களை அவதானித்த நீதிவான் நீதிமன்றுக்கு சமூகம் அளிக்கும் போது ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். இனிமேல் வழக்குக்காக நீதிமன்றுக்கு வரும் போது நேர்த்தியாக ஆடைகள் அணிந்து வரவேண்டும். நாகரிகமான முறையில் தலை முடி வெட்டியிருத்தல் வேண்டும். ஒழுக்கமற்ற முறையில் வந்தால் சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்படுவீர்கள் என்று எச்சரித்தார். (த-8)

### ஆடியபாதம் வீதித் தாக்குதல்

# தாக்குவதற்கு வந்தோரிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை

### முறைப்பாட்டாளர் நீதிமன்றில் சாட்சியம்

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்ப்பாணம் நல்லூர் ஆடியபாதம் வீதியில் மரக்காலையில் வேலை செய்யும் நபரைத் தாக்க முற்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் சந்தேகநபர்கள் கையில் ஆயுதம் வைத்திருந்ததைக் காணவில்லை என்று சாட்சி ஒருவர் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்றுச் சாட்சியமளித்தார்.

ஆடியபாதம் வீதியில் உள்ள மரக்காலையில் வேலை செய்யும் இளைஞனை இனந்தெரியாத கும்பல் தாக்க முற்பட்ட போது, இளைஞன் அவர்களிடமிருந்து தப்பி ஓடியபோது கிணற்றில் வீழ்ந்துள்ளார். பின்னர் ஊரவர்களால் காப்பாற்றப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்றிருந்தது.

தாக்க முற்பட்டனர் என்ற சந்தேகத்தில் 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடமிருந்து கத்தி போன்ற ஆயுதம் ஒன்றை மீட்டிருந்தோம் என்றும் குற்றஞ்சாட்டிக் கோப்பாய் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நீதிவான் ஏ.எஸ்.பி.போல் முன்னிலையில் வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றது.

முறைப்பாட்டாளர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

ஆடியபாதம் நல்லூர் வீதியில் உள்ள மரக்காலையில் நின்றிருந்த போது சில நபர்கள் என்னைத் தாக்குவது போல வந்தனர். நான் தப்பி ஓடும்போது அயல் வீடு ஒன்றின் மதில்மேல் ஏறிப் பாய்ந்தே ஓடினேன். அதன்போது எதிர்பாராத விதமாக மரக்காலைக்கு அருகில் இருந்த கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துவிட்டேன்.

காப்பாற்றுமாறு கூக்குரலிட்டேன். முதலாவது சந்தேகநபர் நான் வீழ்ந்து கிடந்தமையை எட்டிப்பார்த்தார். பின்னர் அங்கு ஒன்று கூடிய ஊர்மக்கள் என்னைக் கிணற்றிலிருந்து மீட்டனர். மீட்கும்போது ஊர்மக்களுடன் பொலிஸாரும் நின்றிருந்தனர்.

என்னை விரட்டியவர்களே கிணற்றுக்குள் வீழ்ந்ததும் எட்டிப்பார்த்தனர் என் நான் நினைத்தேன்" என்று சாட்சியம் அளித்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் குறுக்கு விசாரணை நடத்திய சட்டத்தரணி மு.ரெமீடியஸ்,

மரக்காலைக்கும் கிணற்றுக்கும் இடையில் எவ்வளவு தூரம்?. வந்தவர்களை நீங்கள் அடையாளம் கண்டீர்களா?. கிணற்றில் இருந்து மீட்கப்பட்டதும் அவர்களை கண்டீர்களா?. பொலிஸார் உங்களை எப்படி அழைத்துச் சென்றனர்?. அழைத்துச் செல்லும்போது சந்தேகநபர்கள் ஆயுதம் ஏதாவது வைத்திருந்தனரா? என்று கேட்டார்.

அதற்குச் சாட்சியமளித்த அவர்: மரக்காலைக்கும் கிணற்றுக்கும் இடையே 100 மீற்றர் தூரம். என்னை கலைத்தவர்களை நான் சரியாக அப்போது பார்க்கவில்லை. கிணற்றுக்குள் வீழ்ந்தபோது முதலாவது சந்தேக நபர் மட்டுமே என்னை எட்டிப்பார்த்தார். நான் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டபோது முதலாவது சந்தேக நபர் உட்பட ஏனைய நபர்களை நான் சம்பவ இடத்தில் காணவில்லை. என்னைப் பொறுப்பேற்ற பொலிஸார் சிலமணி நேரத்திலேயே தமது வாகனத்தில் ஏற்றி பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களைப் பொலிஸ் நிலையத்தில் கண்டேன். அவர்களை இந்த வழக்குக்கு முன்னர் பார்த்ததும் இல்லை, பழக்கமும் இல்லை. எனது நண்பர்களுக்கும் இன்னொரு தரப்பினருக்கும் அன்யைய தினம் நல்லூர் பகுதியில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது. நான் நண்பர்களுடன் நின்றபோதும் முரண்பாடு நடைபெறும்போது நான் அங்கு இருக்கவில்லை. அந்த முரண்பாட்டை நான் அறிந்தமையால் தான் என்னைத் தாக்க வருகின்றனரோ என்ற அச்சத்தில் மதில் பாய்ந்து ஓடினேன்.என்று சாட்சியமளித்தார்.

வழக்கு தொடர் சாட்சியத்துக்காக எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-8)



# ஆயிரம் ரூபா கோரி நேற்றும் போராட்டம்

கொழும்பு, பெப். 8

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கக் கோரி டிக்கோயா போடைஸ் தோட்டப்பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஹற்றன்-டயகம முதன்மை வீதி முடங்கியது.

தோட்டத் தொழிலாளர்களாகிய தமக்கு தோட்ட நிர்வாகம் மாதம் ஒன்றுக்கு 25 நாள் தொழில் வழங்கினாலும் இறுதியில் எங்களுக்கு 5ஆயிரம் ரூபா சம்பளம் மாத்திரம் எஞ்சிகிறது. இந்தமுறை புதிய கூட்டு ஒப்பந்தப்படி வெறுமனே 20ரூபா மாத்திரம் அதிகரித்துள்ளனர். ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் வேண்டும் என்பதே எமது கோரிக்கை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

தோட்டத் தொழிலாளர்களாகிய எங்களுக்கு உரிய முறையில் ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை மலையக அரசியல்வாதிகள் பெற்றுக் கொடுக்காவிட்டால் எதிர்வரும் தேர்தல் காலங்களில் அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுவோம் என்றனர். (து)

### பொருளாதார மத்திய நிலையக் கடை விடயம்

# ஒருங்கிணைப்புக் குழு முடிவை நடைமுறைப்படுத்தப் பணிப்பு!

வவுனியா, பெப்.8

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வியாபார நிலையங்களை வழங்குவது தொடர்பில் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தலைமை அமைச்சர் துறைசார்ந்த அமைச்சருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார் என்று வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் கடைகளை வழங்கும் போது, 40 ஆண்டுகளுக்கு மேலாக அங்கு வியாபாரத்தில் ஈடுபடுகின்ற 35 வியாபாரிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வழங்க வேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக கடைகள் தொடர்பில் கடந்த வாரம் திறந்த கேள்விப் பத்திரம் கோரப்பட்டிருந்தது.

இதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளோம் என்று வியாபாரிகள் என்னிடம் தெரிவித்தனர். நான் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா ஊடாகத் தலைமை அமைச்சருக்கு இந்த விடயத்தைத் தெரியப்படுத்தினேன். ஏற்கனவே வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் 35 உரிமையாளர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் கடைகளை வழங்குவது என்றும், மிகுதியாகவுள்ள கடைகளை திறந்த கேள்வியில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தலைமை அமைச்சர் பணித்துள்ளார்- என்றார். (எ-105)

யாழ் மண்கும்பான் வெள்ளைப்புற்றடி



ஸ்ரீ வீரகத்தி விநாயகர்

மகா கும்பாபிஷேகம்

2019.02.11

இன்று (08.02.2019) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, யந்திர பூஜை பூர்த்தி, சிற்பாசாரியர் உபசாரம், தூபிஸ்தாபனம், பிரசாதம் வழங்குதல், மாலை 3.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, மிருத்சாங்கிரஹரணம், அங்குரார்ப்பணம், ரஷாபந்தனம், தர்மத்வஜாரோகனம், பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை, கடஸ்தாபனம், கலாகர்ஷணம், ஷனஹோமம், கும்பயாகசலாப், பிரவேசம், யாகபூஜை, தீபஸ்தாபனம், அக்கினிகார்யம், நவாக்கினி விபஜனம், குண்ட பூஜை, மூல மந்திர அஸ்டோத்தர ஹோமம், தீபாராதனை, யந்திர பிம்பஸ்தாபனம்.

மைதிலி நகைமாடம்
89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 7902

தங்கநகை வியாபாரி

யாழ் மைதிலி ஜுவல்லர்ஸ்
79 Z, செட்டித்தெரு,
கொழும்பு-11.
Tel: 011 239 6239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதியான தொண்டருக்கு நேர்முகத்தில் முன்னுரிமை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணி புரிந்தவர்களில் தகுதியானவர்கள் வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு செய்யப்படும் நேர்முகத் தேர்வில் முன்னுரிமை வழங்கப்படுவார்கள் என்று மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்தது.

வடக்குமாகாணத்தில்சுகாதாரத் தொண்டர்களாகப் பலர் பணியாற்றியுள்ளனர். இவர்கள் டெங்குக் கள தரிசிப்பு, சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை,மருத்துவமனை போன்றவற்றில்ஒப்பந்தஅடிப்படையில் தொண்டர்களாகப் பணியாற்றியவர்கள்.

அவர்களின் ஒப்பந்த காலம் நிறைவடைந்ததும் அவர்கள் அந்த வேலையை நிரந்தரமாக மேற்கொள்ள முடியாது. அவர்கள் பணி புரியும் இடத்தில் உள்ள உயர்அதிகாரிகளின் வேண்டுகோளுக்குஇணங்க அதிக காலம் வேலை செய்தவர்கள் உள்ளனர். இவர்கள் ஒப்பந்தகாலம்நிறைவடைந்த பின்னர் வேலையற்று இருக்கின்றனர். அது தொடர்பில் அரசியல்பிரமுகர்கள் பலரும் அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். அதனடிப்படையில் அரச தலைவர் செயலகம் சுகாதாரத்தொண்டர்களாகப் பணியாற்றியவர்களின் விவரங்களைத் தருமாறுமாகாணஅமைச்சுக்குப் பணித்தது. சுமார்800பேரின் விவரங்கள்அனுப்பப்பட்டன. அதேவேளை, தாமும்கடமையாற்றினோம், ஆனால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பெயர்ப் பட்டியலில் பெயர் விவரங்கள் இல்லை என்று நேற்று முன்தினம் நடைபெற்ற ஆளுநரின் பொதுமக்கள் சந்திப்பில் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்குமாகாணத்தில்சுகாதாரத் தொண்டர்களுக்கு சுமார் 400 வரையில் வெற்றிடங்கள்காணப்படுகின்றன. அந்த வெற்றிடங்களுக்கு ஆள் சேர்ப்பு செய்யப்படும் போது சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றிய, அதற்கான சரியான ஆவணங்களைச் சமர்ப்பிப்பவர்கள் நேர்முகத் தேர்வின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன.

இதுதொடர்பில்மாகாணஆளுநரின்கவனத்துக்குக்கொண்டு வரப்பட்டுள்ளதுஎன்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள்

சாவகச்சேரி, பெப்.8

மிருசுவில், கெற்பேலியில் உள்ள சூத்திரக்குளம் உடைப்பெடுத்ததால் பாதிப்படைந்த 14 குடும்பங்களுக்கு இடர் உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த டிசெம்பர் மாதம் பெய்த கடும் மழையால் பாதிக்கப்பட்ட 574 குடும்பங்களுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவுகள் கடந்த மாதம் வழங்கப்பட்டன.

கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் சூத்திரக்குளம் உடைப்பெடுத்திருந்தது. அதில் பாதிக்கப்பட்ட 14 குடும்பங்களுக்கு முதற்கட்ட உதவியாகத் தலா 10 ஆயிரம் ரூபா இடர் முகாமைத்துவ அமைச்சால் வழங்கப்படவுள்ளது என்றும் அவை தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. அவை விரைவில் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## பணம், நகைகள் திருடினாரென ஒருவர் கைது

மட்டக்களப்பு, பெப். 8

வீட்டைக் கண்காணிப்பதற்காக பொருத்தப்பட்டிருந்த மறைகாணி உள்ளிட்ட உபகரணங்களை அகற்றியதோடு பணம் மற்றும் தங்க நகைகளைத் திருடிச்சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனையைச் சேர்ந்த 23 வயதுடையவரே நேற்று முன்தினம் கைதானார். சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் 26 வயதுடையவர் தேடப்பட்டுவருகிறார்என்றுபொலிஸார் தெரிவித்தனர். (த-46)

## இரு மாணவர்களுக்கு ஈருருளிகள் கையளிப்பு



கொடிகாமம், பெப்.8

சாவகச்சேரியைச்சேர்ந்த இரு மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன. போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இருவருக்கே அவை வழங்கப்பட்டுள்ளன. உறவுகளுக்கு கரம் கொடுப்போம் நிறுவனத்தின் இணை அமைப்பான நோர்வே ஒஸ்லோவில் இயங்கிவரும் அடுத்த தமிழ் தலைமுறைகள் அமைப்பின் உறுப்பினரான நிரோஜா ரவி தனது பிறந்த நாளை முன்னிட்டு இந்த உதவியை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈருருளிகள் கையளிக்கும் நிகழ்வில் உலகத் தமிழ் மாணவர் ஒன்றிய முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் அனோஜன் மற்றும் தனுசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-159)

## கிராம சக்தி எழுச்சித் திட்ட அறிக்கைகள் ஆளுநரிடம்

யாழ்ப்பாணம், பெப்.8

வடக்கின் 5 மாவட்டச் செயலர்களும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கிராம சக்தி எழுச்சித் திட்ட நிலைமைகள் தொடர்பில் ஒளிப்பட வடிவிலான விளக்கங்களைக் கையளித்துள்ளனர். அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கும் வகையில் அவை வடக்கு ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கிராம சக்தி எழுச்சித் திட்ட நிகழ்வுக்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் வடக்கு வருவார் என்று கூறப்பட்டி ருந்தது. ஆனால் அவரது பயணம் திடீரென ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 7.30 மணியளவில் ஆளுநர் செயலகத்துக்கு 5 மாவட்டச் செயலர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களுடன் வடக்கு ஆளுநர் கலந்துரையாடினார்.

அப்போது மாவட்டத்தின் கிராம சக்தி எழுச்சித் திட்டத்தின் நிலைமைகள் தொடர்பான ஒளிப்பட அறிக்கைகளை மாவட்டச் செயலர்கள் ஆளுநரிடம் கையளித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் 5 மாவட்டங்களின் செயலர்களும், ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்து ஓர் விவசாயப் பிரதிநிதியும், மாகாண ஆளுநரின் செயலர் எஸ்.இளங்கோவனும் கலந்துகொண்டனர். (ஐ-105)

# நிகழ்வுகள்

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ்ப்பாணம், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்லமெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலையின் அதிபர் எஸ். இந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பி.கணேஸ்கனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசனும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-70)

+++

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டு, உடற்கல்வி பிரதி கல்விப்பணிப்பாளர் ஆர் ராஜசீலன், யாழ்ப்பாணம் தலைமை அலுவலக பொலிஸ் அதிகாரி ரீ.இமானுவல், ஒலிம்பியனும் பழைய மாணவனுமாகிய கலாநிதி என்.எதிர்வீரசிங்கம், பழைய மாணவன் எஸ்.எச்.எம். நியாஸ் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ)

+ + +

வடமராட்சி, பெப்.8

பருத்தித்துறை வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அதிபர் த.இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-173)

+ + +

யாழ்ப்பாணம், பெப். 8

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்றுபிற்பகல்1.30மணிக்குபிக்னெல் மைதானத்தில் கல்லூரி முதல்வர் வண.டி.எஸ்.சொலமன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக மானிப்பாய் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் பி.பரணிதரன், அவரது பாரியார் திருமதி நிஷாந்தி பரணிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-50)

## சமாதான நீதிவான்களாக சத்தியப் பிரமாணம்

சாவகச்சேரி, பெப். 8

சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் இன்று வெள்ளிக்கிழமை சமாதான நீதிவான்களாக சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர், உப தவிசாளர் ஆகியோரும் ஏனைய 16 உறுப்பினர்கள் சமாதான நீதிவான்களாக சத்தியப் பிரமாணம் எடுக்கவுள்ளனர் எனவும் இவர்களின் பதவிக் காலம் முடியும் வரை சமாதான நீதிவான்களாகச் செயற்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் இ. சபாலிங்கத்தின் நூற்றாண்டு விழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் சதா நிமலன் தலைமையில் நாளை சனிக்கிழமை 9ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## வள்ளுவர் விழா

சாவகச்சேரி, பெப். 8

தென்மராட்சி இலக்கிய அணியின் வள்ளுவர் விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

சங்கத்தானை கம்பன் கல்லூரி தமிழ்க் கோட்டத்தில் மாலை 5 மணிக்கு தென்மராட்சிகல்விவலய ஓய்வுபெற்ற ஆரம்பக் கல்வி உதவிப்பணிப்பாளர் த.சிறிஸ்கந்தராஜா தலைமையில் விழா நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மூத்த சட்டத்தரணி த.வேலாயுதம் தம்பதியினர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்க, தெ.திருவேரகன் கடவுள் வாழ்த்தை இசைக்கவுள்ளார். 'வள்ளுவர் நெறியில் பெரிதும்பெருமைபெற்றவர்'என்னும் தலைப்பிலான விவாத அரங்கு கம்பவாரிதி இ.ஜெயராஜை நடுவராகக் கொண்டு நடைபெறும்.

அரங்கில் 'திண்மையுடைய பெண்ணே!' என்னும் பொருளில் அ.வாசுதேவாவும் 'கைம்மாறு வேண்டா கொடையாளனே!' என்னும் பொருளில் பரா.ரதீஸும் 'குடிதழீ கோலோச்சும் வேந்தனே!' என்னும் தலைப்பில் கவிஞர் த.நாகேஸ்வரனும் 'மெய்ப்பொருள் காணும் அறிஞனே!' என்னும் பொருளில் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தனும் விவாதிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 8

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச செயலகப் பிரிவுச்சங்கத்தின் பொதுக்கூட்டம் உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் நடப்பு ஆண்டுக்கான நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக ந.சண்முகவேலும், செயலராக ப.மகேந்திரதாசனும், பொருளாளராகப.கமலநாதனும், உபதலைவராக அ.ஸ்ரீதரனும், உபசெயலராக ந.சுப்பிரமணியமும், நிர்வாக சபை உறுப்பினர்களாக செ.இராசலிங்கம், பொ.நடேசன், கணக்காய்வாளர் பா.ஞானபாஸ்கரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் என்று கூறப்பட்டது. (ஐ)

## கலை நிகழ்வும் ஓவியக் காண்பியலும்

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலை மன்றத்தினரால் நடத்தப்படும் "அழகெழில் 2019" எனும் கலை நிகழ்வும் ஓவியக்காண்பியலும் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை பீடாதிபதி கலாநிதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

காலை 8.15 மணிக்கு இசை, நாடகம், நடன நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணிக்கு ஓவியக்காண்பியம் நிகழ்வும் இடம்பெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தமிழ் பெருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்ப்பாணம் பிரதேச செயலக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாபெரும் முத்தமிழ் பெரு விழா நாளை சனிக்கிழமை தொடக்கம் மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வு கொழும்புத்துறை கிழக்கு நெடுங்குளம் சிறி அம்பலவாணர் ஆலய மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி அலுவலகர் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்துகொள்ளவுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் தெற்கு சிறி கற்பக விநாயகர் ஆலய அரங்கத்தில் முற்பகல் 9 மணிக்கு நடை பெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார்.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலர் பொ.தயானந்தன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ் சிவலிங்கராஜா கலந்து கொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கிராம சக்தி வாரத்தில் பல்வேறு நிகழ்வுகள்

சாவகச்சேரி, பெப் 8

கிராம சக்தி மக்கள் இயக்க கிராம சக்தி வாரம் எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

18 ஆம் திகதி சிரமதான நிகழ்ச்சிகளும், 19 ஆம் திகதி சமய நிகழ்வுகளும், 20 ஆம் திகதி சுற்றாடல் குடியிருப்புகள் டெங்கு நடவடிக்கைகளும், 21 ஆம் திகதி போதைப் பொருள்கள் தடுப்பு நிகழ்வுகளும், 22 ஆம் திகதி தெளிவூட்டல் அறிவூட்டல் நிகழ்வுகளும், 23 ஆம் திகதி கருத்திட்டங்கள் ஆரம்பித்து வைத்தல் நிகழ்வுகளும், இறுதிநாளான 24 ஆம் திகதி கிராம மக்களின் பங்களிப்புடன் கலாசார நிகழ்வுகளும் நடத்தப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## சின்னமணி நினைவாக வில்லுப்பாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.8

கலாவிநோதன் க.கணபதிப்பிள்ளை (சின்னமணி) நினைவாக வடக்கு மாகாணம் தழுவிய நிலையில் வில்லுப் பாட்டுப் போட்டிக்கான விண்ணப்பங்களை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் கோரியுள்ளது.

இந்தப் போட்டியில் தற்போது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் பாடசாலையைப் பிரதிநிதித்துவப்படுத்திய அணியாகவோ தாங்கள் அங்கத்துவம் பெறும் அறநெறிப் பாடசாலை அல்லது கலை அமைப்புக்கள் மன்றங்களின் ஊடாகவோ பங்குபற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

30 நிமிடங்களை கொண்ட இப் போட்டியில் கீழே குறிப்பிடப்படும் ஈழத்தின் துறை சார் ஆளுமை ஒருவரைக் கருப்பொருளாக கொண்டு வில்லுப்பாட்டு வடிவமைக்கப்படவேண்டும். கலாவிநோதன்க.கணபதிப்பிள்ளை (சின்னமணி), சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மகாகவி உருத்திரமூர்த்தி, செங்கை ஆழியான், கவிஞர் நீலாவணண், கவிஞர் முருகையன், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் வித்தியானந்தன், வித்துவான் வசந்தா வைத்தியநாதன், வித்துவசிரோமணி கணேசையர், கோ. நடேசையர், ஏரம்பு சுப்பையா, பண்டிதை இ.பத்மாசனி, நடிகமணி வி.வி வைரமுத்து, நாடகவியலாளர் ஏ.ரி.பொன்னுத்துரை, காரை பண்டிதர் க. வைத்தீஸ்வரக் குருக்கள், சுவாமி ஞானப்பிரகாசர், பூந்தான் யோசேப்பு, முல்லை மணி, அண்ணவியார் எஸ்.தம்பிஐயா, யாழ்ப்பாணம் பதுறுதீன் புலவர் ஆகியோரைக் கருப் பொருளாகக் கொண்டதாக அமைய வேண்டும்.

பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பங்களை தலைவர் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் இல.28, குமாரசாமி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். (ஐ)

## பெருந்திருவிழா

காரைநகர், பெப். 8

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பரத் திருவிழாவும், 18 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை மாசி மகத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-250)



யாழ்ப்பாணத்திலிருந்து தேங்காய்களை ஏற்றிச் சென்ற வாகனம் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் வவுனியா, கனகராயன்குளத்தில் ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. கட்டுப்பாட்டை இழந்த வாகனம் முன்பாகப் பயணித்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகித் தடம் புரண்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)

# இணைபாட விதானங்களிலும் மாணவர்கள் ஈடுபட வேண்டும்

### சரவணபவன் எம்.பி. அறிவுரை

*யாழ்ப்பாணம், பெப்.8*

*தற்காலத்தில் மாணவர்கள் பாடசாலை முடிந்து வீடு திரும்பியவுடன் தனியார் கல்வி நிலையங்களுக்கு ஓடுகின்றனர். வெறும் பரீட்சையை இலக்கு வைத்த கல்வி முறையாகவே தற்போதைய கல்வி முறை மாற்றம் பெற்றுள்ளது. இந்த நிலமை மாற வேண்டும். மாணவர்கள் இணைப் பாட விதானங்க ளில் ஈடுபடுவதுவது அவசியம்.*



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் மற்றும் சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை இணைத் தலைவர்களான அதிபர் இராமசாமி சிறிதரன், அதிபர் நவரத்தினம் ரவிவண்ணன் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரணைதீவில் இருந்து அனலைதீவு வரை மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை முழுமையாக முன்னெடுத்து வருகின்றேன். சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்துக்கும், சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலைக்குமாக தலா 10 லட்சம் ரூபா வீதம் 20 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளேன்.

பாடசாலையில் உள்ள வளங்களை மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தற்போதைய கல்வி முறை பரீட்சையை இலக்கு வைத்த கல்வி முறையாக மாறியுள்ளது. பாடசாலை முடிந்தவுடனே தனியார் கல்வி நிலையத்துக்கு மாணவர்கள் ஓடுகின்றனர். அவர்களின் கிரகித்தல், தேடுதல், வாசித்தல், உய்த்தறிதல் போன்றன தற்போது குறைந்து வருகின்றன.

இந்தநிலைமை மாற வேண்டும். மாணவர்கள் இணைப்பாட விதானங்களில் அக்கறை செலுத்த வேண்டும். அவற்றில் பங்கெடுக்க வேண்டும்.

நான் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்துக்கு 1986ஆம் ஆண்டு நடந்த பரிசளிப்பு விழாவுக்கு முதன்மை விருந்தினராக வந்திருந்தேன். அன்றுமுதல் இன்றுவரை பாடசாலையினதும், பிரதேச மக்களினதும் முன்னேற்றத்தில் அக்கறையுடன் செயற்படுகின்றேன் - என்றார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சங்கானை சிவப்பிரகாச பழைய மாணவியும், நோர்வே வாழ் மருத்துவக் கலாநிதியுமான திருமதி கலாஜினி சசிதரன், வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன் ஆகியோரும், மதிப்புறு விருந்தினர்களாக சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா அதிபர் மு.அசோக்குமார், பழைய மாணவர் மு.சுகந்தன், பழைய மாணவன் கி.நிரஞ்சன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களையும் கேடயங்களையும் முதன்மை விருந்தினர் ஈ.சர

## ஆலய கோபுரத்துக்கு சரவணபவன் எம்.பி. நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் பெப். 8

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு இராஜகோபுரம் அமைக்க யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நிதி ஒதுக்கியுள்ளார்.

ஆலய பரிபாலன சபையினரின் கோரிக்கைக்கு அமைவாக முதற்கட்டமாக ரூபா 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த இராஜகோபுரம் அமைக்க ஒரு கோடி ரூபா மதிப்பிடப் பட்டது என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ-50)

## விபத்தில் ஒருவர் காயம்




சாவகச்சேரி, பெப். 8

உந்துருளி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார். வீதியுடன் குறுக்கே ஓடிய நாயுடன் உந்துருளி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து நுணாவில் கிழக்கில் ஏ-9 முதன்மைச் சாலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடந்துள்ளது.

தாவளை, இயற்றாலைச் சேர்ந்த சிறிகாந்தன் நிதர்சன்(வயது-23)என்பவரே காயமடைந்துள்ளார். அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

# சாவகச்சேரி வீதிகளை சீரமைக்கக் கோரிக்கை

கொடிகாமம், பெப். 8

சாவகச்சேரிப் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட எழுதுமட்டுவாழ் கரம்பகம் காயன்கடவை வீதி, எழுதுமட்டுவாழ் வடக்கு மருதங்குளம் வீதி, ஒல்லாந்தர் வீதி கொவ்வைக்கட்டி வீதி, எழுதுமட்டுவாழ் தெற்கு பனிக்கையடி வீதி வேதக்கால் மயான வீதி ஆகியவை மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன.

அவற்றைச் சீரமைத்து தார் வீதியாக மாற்றித் தர வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளரிடம் கோரியுள்ளார்.

இந்த வீதிகளை ஏராளமானோர் பயன்படுத்துகின்றனர்.

இவை மணல் வீதியாகவும் குன்றும் குழியுமாக வும் காணப்படுகின்றன. அந்த வீதிகளைச் சீரமைத்துத் தர வேண்டும். அதைவிட இந்த வீதிகளில் வீதி விளக்குகளும் பொறுத்தப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் ஏராளமான வீதிகள் சீரமைக்கப்படவேண்டியுள்ளன. அவை நிதி கிடைக்கும்போது சீரமைக்கப்படும் என்று பிரதேச சபையினர் தெரிவித்தனர். (த-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் இறங்குதுறையை துறைமுகமாக மாற்றுங்கள்

## கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 8

குருநகர் இறங்குதுறையைத் துறைமுகமாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் குருநகர் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநரிடமும் கோரிக்கை விடுத்ததுடன், மனுவும் கையளித்துள்ளனர்.



குருநகர் இறங்குதுறை ஆரம்ப காலத்தில் துறைமுகமாகப் பயன்படுத்தப்பட்டது. உள்நாட்டுப் போர் காரணமாக அந்தத் துறைமுகம் தகர்க்கப்பட்டுள்ளது. அதை அண்மித்து தற்போது இராணுவ முகாமும் அமைக்கப்பட்டுள்ளது. கடற்றொழிலாளர்கள் பல ஆண்டுகளாகப் பாதிப்பை - இழப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று பிரதேச மீனவர்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

குருநகர் இறங்குதுறையைத் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதால் பெரும் படகுகள், கப்பல்கள் வரும் சாத்தியங்கள் உருவாகும். அதனால் அதை அண்மித்த பகுதிகளும் அபிவிருத்தி அடையும். அங்குள்ள இராணுவ முகாமை அகற்றிக் குருநகர் துறைமுகத்தை அமைத்துத் தர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் முதலமைச்சர் அமைச்சு அலுவலகத்தில் நடத்தும் மக்கள் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கு வடக்கு ஆளுநரைச் சந்தித்த குருநகர் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடியதுடன், தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்த ஆளுநர், அந்தப் பகுதியில் முழுமையான ஆய்வுகளை மேற்கொண்ட பின்னரே அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார் என்று கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். அதேவேளை, குருநகர் இறங்குதுறையைத் துறைமுகமாக அபிவிருத்தி செய்வது தொடர்பில் கடந்த காலத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆய்வில் துறைமுகம் அபிவிருத்தி செய்ய அண்ணளவாக 2 ஆயிரம் மில்லியன் ரூபா தேவைப்படும் என்று கூறப்பட்டது.

அதன்பின்னர் எந்த வேலைகளும் இடம்பெறவில்லை என்று யாழ்ப்பாணக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (கு-8)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 8

துறைசார் நிபுணர்களின் பங்களிப்புடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகத்தின் வசதிப்படுத்தலில் உருவாக்கப்பட்ட 'வடக்கு மாகாண முதன்மைத் திட்டமொன்றுக்கான பொருளாதார விருத்திக் கட்டமைப்பு' தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண பொதுநூலக கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். (ஐ)

## வட கடல் நிறுவனத்துக்கு தலைவர் நியமனம்

காரைநகர், பெப் 8

வட கடல் நிறுவனத்தின் தலைவராக முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் மறைந்த தியாகராசா மகேஸ்வரனின் சகோதரர் தியாகராசா பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைமை அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதியால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக வட கடல் நிறுவனத்தின் தலைவராக தியாகராசா பரமேஸ்வரனே செயற்பட்டு வந்த நிலையில், அவர் மீண்டும் வடகடல் நிறுவனத்தின் தலைவராக நிய மிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த முதலாம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ஐ-250)

## ஆசிரியர் கலாசாலை பெறுபேறு வெளியீடு

அச்சுவேலி, பெப். 8

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 2015 - 2016 கல்வியாண்டு இறுதிப்பரீட்சைப் பெறுபேறுகள் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரிவால் வெளியிடப்பட்டுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய 324 பரீட்சார்த்திகளில் 322 பேர் சித்தியடைந்துள்ளனர். இரண்டு பேர் நூல சித்தியடைந்துள்ளனர். நான்கு பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றிய எல்லா பாடங்களிலும் 'ஏ' தர சித்தி பெற்று அதி சிறப்புத் தர நிலையில் சித்திய டைந்துள்ளனர் என்று கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் வீ. கருணலிங்கம் தெரிவித்தார்.

2015 - 2016 கல்வியாண்டு ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை பெறுபேறுகள் கல்வி அமைச்சின் இணையத் தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. அவை ஆசிரிய கலாசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இரண்டு வருட கால ஆசிரிய பயிற்சியின் பின்னர் நடைபெறும் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்றவர்கள் 'பயிற்றப்பட்ட ஆசிரியர்' என்ற சான்றிதழைப் பெற்றுக்கொள்வதுடன் இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 111 தர நிலையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு ஒய்வூதிய உரித்துடன் கூடிய சம்பளத் திட்டத்துடன் சேவையில் அமர்த்தப்படுகின்றமை வழமையாகும். (கு-11)

## பங்குனித் திங்களில் பரீட்சை வேண்டாம்

### இந்து இளைஞர் மன்றம் கோரிக்கை

சாவகச்சேரி, பெப்.8

பாடசாலைகளின் முதலாம் தவணைப் பரீட்சைகளை எதிர்வரும் பங்குனித் திங்கள்களில் நடத்தக் கூடாது என்று மட்டுவில் இந்து இளைஞர் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பாலான இந்து ஆலயங்களிலும் பங்குனித் திங்கள் பொங்கல் நிகழ்வு சிறப்பாக நடைபெறுவது வழமை. அந்தத் தினங்களில் ஒவ்வொரு குடும்பத்தினரும் நேர்த்திகளை நிறைவேற்றி வருகின்றனர். இந்த ஆண்டு பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவங்கள் மார்ச் 18, 25, ஏப்ரல் 1, 8 ஆகிய திகதிகளில் வருகின்றன.

பங்குனித் திங்கள் உற்சவம் நடைபெறும் திங்கட்கிழமைகளில் முதலாம் தவணைப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள் ஆலய உற்சவங்களில் கலந்துகொள்ள முடியாதுள்ளது. தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றச் சிரமப்படுகின்றனர்.

இந்தத் திங்கட்கிழமைகளில் தவணைப் பரீட்சை நடத்தாமல் அதற்கேற்ற வகையில் பரீட்சைகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பும்.

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நடைபெறும் தினங்களில் தவணைப் பரீட்சைகளை நடத்தாமல் அவற்றை வேறொரு தினத்தில் நடத்தும் வகையில் பரீட்சை நேர அட்டவணையைத் தயாரிப்புடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்து இளைஞர் மன்றத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (கு-9)

## சாரதிகளுக்குத் தண்டம் விதிப்பு

சாவகச்சேரி, பெப்.8

அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற இரு சாரதிகளுக்குச் சாவகச்சேரி நீதிமன்றம் தலா ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்தது.

கொடிகாமம் பொலிஸார் தாக்கல் செய்த வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. சாரதிகள் தம்மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கு நீதிமன்று தண்டம் விதித்தது.

அதேவேளை, மிருசுவிலில் அனுமதிப் பத்திரம் இன்றிக் கட்டுத் துப்பாக்கி வைத்திருந்த ஒருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## வெள்ளத்தால் சேதமடைந்த முன்பள்ளிக்கு புதிய பூங்கா

யாழ்ப்பாணம், பெப்.8

காக்கைதீவு, ஆனைக்கோட்டையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி சீரமைக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டதுடன், புதிதாக சிறுவர் பூங்காவும் திறக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் 50 மாணவர்களுக்குக் கற்றல் உபரணங்களும், 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும், இருவருக்குச் சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராய்ச்சியின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்றது. (ஐ)



## மாணவர்கள் இருவர் காயம்

சாவகச்சேரி, பெப்.8

இரு மாணவர்கள் காயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒருவர் நாய் கடித்த நிலையிலும், மற்றையவர் உந்துருளி விபத்தில் காயமடைந்த நிலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்று முன்தினம் தென்மராட்சியில் நடந்துள்ளது. சரசாலை மத்தியைச் சேர்ந்த 10 வயது மாணவன் பாடசாலை செல்லும் போது நாய் துரத்திக் கடித்ததில் காயமடைந்துள்ளார்.

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த 7 வயது மாணவன் பாடசாலை முடிந்து வீடு திரும்பிய போது உந்துருளி மோதியதில் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## மாணவர்களின் கற்றல் மேம்பாட்டுக்கு நிதியுதவி



சாவகச்சேரி, பெப் 8

யாழ்ப்பாணம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் கல்வி கற்கும் பொருளாதார நிலையில் பின் தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கற்றல் மேம்பாட்டு நிதி நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

தலா ஆயிரத்து 200 ரூபா வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்களான லண்டனில் வதியும் தர்மலிங்கம் தம்பதியினர் இந்த நிதியை வழங்கினர்.

இந்த மாணவர்கள் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்யும் வரை இந்த நிதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வவு. வடக்கில் திட்டமிட்டு நடக்கும் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்துக


## வட மாகாண சபை முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் மாவட்டச் செயலருக்கு கடிதம்

வவுனியா, பெப்.8

வவுனியா, வடக்கில் இடம்பெறும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று வவுனியா மாவட்டச் செயலரிடம் கோரிக்கைக் கடிதம் ஒன்று கையளிக்கப் பட்டுள்ளது. வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அந்தக் கடிதத்தைக் கையளித்துள்ளார்.







வவுனியா மாவட்டத்தின் ஒரு பகுதியான வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவு எல்லைக்குட்பட்ட கச்சல்சமளன்குளம் சீரமைக்கப்படுகின்றது என்றும், அந்தக் குளத்தின் கீழ் உள்ள காணிகள், அந்தப் பிரதேசத்துக்கு வெளியேயிருந்து கொண்டுவந்து குடியேற்றப்படும் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. அது தொடர்பில் வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார். அதன் பின்னரே மாவட்டச் செயலரிடம் இந்தக் கடிதத்தைக் கையளித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இந்த மாவட்டச் செயலர் என்ற வகையில் பின்வரும் விடயங்களை தங்களது கவனத்துக்குக் கொண்டு வரக் கடமைப்பட்டுள்ளேன்.

மேற்கூறப்பட்ட குளத்தைச் சீரமைப்பு செய்வதற்கான அனுமதி அநுராதபுரக் கமநலசேவைத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளதா?. வயல்களை அமைக்கும் நோக்கத்துக்காகக் காடுகள் அழிப்பதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதா?. அதேவேளை பூம்புகார் மற்றும் புதிய வேலர் சின்னக்குளம் போன்ற குளங்கள் அரச நிதியில் சீரமைப்புச் செய்யப்பட்டும் இன்றுவரை அந்தக் குளங்களுக்குக் கீழ்வரும் காணிகளில் பயிற்செய்கை மேற்கொள்ள வனவளத்திணைக்களம் அனுமதி வழங்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

மேற்கூறப்பட்ட காணிப் பகிர்ந்தளிப்பானது வவுனியா வடக்கு பிரதேச செயலரால் எந்த அடிப்படையில் அல்லது பயனாளர் தெரிவு எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது?

தொல்பொருள் திணைக்களமானது தொல்பொருள் சின்னங்களை அவை உள்ளபடி பாதுகாப்பதற்கு மேலதிகமாக எந்த அடிப்படையில் ஒரு மதம் சார்ந்த வழிபாட்டு உருவச் சிலைகளை அங்கு வைத்துள்ளது? அந்தச் சிலைகள் அவர்களால் வைக்கப்படவில்லையாயின் சிலை வைப்பதற்கும் அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கும் அனுமதியளித்தது யார்?.

மேற்கூறிய சட்டத்துக்குப் பிறழ்வான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவற்கு தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகின்றேன்.

இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு எமது மாவட்டத்தில் மூவின மக்களும் சமமாக வாழுவதற்கும் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் ஆவன செய்யுமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். என்றுள்ளது.

வவுனியா வடக்கில் உள்ள எல்லைக் கிராமங்கள் திட்டமிட்டு தொல்பொருள் திணைக்களத்தாலும், மகாவலி அதிகார சபையாலும் அபகரிக்கப்படுகிறன என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இந்தத் திணைக்களங்கள் அபகரிக்கும் காணிகளில், சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஊற்றுக்குளம் மற்றும் கச்சல்சமளன்குளத்துக்கு இடைப்பட்ட காட்டுப்பிரதேசத்தில் பிக்கு ஒருவரும் சிலரும் தங்கியுள்ளனர் என்றும், அங்கு சிறுசிறு கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. (எ-21)

# சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தமிழர் மரபுரிமைப் பேரவை வலியுறுத்து

முல்லைத்தீவு, பெப்.8

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் குடிப் பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன் பல சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. தமிழர்களின் மரபுரிமையைச் சிதைக்கும் நோக்குடன் திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளுக்கும் கொழும்பு அரச நிறுவனங்களின் முழுமையான அனுசரணையுடன் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு தமிழர் மரபுரிமைப் பேரவை குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பேரவை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவின் ஊற்றுக்குளம் கிராமத்தின் அடர்ந்த காட்டுப் பகுதியில் அவசர அவசரமாகப் புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டு அதனைச் சூழவுள்ள பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றமொன்று நிறுவப்படுவதற்கான பூர்வாங்க வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

கொழும்பு அரசின் கமநல சேவைத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் இந்தத் திட்டத்துக்கு முழு அனுசரணை வழங்கி வருகின்றன. வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இந்தப் பிரதேசத்தில் அநுராதபுர மாவட்ட கமத்தொழில் திணைக்களம் வேலைத்திட்டங்களை மேற்கொள்வது இந்தச் செயற்பாட்டின் கபட நோக்கத்தை வெளிக்காட்டுகின்றது.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக இந்தப் பிரதேச மக்கள் அரசியல், பொருளாதார ரீதியில் பலவீனப்படுத்தப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களை துப்பரவு செய்யத் தடைபோடும் வனவளப்பாதுகாப்புத் திணைக்களம் சிங்களக் குடியேற்றங்களுக்குகாடுகள் அழிக்கப்படும் செயற்பாடுகளுக்கு முழுமையான அனுசரணை வழங்குகின்றது.

இந்தக் குடியேற்றத்துக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் கடந்த சில காலங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அநுராதபுரம் கமத்தொழில் திணைக்களத்தினூடாக இந்தப் பகுதியில் இருந்த கச்சல் சம்மளன்குளம் பிரமாண்டமாக சீரமைக்கப்பட்டபோது இந்தப் பகுதியில் குடியேற்றம் ஒன்று நடைபெறப்போவதை உணர்ந்து தமிழ் மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறப்பினர்களுக்கும் நேரடியாக தெரியப்படுத்தி இருந்தும் இவ் விடயம் கண்டு கொள்ளப்படவில்லை என்பது வேதனைக்குரியது.

இன நல்லிணக்கத்தை மிக மோசமாகப் பாதிக்கும் பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளையும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்க ளையும் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகின்றோம் என்றுள்ளது. (எ)

> ஊற்றுக்குளம் கிராமத்தின் அடர்ந்த காட்டுப் பகுதியில் அவசர அவசரமாகப் புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டு அதனைச் சூழவுள்ள பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றமொன்று நிறுவப் படுவதற்கான பூர்வாங்க வேலைகள் இடம்பெற்று வருகின்றன.



# நடைபாதை வியாபாரத்தை தடை செய்யக் கோரிக்கை

வவுனியா, பெப். 8

வவுனியா இலுப்பையடி தினச்சந்தைக்கு முன்பாகவுள்ள சந்தைச் சுற்றுவட்ட வீதியில் இரு பகுதியிலும் மரக்கறி வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால் அந்தப் பகுதியில் போக்குவரத்துச் செய்வதில் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நடைபாதையில் மக்களுக்கு இடையூறு ஏற்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டு அந்தப் பகுதியில் வியாபாரம் மேற்கொள்பவர்களுக்கு எதிராக நகரசபை அண்மையில் நடவடிக்கை எடுத்திருந்தது.

அதையடுத்துச் சில தினங்களாக அவை கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. தற்போது பலர் நடைபாதையில் மரக்கறிகளைச் சுகாதாரத்துக்குக் கேடான முறையில் வைத்து விற்கின்றனர்.

போக்குவரத்து மீளவும் தடைப்படுகிறது. அதற்கு நகர சபையினர் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தற்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (து)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மருத்துவமனைக்கு புதிய நிறப்பூச்சு

மன்னார், பெப்.8

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு மன்னார் முருங்கன் மருத்துவமனைக்கு நிறப்பூச்சுப் பூசப்பட்டதுடன், சுற்றுச்சூழல் முழுவதும் இராணுவத்தினரால் துப்புரவு செய்யப்பட்டன.

தள்ளாடி இராணுவத் தளபதி பிரிகேடியர் ரவி கேரத் தலைமையில் 250 இராணுவத்தினர் இந்தப் பணியில் ஈடுபட்டனர்.

நிகழ்வில் முருங்கன் மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி ஏ.திலீபன், நானாட்டான் பிரதேசசபை உறுப்பினர் ஏ.கே.ஆர்.றொஜன், முருங்கன் மருத்துவமனை நலன்புரிச்சங்கம், கிராம அபிவிருத்தி சங்கம் ஊழியர்களும் கலந்து கொண்டனர். (ஜ-213)



# வறுமையை ஒழிப்பதற்கு இணைந்து உழைப்போம்

### முல்லை. மாவட்டச் செயலர் அழைப்பு

முல்லைத்தீவு, பெப். 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வறுமையை ஒழிக்க வேண்டுமானால், அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது மிக முக்கியம். இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.



இலங்கையின் 71ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன.

அதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை நான்கு இனங்களைக் கொண்ட நாடு. அவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முல்லைத்தீவு மாவட்டமும் மூன்று இனங்களைக் கொண்ட மாவட்டமாகவும், நான்கு மதங்களைக் கடைப்பிடிக்கின்ற ஒரு மாவட்டமாக காணப்படுகின்றது.

தரப்பட்ட கடமைகளை உணர்ந்து இன, மத வேறுபாடுகள் இன்றிச் செயற்பட்டு மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படுவது அவசியமானது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை முன்னெடுத்துச் செல்வதன் ஊடாக மாவட்டத்தின் அபிவிருத்தியை நிலைநிறுத்த அனைவரும் ஒருங்கிணைவோம் என்ற தீர்மானத்தை நாம் இன்று எடுத்துக் கொள்வோம்.

எமது மாவட்டத்தில் மீள்குடியமர்வு நடந்து 10 ஆண்டுகள் கடந்துள்ளன. வறுமையில் இரண்டாவது மாவட்டமாக உள்ளோம். எமது மாவட்டத்தில் இருந்து வறுமையை ஒழிக்க வேண்டுமானால் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

பொருளாதார ரீதியில் முன்னேற்றம் காண்கின்ற மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தை மாற்ற வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும் - என்றார். (ஐ-ரி3)



## தறித்து வீழ்த்திய மரத்தால் போக்குவரத்து தடை!

வவுனியா, பெப்.8

முதன்மை வீதியில் பெரும் முதிரை மரமொன்று வெட்டி வீழ்த்தப்பட்டதால் போக்குவரத்துக்கு பாதிக்கப்பட்டது.

வவுனியா, பூவரசன்குளம் - இலுப்பைக்குளம் வீதியில் வேலங்குளத்துக்கு அடுத்துள்ள சிவா நகர்ப் பகுதியில்கடந்தசெவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாதோரால் இந்த மரம் வெட்டிவீழ்த்தப்பட்டுள்ளது.

முதன்மை வீதியினூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன் பாடசாலைமாணவர்கள்அரசஅலுவலர்கள்பெரும்சிரமங்களுக்குமுகம்கொடுக்கவேண்டியேற்பட்டது.

வானூர்திப்படையினர்மற்றும்இராணுவத்தினர் இணைந்து வீதிக்கு குறுக்காக வீழ்ந்திருந்த மரத்தை வெட்டி அகற்றி, வீதிப் போக்குவரத்தைச்சீர்செய்தனர். (ஐ-110)

## மந்த கதியில் விசாரணைகள் என அடிப்படை உரிமை மீறல் வழக்கு

### உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுப்பு

முல்லைத்தீவு, பெப். 8

முல்லைத்தீவில் காணி எல்லைப் பிரச்சினை தொடர்பாக நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை என்று தெரிவித்து உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதைப் பரிசீலித்த உயர்நீதிமன்று, எதிராளிகள் அறிக்கை சமர்ப்பிக்க காலஅவகாசம் வழங்கி வழக்கை எதிர்வரும் மே 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தில் காணி எல்லைப் பிரச்சினை காரணமாக கடந்த மே 4ஆம் திகதி இருவர் மீது கத்தியால் வெட்டித் தாக்குதல் நடத்தப்பட்டது. புதுக்குடியிருப்புப் பொலிஸாரும் மருத்துவமனை மருத்துவரும் இணைந்து அதுபற்றிய தகவல்களை மறைக்கும் வகையில் உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளிப்படுத்தியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் முறையிடப்பட்டது.

பாதிக்கப்பட்ட நபரான பெனடிட் சிறி என்பவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் கடந்த மே 8ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை இணக்க சபையில் விசாரித்து கடந்த ஒக்ரோபர் 8ஆம் திகதி நீதிமன்றில் அறிக்கையிடுமாறு பணிக்கப்பட்டிருந்தது. அது பற்றிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் இன்றித் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்று தெரிவித்தே உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட நபர்களின் அடிப்படை மனிதஉரிமை மீறப்பட்ட மைக்கு தீர்வு கிடைக்காத நிலையில் கொழும்பில் உள்ள உயர்நீதி மன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள்.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மூவர் முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கு தொடுநர்களின் சட்டத்தரணிகளான தசநாயக்க மற்றும் நிவந்த கத்தரசிங்க ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

எதிராளிகள் 9 பேரில், புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலைய அறிக்கை மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வழக்கின் விசாரணை எதிர்வரும் மே16ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதற்கிடையில் எதிராளிகள் தத்தமது அறிக்கைகளை உயர்நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்று கட்டளையிட்டுள்ளது. இதுதவிர, "தமது விசாரணைகளை நிறைவு செய்து விரைவில் நீதிமன்றுக்கு அறிக்கையிடுவோம்" என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் நேற்றுத் தெரிவித்தார். (த-ரி3)

> “ காணி எல்லைப் பிரச்சினை காரணமாக கடந்த மே 4ஆம் திகதி இருவர் மீது கத்தியால் வெட்டித் தாக்குதல் நடத்தப்பட்டது. புதுக்குடியிருப்புப் பொலிஸாரும் மருத்துவமனை மருத்துவரும் இணைந்து அதுபற்றிய தகவல்களை மறைக்கும் வகையில் உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.



## பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூரை விரிப்பு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

மன்னாரில் அண்மைய நாள்களில் பெய்த கடும் மழையால் பாதிக்கப்பட்ட மன்னார், கீரிக் கிராமத்தைச் சேர்ந்த சில குடும்பங்களுக்கு கூரை விரிப்புக்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டுள்ளன. மன்னாரில் பெய்த கடும் மழையால் தற்காலிக வீடுகளில் வசித்து வந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

தமக்கு கூரை விரிப்புக் களை பெற்றுத் தர வேண்டும் என்று அவர்கள் மன்னார் பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.ரி.மோகன்ராஜிடம் கோரிக்கை விடுத்தனர். தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து ஒரு தொகுதி கூரை விரிப்புகளை அவசர உதவியாக தனது சொந்த நிதியில் இருந்து பெற்றுக்கொடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. மன்னார் பிரதேச சபை உறுப்பினர் ஏ.ரி.மோகன்ராஜ் அவற்றை மக்களிடம் கையளித்துள்ளார். (ஐ-56)

## மது விற்பனை குற்றச்சாட்டில் ஒருவர் கைது

மல்லாவி, பெப். 8

250 மில்லி லீற்றருடைய 78 மதுப் போத்தல்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாவி பாலிநகரில் அவற்றை விற்பனை செய்துகொண்டிருந்த போது சந்தேநகர் கைது செய்யப்பட்டார் என்று மல்லாவிப் பொலிஸார் தெரிவித்தனர். (கு-74)



## வீடுகள், பாடசாலைகளுக்கு நடப்பட்டன அடிக்கல்கள்

கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சியில் வீடமைப்பு அமைச்சால் அமைக்கப்படவுள்ள 120க்கு மேற்பட்ட வீடுகளுக்கும், சமயக் கல்விக் கட்டடங்களுக்கும், பூநகரியில் அமைக்கப்படவுள்ள அறநெறிப் பாடசாலைக்கும் கடந்த திங்கட்கிழமை அடிக்கற்கள் நடப்பட்டன.

வீடமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் 120 வீடுகள் கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ளன. அதேபோல் தலா 4 மில்லியன் ரூபா செல வில் இரண்டு சமயக் கல்வி கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன. பூநகரி நாச்சிக்குடா கரடிக்குன்றில் 4 மில்லியன் ரூபா செலவில் அறநெறிப் பாடசாலையொன்று அமைக்கப்படவுள்ளது. இவற்றுக்கான அடிக்கற்களே நடப்பட்டன.



கிளிநொச்சி புனித திரேசா ஆலயத்தில் பகல் 12 மணியளவில் திருமறை கல்விக்கான கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், அமைச்சின் அதிகாரிகள், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் பங்குத் தந்தையர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அறநெறிப் பாடசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுடன், பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிரு ஸ்னேந்திரன், பூநகரி பிரதேச சபை உப தவிசாளர் சி.சிறிரஞ்சன், குமுழமுனை பங்குத்தந்தை சுமன் அடிகளார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-6,204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்னார் மருத்துவமனைகளின் தேவைகள் நிறைவேற்றப்படும்

### சுகாதார இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 8

மன்னார் மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், மேலதிக தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சருக்கும், மன்னார் மாவட்ட மருத்துவ அதிகாரிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

இந்தச் சந்திப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.என் ஹில்ரோய் பீரிஸ், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைப் பணிப்பாளர் ஒஸ்மன் டேனி, வடக்கு மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு 5 கோடி ரூபா பெறுமதியான சி.ரி. ஸ்கானர் இயந்திரம், தேவையான கருவிகள் மற்றும் சி.ரி. ஸ்கானருக்கென்று ஒரு கோடி ரூபா செலவில் கட்டடம் ஆகியவற்றை வழங்குவதற்கு பைசல் காசிம் உறுதியளித்தார் என்று கூறப்படுகின்றது. மருத்துவமனையில் மருத்துவ ஆலோசகர்களின் எண்ணிக்கையை 23 இல் இருந்து 34 ஆக அதிகரிப்பதற்கும், மகப்பேற்று மருத்துவ நிபுணர்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


சிலாவத்துறை மருத்துவமனைக்கு மருத்துவர், தாதியர் மற்றும் மருத்துவ ஆலோசகர் விடுதியை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரச கட்டடத் திணைக்கள அதிகாரிகள் விரைவில் அங்கு சென்று இது தொடர்பில் மேலதிக செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளனர்.


நானாட்டான், அடம்பன் உள்ளிட்ட மேலும் பல மருத்துவமனைகளில் நிலவும் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் சந்திப்பின்போது தெரிவித்துள்ளார். (து)

# கிளிநொச்சியில் ஓரிரவில் 9 கடைகளில் கைவரிசை

கிளிநொச்சி, பெப்.8

ஒரே இடத்தில், ஒரே இரவில் 9 கடைகள் உடைக்கப்பட்டு, பொருள்கள், பணம் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சியில் நடந்துள்ளது.





கிளிநொச்சி பொதுச் சந்தையில் அமைக்கப்பட்ட தற்காலிகக் கடைத் தொகுதிகளில் உள்ள கடைகளே இவ்வாறு உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் கடைகளின் உரிமையாளர்கள் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடைகளில் வர்த்தக நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு முதல்நாள் இரவு 9 மணிக்கு பின்னர் கடைகள் பூட்டப்பட்டுள்ளன. மறுநாள் காலையில் வந்து பார்த்தபோதே கடைகள் உடைக்கப்பட்டிருந்தன என்கின்றனர் வர்த்தகர்கள். உடைக்கப்பட்ட கடைகளில் ஒரு கடையில் பணம் காணாமல் போயுள்ளது. எவ்வளவு என்பது பற்றிய விவரம் உரிமையாளரால் கணக்கிடப்படவில்லை. அழகு சாதனப் பொருள்கள், காலணிகள், போன்றன சில கடைகளில் திருடப்பட்டுள்ளன. ஒரு சில கடைகள் உடைக்கப்பட்ட நிலையில் விடப்பட்டுள்ளன.

கடைகளில் மறைகாணிகள் (சி.சி.ரி.வி.) இல்லை. சந்தையின் முன்பகுதியிலேயே உள்ளது என்று தெரிவித்த பொலிஸார், விசாரணைகள் இடம்பெறுகின்றன விசாரணைகளின் பின்னரே மேலதிக தகவல்கள் தெரியவரும் என்று தெரிவித்தனர். (எ-21,6)

## விசர் நாய்க்கடி மருந்துகள் போதியளவு கையிருப்பில்

### கிளி. சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப். 8

சில வாரங்களுக்கு முன்னர் விசர் நாய்க் கடி மருந்துக்கு நாடளாவிய ரீதியில் தட்டுப்பாடு காணப்பட்டபோதும், தற்போது அவை போதுமான அளவு கையிருப்பில் உள்ளன என்று கிளிநொச்சி மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சி.குமாரவேல் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் விசர் நாய்க் கடி மருந்துக்குத் தட்டுப்பாடு காணப்பட்டது. நாடளாவிய ரீதியில் இந்த மருந்து பற்றாக்குறையாகக் காணப்பட்டது. எனினும் அப்போது எமது மாவட்டத்தில் குறிப்பிட்ட அளவு மருந்துகள் இருந்தன. தற்போது அந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. கடந்த வாரம் எமக்குப் போதிய அளவு மருந்துகள் கிடைத்துள்ளன. அதனால் எந்தத் தடங்கலும் இன்றி மக்களுக்குச் சேவைகள் வழங்கப்படும். - என்றார். (து-6)



வவுனியா, சைவப் பிரகாசா மகளிர் வித்தியாலய மாணவிகளுக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான பயிற்சிகள் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் பயிற்சிகளை வழங்கினர். (ஐ-110)

## விளையாட்டு உபகரணம் கையளிப்பு

முல்லைத்தீவு, பெப்.8

கரைதுறைப்பற்று பிரதேச இளைஞர் சம்மேளனம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனம் ஆகியவற்றுக்கு வடக்கு மகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

2018 ஆம் ஆண்டுக்கான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் இருந்தே அவை வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கரைதுறைப்பற்றுப் பிரதேச இளைஞர் சம்மேளனத்துக்கு 40 ஆயிரம் ரூபா பெறுமதியில் கால்பந்து மற்றும் சீருடைகளும், முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனத்துக்கு 40 ஆயிரம் ரூபா பெறுமதியில் கூடைப் பந்தாட்டத்துக்குரிய சீருடைகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கரைதுறைப்பற்றுப் பிரதேச இளைஞர் சம்மேளன தலைவர் மு.சொகைல், செயலர் ச.சதீஸ், முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளன உபசெயலர் வை.கீர்த்திகன், முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அதிகாரி ந.முகுந்தன், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)



## மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டுக்கு குழுக்கள்



நானாட்டான், பெப்.8

நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்காக உருவாக்கப்பட்ட சுடரொளி அமைப்பின் முதலாவது கூட்டம் பிரதேச செயலகத்தில் கடந்த வெவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது.

பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் தேவைகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக ஆராயப்பட்டன. அவர்களுக்கான மாதாந்த உதவிப் பணம் வழங்கல், ஏனைய கொடுப்பனவுகள் வழங்கல், அவர்களது வாழ்வாதார நடவடிக்கைகளைக் கொண்டு செல்லல் என்பவற்றுக்கான சிறு குழுக்கள் அமைக்கப்பட்டன.

சுயதொழில் உருவாக்கல் குழு, சமூக நல நோன்புக் குழு, மாற்றுத் திறனாளிகளது குழந்தைகளின் கல்வி மேம்பாட்டுக் குழு போன்றவையும் தெரிவு செய்யப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் மூலம் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம், பொருளாதாரம் என்பனவற்றை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்று நானாட்டான் பிரதேசசெயலர் மா.சிறிஸ்கந்தகுமார் தெரிவித்தார். (ஐ-213)

## மன்னார், முல்லைக்கு தீயணைப்புச் சேவை

### இருவாரங்களில் வரும் என தலைமை அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், பெப். 8

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு எதிர்வரும் இரண்டு வாரங்களில் தீ அணைப்பு சேவை வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இரு மாவட்டங்களிலும் தற்போதுவரை தீ அணைப்பு சேவை வசதி கிடையாது. இந்த மாவட்டங்களில் தீ ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. அதனால் மன்னார் நகர சபைக்கும், கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கும் தீ அணைப்புச் சேவை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று தலைமை அமைச்சரிடம் கோரினேன். நேற்றுமுன்தினம் அது தொடர்பாகக் கோரிக்கை விடுத்தேன்.

அந்த இரு மாவட்டங்களின் பயன்பாட்டுக்காக இரண்டு வார பணி நாள்களுக்குள் தீ அணைப்பு சேவை வசதிகள் செய்து தரப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார் - என்றார். (து-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரே தமிழரின் சுதந்திரம் பறிபோனது

## இராணுவத் தளபதி பொய்யுரைக்கின்றார் என்று கிளிநொச்சி குடிமக்கள் குழு சாடல்

**கிளிநொச்சி, பெப். 8**

**தமிழ் மக்கள் தாங்கள் அனுபவித்த சுதந்திரத்தையும் மதிப்பையும் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் படிப்படியாக இழந்து வருகின்றனர். இதுதான் உண்மை. இவ்வாறு கிளிநொச்சி மாவட்டக் குடிமக்கள் குழு தெரிவித்துள்ளது.**

யாழ்ப்பாணத்தில் இராணுவம் அமைதிப்படையாக வந்த பின்னர், தமிழ் மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றார்கள் என்று இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டிருந்தார். அவரது அறிக்கை தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே கிளிநொச்சி மாவட்டக் குடிமக்கள் குழு மேற்கண்டவாறு கூறியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இராணுவத் தளபதியின் கருத்து யதார்த்தமற்ற உண்மைக்குப் புறம்பான மிகவும் வர்ணிக்கப்பட்டதொன்றாகும். தொடர்ந்தும் தமிழர் தாயகத்தில் இராணுவத்தை நிலைநிறுத்துவதற்கான வெளிப்பாட்டின் செய்தியாகும். 2009 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட போர்ச் சூழலிலும் மக்களின் சுதந்திரம் பறிக்கப்படவில்லை. இவர் குறிப்பிட்ட முப்பது வருட காலத்தில் தமிழ் மக்களின் வாழ்வு சிறப்புற்றிருந்தது. அவர்களது சுதந்திரம் மதிப்பு என்பன பாதுகாக்கப்பட்டிருந்தன. தமிழ் மக்கள்தாங்கள் அனுபவித்த சுதந்திரத்தையும் மதிப்பையும் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் படிப்படியாக இழந்து வருகின்றனர் என்பதே உண்மையாகும்.

தமது தாயகப் பூமியில் தமது குடியியல் சுதந்திரம், அரசியல் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், சமுதாயச் சுதந்திரம், தேசியச் சுதந்திரம் மற்றும் இயற்கைச் சுதந்திரம் என்பன பறிக்கப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்ட ஓர் இனமாக தற்போது வாழ்ந்து வருகின்றனர். இதில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக இராணுவம் உள்ளது.

போர் முடிவுற்று பத்தாண்டுகள் கடந்தும் தமது பூர்வீக நிலத்தில் தமிழ் மக்கள் வாழமுடியாத நிலையில் இராணுவத்தினர் அவர்களது நிலங்களை ஆக்கிரமித்துள்ளனர் என்பதே உண்மையாகும்.

போருக்குப் பிற்பாடு வெள்ளைவான் கடத்தல்களும் காணாமல் ஆக்கப்படுதலும் கொலைகளும் பாலியல் வன்கொடுமைகளும் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டதனை தமிழ் மக்கள் மறக்கவில்லை. தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்பின் வடிவமாக விகாரைகளை இராணுவம் அமைத்ததனை தமிழ் மக்கள் மறக்கவில்லை என்றுள்ளது. (ஓ.5.35)

## இலங்கை ராணுவத்தினரால் பல்குழல் பீரங்கி தயாரிப்பு

*20 கி.மீ. தூர இலக்கை தாக்குமாம்*

கொழும்பு, பெப். 8

இலங்கை இராணுவத்தின், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தால் 10 குழல்களைக் கொண்ட பல்குழல் பீரங்கி உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பல்குழல் பீரங்கி காலிமுகத்திடலில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற சுதந்திர தின இராணுவ அணிவகுப்பில் முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இது 20 கிலோமீற்றர் வரையுள்ள இலக்குகளைத் தாக்கும். அதற்கான குண்டுகளும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன என்று ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பிரிகேடியர் திரான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தைச் சேர்ந்த ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் நிபுணர்கள் குழுவும், உள்ளூர் பல்கலைக்கழகங்களும், கலாநிதி சந்தன பெரேராவுடன் இணைந்து, 7 மில்லியன் ரூபா செலவில் பல்குழல் பீரங்கி தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பல்குழல் பீரங்கி அனைத்துலக தரத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட குண்டுகளைக் கொண்டும் இந்தப் பீரங்கியால் சுட முடியும்.

10 மில்லியன் ரூபா செலவில், 40 குழல்களைக் கொண்ட பல்குழல் பீரங்கிகளையும் தயாரிக்கும் ஆற்றல் எம்மிடம் உள்ளது. முதற்கட்டமாக, 20 குழல்களைக் கொண்ட பல்குழல் பீரங்கியைத் தயாரிப்பதில் தான் கவனம் செலுத்துகிறோம்.

சுடுகின்ற தூரம் பற்றிய திருத்தங்களைச் செய்த பின்னர், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பல்குழல் பீரங்கி, இலங்கை இராணுவத்தின் பயிற்சிக்காக கையளிக்கப்படும். இதன்சுடுதொலைவை ஒரு கிலோ மீற்றராகக் குறைக்க வேண்டியுள்ளது. பயிற்சித் தேவைகளுக்காக, 20 கிலோ மீற்றர் இலக்கைச் சுட முடியாது. குறுந்தூர ஏவுகணை ஒன்றையும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம் தயாரித்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (த)

## நீர் வெறுப்பு நோய் குறித்த பத்திரத்தை மீளப் பெறுக


இலங்கையில் நீர்வெறுப்பு நோய் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று இலங்கை அரச கால்நடை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் மருத்துவர் ச.சுகிர்தன் அனுப்பிய ஊடக அறிக்கையில் உள்ளதாவது;

கடந்த வருடம் மே மாதத்திலிருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் மிகவும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்ற நீர்வெறுப்பு நோயைத் (விசர்நாய்கடி) தடைசெய்யும் நிகழ்ச்சித் திட்டத்தை மீளவும் சுகாதார அமைச்சுக்கு உள்ளீர்ப்பதற்காகச் சுகாதார அமைச்சு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டமானது கடந்த 65 வருடங்களாகச் சுகாதார அமைச்சால் செயற்படுத்தப்பட்டுத் தோல்வியடைந்திருந்தது. அதைக் கருத்தில் கொண்டு அரச தலைவரின் பணிப்புரையின் பேரில் 2018 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் துறைசார் நிபுணர்களைக் கொண்டு இயங்கும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திடம் அந்தப் பணி வழங்கப்பட்டது.

சுகாதார அமைச்சு சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தை மீளப்பெறாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி வரும் என்றுள்ளது. (த)




நன்றி : நாமல் அமரசிங்க

## சம்பந்தன் என்ன கூறுவார் என டக்ளஸ்க்கு கவலை!

யாழ்ப்பாணம், பெப். 8

இந்த வருடம் சுதந்திர தினத்துக்கு முன்னர் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டு தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வுபெற்றுக்கொடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார். 71ஆவது சுதந்திர தினமும்நிறைவடைந்துள்ள நிலையில் அடுத்ததாக சம்பந்தன் எதைக் கூறப்போகின்றார்?

இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார் என்று அவரது ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது;

2016ஆம் ஆண்டு பொங்கலுக்குள் தீர்வு கிடைக்கும் என்றார். பின்னர் அதே வருடம் தீபாவளிக்குத் தீர்வு கிடைக்கும் என்றார். இப்படி இறுதியாக 2019ஆம் ஆண்டு சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு கிடைக்கும் என்று கூறியிருந்தார், எதுவும் வரவில்லை.

தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், பண்டிகைகளுக்குப் பண்டிகை "தீர்வு வரும்" என்று காலத்தை வீணடித்துக் கொண்டு, புதிய அரசமைப்பை வரைவதிலும், அதை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதிலும் அரசுக்கு ஆதரவளிப்பதன் ஊடாகத் தீர்வுக்குத் தடையா[illegible] என்றுள்ளது. (த)

## யோவுன்புரய நிகழ்ச்சித் திட்டம் பற்றி ஆராய்வு

கொழும்பு, பெப். 8

இளையோருக்கு தேசிய நல்லிணக்கம் தொடர்பாக அறிவூட்டல் மற்றும் கருத்துப்பரிமாறல், இளைஞர் அபிவிருத்தி தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள 'யோவுன்புரய' நிகழ்ச்சித் திட்டம் வீரவில தேசிய கால்நடை வளர்ப்பு அபிவிருத்திச்சபையின் பண்ணை வளாகத்தில் எதிர்வரும் மார்ச் 27ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரையில் நடைபெறும். அது பற்றிய கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் சாகல ரத்னாயக்க தலைமையில் சந்திப்பு தலைமைஅமைச்சர்அலுவலகத்தில நேற்று முன்தினம் நடைபெற்றது. (த)

## சர்ச்சையை உருவாக்கிய நாடாளுமன்றின் "லிப்ட்"

கொழும்பு, பெப். 8

நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்தன, பந்துல குணவர்தன , தயாசிறி ஜயசேகர , சந்திம வீரக்கொடி உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மின்தூக்கியில் (லிப்ட்டில்) சுமார் 25 நிமிடம் சிக்கிக் கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அது தொடர்பாகச் சபையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய தினேஷ், மின்தூக்கி ஒன்றை ஒழுங்காகச்செய்ய முடியாத நாடாளுமன்றமாக இது மாறிவிட்டதா என்று கேள்வியெழுப்பினார்.

உயிர்களை எடுக்கும் சதியாக இது இருக்கலாம் என்பதால் சபாநாயகர் இதனூடாக செல்லும்போது கவனமாக இருக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பதிலளித்த சபாநாயகர் "நேரம் வந்தால் போக வேண்டி வரும்" என்று புன்னகையுடன் பதிலளித்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த விமல் வீரவன்ச, அரசதலைவர் வேட்பாளராக வரப்போகிறார் என்று சொல்லப்படும் சபாநாயகர் இதில் கவனமாகச் செல்ல வேண்டும் என்று கூறினார்.

அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, இது பாரதூரமான பிரச்சினை என்றும் இது குறித்துக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

"கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் இந்த மின்தூக்கியில் சிக்கியது பெரும் ஆபத்து" என்று பந்துல குணவர்தன சுட்டிக் காட்டினார்.

சந்திரசிறி கஜதீர , ரவி கருணாநாயக்க, சந்திம வீரக்கொடி , தயாசிறி ஜயசேகர , சரத் பொன்சேகா ,ரஞ்சித் சொய்சா , நளின் பண்டார , முஜிபுர் ரஹ்மான் , ஆசுமாரசிங்க ஆகியோரும் இந்த விடயம் குறித்துக் கருத்துத் தெரிவித்தனர்.

இது குறித்து உடனடியாகக் கவனம் செலுத்தப்படுமென்று சபாநாயகர் தெரிவித்தார்.

மின்தூக்கி இடையில் இறுகி நின்றதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயத்தில் உறைந்துள்ளனர். சிலர் இறப்பிலிருந்து காப்பாற்றும் வேதமந்திரங்களை ஓதத் தொடங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. இதுமட்டுமன்றி, அதற்குள் சிக்கியவர்களில் ஒருவரான பந்துல குணவர்தன ஒரு ஆசிரியர். அவர் "காற்றோட்டம் இல்லை... எல்லோரும் சுவாசிப்பதைக் குறையுங்கள்..மூச்சைக் கட்டுப்படுத்துங்கள்..." என்று ஆலோசனை கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. மின்தூக்கி இயங்காததைக் கண்டு வெளியில் இருந்தவர்கள் அது குறித்து தகவல் வழங்கியதையடுத்து பொறியியலாளர்கள் விரைந்து அவர்களை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இனப் படுகொலையை சுயாதீனமாக விசாரியுங்கள்

## ஸ்பெயினின் பிராந்தியமான கட்டலோனியா வலியுறுத்துகிறது

கொழும்பு, பெப். 8

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை தொடர்பில் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சுயாட்சி அதிகாரம் மிக்கதாக தமிழ் மக்களுக்கான தேசம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஸ்பெயினின் பிராந்திய அரச கட்டமைப்புக்களின் ஒன்றான கட்டலோனியா வலியுறுத்தியுள்ளது. தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதற்கு இலங்கை அரசு தயங்கக் கூடாது. அரசியல் கைதிகளை இலங்கை அரசு தாமதமின்றி விடுதலை செய்யவேண்டும் என்றும் கட்டலோனியா வலியுறுத்தியுள்ளது. இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க சிறப்புத் தூதுவரை ஐக்கிய நாடுகள் சபை நியமிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளது. இந்தத் தீர்மானங்கள் அடங்கிய தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பவும் பார்சிலோனா நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுகள் நடைபெறவுள்ளன. அதில் இலங்கை தொடர்பாகவும் விவாதிக்கப்படவுள்ளது. இந்த நிலையில் கட்டலோனியா தனது தீர்மானங்களை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளது. (த)

“

துறைமுகத்தில் இயங்கும் வணிக மாபியாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் ஆற்றல், சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் பி.எம்.எஸ். சார்ள்ஸுக்கு உள்ளது.



# சார்ள்ஸ் ‘இரும்புப்பெண்’ மங்கள சமரவீர புகழ்ச்சி!

கொழும்பு, பெப். 8

சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் பி.எம்.எஸ் சார்ள்ஸை பிரபாகரனுக்கும் அஞ்சாத இரும்புப் பெண் என்று கூறியுள்ளார். அவர் மீது தமக்கு முழு நம்பிக்கை உள்ளது என்று தெரிவித்துள்ளார் நிதி அமைச்சர் மங்கள சமரவீர.

சுங்கத் திணைக்களப் பணிப்பாளராகப் பதவி வகித்த பி.எம்.எஸ்.சார்ள்ஸை அதிலிருந்து நீக்கி, முன்னாள் கடற்படை அதிகாரியை அந்தப் பதவியில் நியமிக்க அமைச்சரவை கடந்த மாதம் முடிவு செய்தது. இதற்கு எதிராகச் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் பணிப்புறக்கணிப்பு மற்றும், சட்டப்படி வேலை செய்யும் போராட்டங்களை முன்னெடுத்தனர். இதனால் சுமார் 10 ஆயிரம் கொள்கலன்கள் சோதனையிடப்படாமல் முடங்கின. அரச வருமானமும் பாதிக்கப்பட்டது. அதையடுத்து சுங்கத் திணைக்களப் பணிப்பாளராக, பி.எம்.எஸ்.சார்ள்ஸை மீண்டும் நியமிக்க நிதியமைச்சர் மங்கள சமரவீர கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் நிதியமைச்சர் மங்கள சமரவீர, சுங்கத் திணைக்களப் பணிப்பாளர், பி.எம்.எஸ்.சார்ள்ஸுடன் இணைந்து கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு நடத்தினார். அங்கு கருத்துத் தெரிவித்த மங்களசமரவீர சார்ள்ஸை இரும்புப் பெண் என்று புகழ்ந்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

துறைமுகத்தில் இயங்கும் வணிக மாபியாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் ஆற்றல், சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் பிஎம்.எஸ். சார்ள்ஸுக்கு உள்ளது என்று முழுமையாக நம்புகிறேன். அதற்காகப் புதிய முறை அறிமுகப்படுத்தப்படும். துறைமுக அதிகாரசபை மாபியா சார்ள்ஸ்க்குச் சவாலாக இருந்ததைக் கண்டேன். அதனால் தான் அவரை நிதியமைச்சுக்குள் உள்வாங்கி முன்னாள் கடற்படை அதிகாரியை சுங்கப் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்க முடிவு செய்தேன். முன்னாள் இராணுவ அதிகாரிகள் பலர் சிவில் பதவிகளிலும் இராஜதந்திரப் பதவிகளிலும் உள்ளனர். மாபியாவில், மிளகு மற்றும் பாக்கு ஏற்றுமதியால் சுங்கத் திணைக்களத்துக்குக் கிடைக்க வேண்டிய பெருமளவு வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு சுங்கப் பணிப்பாளர் பொறுப்பாக முடியாது.

2018 இல் சுங்கத் திணைக்களம் 1.068 ட்ரில்லியன் ரூபா வருமான இலக்கை வரையறை செய்திருந்த போதும் 87 வீத வருமானமாக 921 பில்லியன் ரூபாவை மாத்திரமே வருமானமாகப் பெற்றது. 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இறக்குமதி 8.3 வீதத்தால் அதிகரித்துள்ள போதும், சுங்க வருமானம் 1.4 வீதம் மட்டுமே அதிகரித்திருக்கிறது- என்றார். (த)

“

**இலங்கை மற்றும் தாய்லாந்துக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட தண்டனைக் கைதிகள் மாற்றத்துக்கு அங்கீகாரம் பெற நாடாளுமன்றில் சமர்ப்பிக்கிறோம்.**



# தாய்நாட்டில் தண்டனை அனுபவிக்க புதிய சட்டம்

கொழும்பு, பெப். 8


குற்றமிழைத்தவர் தனது தாய்நாட்டில் தண்டனை அனுபவிக்கும் வகையில் கைதிகள் பரிமாற்ற சட்ட வரைவு அமையும் என்று பிரதியமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்தார்.

அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்ட கைதிகள் பரிமாற்ற சட்டவரைவு நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் முன்வைக்கப்பட்டது. அது தொடர்பாக உரையாற்றும் போது பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மற்றும் தாய்லாந்துக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட தண்டனைக் கைதிகள் மாற்றத்துக்கு அனுமதி பெற நாடாளுமன்றில் சமர்ப்பிக்கிறோம்.

இலங்கைக் குடிமக்கள் எவராவது தாய்லாந்தில் குற்றம் இழைத்து தண்டனைப் பெற்றாலோ அல்லது தாய்லாந்து குடிமக்கள் எவராவது இலங்கையில் குற்றம் செய்து தண்டனை பெற்றாலோ கைதிகளை தாய்நாட்டுக்கு அனுப்பும் வகையில் இந்த யோசனை அமைந்துள்ளது- என்றார். (த)

# தூக்கை நடைமுறைப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் எதிர்ப்பு



கொழும்பு, பெப்.8

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு இரண்டு மாதங்களுக்குள் தூக்குத் தண்டனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியம் இந்த முடிவுக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.


நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இரண்டு மாதங்களுக்குள் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசுடன் ஐரோப்பிய ஒன்றியம் பேச்சு நடத்தியுள்ளதா என்று கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதரகத்தின் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், “எல்லா மனித உரிமை மீறல் விவகாரங்களையும் உள்ளடக்கிய கொள்கை ரீதியான கலந்துரையாடல்கள், இலங்கை அரசுடன் கிரமமாக நடத்தப்படுகிறது. எந்தச் சூழ்நிலையிலும், தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படக் கூடாது என்ற உறுதியான நிலைப் பாட்டில் ஐரோப்பிய ஒன்றியம் இருக்கிறது” என்று தெரிவித்துள்ளார். அண்மையில் பிலிப்பைன்ஸ் சென்றிருந்த மைத்திரிபால, அங்கு போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு எதிராக எடுக்கப்படும் கடும் நடவடிக்கைகளைப் பாராட்டியிருந்தார். அந்த வழியை தாமும் பின்பற்றப் போகின்றேன் என்று கூறியிருந்தார். தற்போதுஈ 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் நடை முறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரவுள்ளேன் என்று அவர் அறிவித்துள்ளார். (த)

# மைத்திரியைப் போன்று நடக்க ரணில் முயற்சி!

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 8

தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அரச தலைவர் போன்று அரசமைப்பை மீறி செயற்பட முற்படுகிறார் என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.


பொலன்னறுவையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அந்தக் கட்சியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

அரசியல் குழப்பம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அரசதலைவர் அரசமைப்பை மீறிச் செயற்பட்டு விட்டார் என்று கூறிப் புலம்பிய தலைமைஅமைச்சர் தற்பொழுது அரசமைப்பில் உள்ள சில துவாரங்களைப் பயன்படுத்தி அதனூடாகச் சென்று அரசமைப்பை மீற முற்படுகின்றார். மக்களை ஏமாற்றி மீண்டும் கூட்டு அரசு அமைக்க ரணில் முற்பட்டால் அதனைத் தோற்கடிக்க நாம் தயார். மக்களின் உரிமைகளோடு விளையாட அவர்களுக்கு இனியும் சந்தர்ப்பம் வழங்க முடியாது. அடுத்த அரசதலைவர் தேர்தலை இலக்கு வைத்தே அவர் இதனைச் செய்கின்றார். அமைச்சர்களை அதிகரித்துக் கொண்டு வரிகளை விதித்து மக்களை துன்பத்துக்குள்ளாக்குவதே அவர்களின் நோக்கம்- என்றார். (த)

# மொட்டுக்கு வாக்களிக்க தயாராகின்றனர் மக்கள்

## பசில் ராஜபக்ச கூறுகிறார்



கொழும்பு, பெப். 8

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக, தாமரை மொட்டுக்கு வாக்களிக்க மக்கள் தயார் என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுடனான சந்திப்பு கொழும்பு நெலும் மாவத்தையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எம்மால் தேர்தலை வெற்றி கொள்ள முடியுமென்பது தற்போது தெளிவாகத் தெரிகின்றது. ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை மக்கள் விரும்பவில்லை. இந்த அரசின் மீது மக்கள் வெறுப்படைந்துள்ளார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி ஏற்படுத்தப்பட்டாலும் இல்லாவிட்டாலும் பொதுமக்கள் முன்னணியின் வெற்றி உறுதியாகவுள்ளது. இந்தச்சந்தர்ப்பத்தில் இரு கட்சிகளும் இணைந்தால் ஐக்கிய தேசிய கட்சி தேர்தலில் படுதோல்வியைச் சந்திக்கும் - என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெ. உடன்பாட்டால் ரணில்– வாசு மோதல்

கொழும்பு, பெப். 8

இந்தியப் பெருங்கடலில் உள்ள அமெரிக்கக் கடற்படைக் கப்பல்களுக்கு விநியோக ஆதரவு வழங்கும் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

2018இல் அமெரிக்கத் தூதரகத்துக்கும் இலங்கைக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட உடன்பாடு குறித்து வாசுதேவ நாணயக்கார சபையில் கேள்வி எழுப்பினார். அதற்கு ரணில் விக்கிரமசிங்க பதிலளிக்கையில், அந்த உடன்பாடு 1995இல் கையெழுத்திடப்பட்டது - என்றார்.

அமெரிக்கக் கடற்படையின் யு.எஸ்.எஸ். ஜோன் சி. ஸ்ரெனிஸ் இலங்கையை வழங்கல் கேந்திரமாக பயன்படுத்தியமை தொடர்பாக, வெளியான அறிக்கை குறித்தும், அதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டதா? என்றும், நாடாளுமன்றத்துக்கு ஏன் அறிவிக்கவில்லை? என்றும், வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பினார்.

இந்தியப் பெருங்கடலில் செயற்படும் அமெரிக்க கடற்படைக் கப்பல்களுக்கு விநியோகங்களை வழங்கும் வகையில் தற்காலிக அடிப்படையில் வழங்கல் மையம் உருவாக்கப்பட்டுள்ளது. முக்கிய பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குவதே இந்த நடவடிக்கையின் நோக்கம். இந்த உடன்பாடு, நாட்டின் இறைமை தொடர்பான அரசமைப்பின் விதிகள் மற்றும் அணிசேராக் கொள்கையுடன் இணங்கிப் போகிறதா? இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்காதா?" என்று வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பினார். பதிலளித்த ரணில், "அமெரிக்க கடற்படை மட்டுமல்ல, எந்தநாட்டின்கடற்படையும்,நாட்டின்எந்தவொருவானூர்தி நிலையம் அல்லது துறைமுகத்தில் இருந்தும் வழங்கல் வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (கு)

# மதூஷும், சகாக்களும் சிக்கியது நீண்டகாலத் திட்டத்தின் வெற்றி!

### அமைச்சர் சாகல தெரிவிக்கிறார்



**கொழும்பு, பெப். 8**

**பெரும் குற்றவாளியும், போதைப்பொருள் வர்த்தகருமான மாகந்துரே மதூஷ் மற்றும் அவரின் சகாக்கள் கைது செய்யப்பட்டமையானது நீண்ட கால திட்டத்தின் வெற்றி என்று அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.**

கண்காணிப்புப் பயணமாக கொழும்புத்துறைமுகத்துக்கு அவர் நேற்றுச் சென்றிருந்தார். அங்கு ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புலனாய்வு அதிகாரிகள் நீண்ட காலமாக மதூஷ் மற்றும் அவரின் சகாக்களை பின்தொடர்ந்தார்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் இறுதித் தறுவாயில் பொலிஸ் வலையிலிருந்து அவர்கள் தப்பித்தார்கள்.

நாம் அரசை அமைக்கும் போது பல ஆண்டுகளாகப் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. நாம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கினோம். எம்முடைய இந்த வேலைதிட்டத்தின் பலாபலன்களை 2017ஆம் ஆண்டு இறுதியில் அனுபவிக்க முடிந்தது.

சுயாதீனமான பொலிஸ் ஆணைக்குழு மூலமாக பொலிஸ் சேவையின் சுயாதீனத்தன்மை நிலை நாட்டப்பட்டுள்ளது. நவீன பயிற்சிகள் மற்றும் அடிப்படை வசதிகளை முன்னேற்றியமையால் இந்தத்திட்டத்தில் வெற்றிகொள்ள முடிந்தது.

துறைமுக அதிகார சபை திறைசேரி மீது தங்கும் நிறுவனமல்ல. துறைமுக அதிகார சபை தம்முடைய கொள்கலன்கள் செயற்பாடுகள் மூலமாக திறைசேரிக்கு வரி செலுத்துகின்றது.

நாம் அரசின் கொள்கைகளுக்கு மற்றும் அரச சலுகைகளுக்கு உட்பட்டுள்ளோம். அரசு கொள்கை வகுக்கும் பொழுது எம்முடைய கருத்துக்களையும் உள்வாக்கிக்கொள்ள வேண்டும் - என்றார். (கு)



## சிறிபாத தமிழ் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

### ரணில், அகிலவிராஜுக்கு கடிதம்

கொழும்பு, பெப். 8

பத்தனை, சிறிபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும், மாணவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்று கோரியும் தலைமைஅமைச்சர் ரணில்விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.வேலுகுமார் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கல்லூரியின் சமையலறை அசுத்தம் காரணமாக கடந்த 5 ஆம் திகதி 'சீல்' வைக்கப்பட்டது. பதிவாளர் உட்பட சில அலுவலர்கள் கல்லூரியின் அலுவலகத்துக்குள்ளேயே மது அருந்துவது தொடர்பில் காணொலியும் அம்பலமாகியுள்ளது. சுத்தமான உணவு வேண்டும் என்று கோரியும், ஒழுக்க விழுமியங்களை மீறும் வகையில் கல்லூரிக்குள் மது அருந்திய அதிகாரிகளை இடைநிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியும் மாணவர்கள் வகுப்புப் பறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். சுகாதாரச் சீர்கேடு குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கல்லூரிக்குள்தமிழ், சிங்களப் பிரச்சினையை உருவாக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. தமிழ் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும். கல்லூரியில் நிலவும் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (கு)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 8

கொழும்பு ஹொரணை பகுதியில் துப்பாக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 7.30அளவில்ஹொரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யடவதுர பகுதியில் ஹொரணை அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சுற்றிவளைப்புநடத்தப்பட்டது.

அதன்போதே துப்பாக்கியுடன் அவர் கைதுசெய்யப்பட்டு ஹொரணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பெல்பிடிகொட போருவதண்ட பனங்கலவத்தை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ராங்கோடிகே நியால் பிரேமசந்திர என்பவரே கைதானார் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-71)

## சிறிபாத மாணவர்களது போராட்டம் ஆணையாளர் உறுதியால் நிறுத்தம்

கொழும்பு, பெப். 8

பத்தனை, சிறிபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் இரண்டாவது நாளாகவும் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில், தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆணையாளரின் உறுதிமொழியை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

கல்லூரியின் பதிவாளரைக் கல்லூரியிலிருந்து பதவி நீக்கம் செய்ய வேண்டும், சுகாதாரமான உணவு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும், மது அருந்தியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள்கோரிக்கை முன்வைத்தே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சுகாதாரக் குறைப்பாடு காரணமாக கடந்த ஐந்தாம் திகதி கொட்டகலை பிரதேச பொது சுகாதார பரிசோதகர்களால் கல்லூரியின் உணவகம் சீல் வைக்கப்பட்டுள்ளது. கல்லூரியில் பயிற்சி பெறும் 476 மாணவர்களில் 75% வீதமானோர் தமிழர்கள். மிகுதிப்பேர் சிங்களவர்கள். இருதரப்பினரும் இணைந்தே இரண்டாவது நாளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உணவகத்தில் உட்கொண்டனர் என்று கூறப்படும் 60 மாணவர்கள் உணவு ஒவ்வாமை காரணமாக சுகவீனமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுக் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் சிகிச்சை பெற்றனர். அதற்கும் கல்லூரி உணவகம் சுகாதாரச் சீர்கேடாக இருந்தமையே காரணம் என்று மாணவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தமது கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் போராட்டம் நடத்திவந்த நிலையில் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆணையாளர் கே.எச்.எம் பண்டார நேற்றுக்காலை தொலைபேசில் மாணவர்களையும், பீடாதிபதிகளையும் தொடர்பு கொண்டு கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார். அதனையடுத்து மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு வகுப்புகளுக்குச் சென்றனர். (கு)

# சிறிபாத தேசிய கல்லூரி விடயம்: அறிக்கையின் பின் நடவடிக்கை

### அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 8

பத்தனை சிறிபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகக் கல்வி அமைச்சின் அதிகாரிகளின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கூறியுள்ளார்.

இவ்வாறு அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அங்கு உணவு தயாரிக்கும் பகுதியில் நீடிக்கும் சுகாதாரச் சீர்கேடு காரணமாக உணவகம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை சீல் வைத்து மூடப்பட்டது. அதைச் சீர்ப்படுத்தித் தர வேண்டும் என்றும், கல்லூரி வளாகத்துக்குள் கல்லூரியின் அலுவலர்கள் மது அருந்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதனைத் தடுக்க வேண்டும் என்று கோரியும், அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கோரி மணவர்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பில் ஆராய, சிறப்புப் பகுதிகளுக்கான அபிவிருத்தி அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் அங்கு சென்றிருந்தார். மாணவர்கள் நடந்த சம்பவங்கள் குறித்து அமைச்சரிடம் முறையிட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், தற்காலிக சமையல் அறை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுகாதாரச் சீர்கேடு காரணமாகச் சீல் வைக்கப்பட்ட பகுதியை சீரமைப்பது பற்றி கல்வி அமைச்சின் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுசென்றிருந்தேன். அதனைச் சீரமைப்பதாக அதிகாரிகள் அலைபேசியில் என்னிடம் உறுதியளித்துள்ளனர் என்று தெரிவித்தார்.

அங்கு ஒரு சில அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. எதிர்காலத்தில் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கும்போது முன்னுரிமை அடிப்படையில் அவற்றை முன்னெடுப்பதற்கு 7 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தகுழுவில்விரிவுரையாளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (கு)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்

## திருமதி சுசீலாமணி பஞ்சலோகரஞ்சன்

Congratulations

சிரேஸ்ட ஆசிரியர் (பயிற்றப்பட்ட சமூகக்கல்வி)
யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம்

| சேவை நிலையம் | காலம் |
|---|---|
| யா/ உயரப்புலம் மெதடிஸ்த மிசன் த.க வித்தியாலயம் | 1991.03.08 - 2010.07.20 |
| யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம் | 2010.07.21 - 2019.02.07 |

திருமதி சு.பஞ்சலோகரஞ்சன் அவர்களின் **60 ஆவது பிறந்த தினமான** இன்றைய தினத்திலே அவர்தம் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி நன்றி தெரிவிப்பதோடு தனது ஓய்வு காலத்தில் வளம் பல பெற்று குடும்பத்தாருடன் இன்பமாக வாழ இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்: **பாடசாலைச் சமூகம்**
**யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம்**
**வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.**

08.02.2019

(CS 23143)(4.17)

---

# நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.
**021 222 9306/077 138 7596**

---

# விற்பனைக்கு

**ஐஸ்கிறீம் ஆட்டோ, குளிர்சாதனப் பெட்டிகள்** (அடிபெட்டி சேகர்)
விற்பனைக்கு உண்டு.
**077 549 0937**

---

# வேலைக்கு ஆள்கள் தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கும் ஸ்ரூடியோவுக்குப் பெண்பிள்ளைகள் வேலைக்குத் தேவை.
உணவு, தங்குமிடம் இலவசம்.
**077 190 0700**


(CS/23165)(11,17)

---

ES Printers
357. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில் 17.11.1966
விண்ணில் 07.01.2019

கடந்த 07.01.2019 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்

## பொன்னுத்துரை நகுலேஸ்வரன் (நாதன்)

(கட்டட ஒப்பந்தக்காரர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (08.02.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பமும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**குடும்பத்தினர்.**
**தொல்புரம் மத்தி, சுழிபுரம்.**

---

# மரண அறிவித்தல்

## திருமதி மீனாட்சி மார்க்கண்டு



நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி மார்க்கண்டு நேற்று (07.02.2019) வியாழக் கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திவாகர் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லாச்சி தம்பதிகளின் அருமை மருமகளும், திருமதி தவமணியின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சரவணபவன் பரஞ்சோதியின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, காங்கேசு, சாமிநாதன், அருணாசலம், இராசம்மா, வாலாம்பிகை மற்றும் விசாலாட்சி, டாக்டர் திருநாவுக்கரசு ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற நாகரத்தினம், அன்னம்மா, தங்கச்சியம்மா, அருமைநாயகம், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனியும், வேலாயுதபிள்ளை, நாகலிங்கம், நாக ரத்தினம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், புவனேஸ்வரி, இராசமணி, கனகாம்பிகை, பாக்கியம் மாசிலாமணி மற்றும் கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், பத்மினி, கலைமகள், ஜீவபூரணி, ஜனார்த்தன், சுரேக்கா, சுதாகரன் மற்றும் பாலச்சந்திரன், திருவருட்செல்வன், பதஞ்சலி, சசிதா, கார்த்தீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும், பிரணவன், ஜனகன், சாதனா, மயூரி, லயகரி, நர்த்தனா, மாதுரி, கோபிகீரன், கானவி, சயிந்தவி, ஆருத் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நயினாதீவு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நயினாதீவு சல்லிபரவை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/23170)(11,17)

**077 623 0569**

---

# எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின் பதினேழாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 14.04.1947
உதிர்வு 17.01.2002

மண்கும்பானின் மைந்தன்

அமரர்

## ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளரும், ஸ்தாபகரும் மைதிலி நகைமாடம்)

**திதி: வளர்பிறை சதுர்த்தி (08.02.2019)**

**ஆண்டுகள் பதினேழு சென்றுவிட்டன – தங்களின்**
**ஆனந்த முகத்தைக் கண்டு!**
**சாந்தமான தங்களின் பேச்சைக் கேட்க**
**ஆவலாய் நிற்கின்றோம்!**
**அனுதினமும் தங்களின் நினைவுடன் – நாம்**
**அலைமோதி நிற்கின்றோம்!**
**உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன்!**
**மறுபடி உங்களைக் காண்போம்**
**இறைவனின் வருகையிலே!**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

என்றும் நினைவுடன் வாழும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(in.S335)(13,17)

மைதிலி நகைமாடம்,
89 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 7902

யாழ். மைதிலி ஜுவலர்ஸ்,
79 Z, செட்டியார் தெரு,
கொழும்பு -
தொ.பே.011 239 6239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பவளவிழா காணும் நாயகனை



## ஆசிச் செய்தி

புலோலி, புலோலி தெற்கு, கந்தமுருகேசனார் வீதியில் வாழ்ந்துவரும் 08.02.1944 இல் பிறந்த பன்மொழி வித்தகர் திரு.க.சி.சிவசுப்பிரமணியம் அவர்களின் பவள விழாவிற்கு அடியேனும் ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். பவளவிழா நாயகராம் திரு.க.சி.சிவசுப்பிரமணியம் அவர்கள் மிகுந்த மனிதநேயமிக்கவர். ஆங்கில மொழியில் சிறந்த பாண்டித்தியம் பெற்றவர். அத்துடன் மேலைத்தேய மொழிகளான இலத்தீன் பிரெஞ்சு, எனும் மொழிகளில் விற்பன்னராக இருப்பதுடன் தாய்மொழியாம் தமிழிலும் சிறப்பான மொழியாற்றல் மிக்கவர். மதிப்புமிகு கந்தமுருகேசனார் அவர்களின் குருகுலத்தில் கற்றுத்தேர்ந்த அறிவாளர்.

இன்று உலகெங்கும் பரந்துவாழும் பல உயர் தொழில் விற்பன்னர்களை குறிப்பாக – வைத்தியர்கள், நீதிவான்கள், உயர் சட்ட அறிஞர்கள் சட்டத் தரணிகள் என பல்லாயிரம் மாணவர்களை உருமாற்றிய பெருமை மிக்கவர். கடந்த 50 ஆண்டுகளாக சிறப்பான முறையில் ஆங்கிலம் கற்பித்து வருகின்றார்.

பவள விழாக்காணும் திரு.க. சி.சிவசுப்பிரமணியம் அவர்கள் நீடுவாழ்ந்து அமுதவிழா நூற்றாண்டு விழா என்பவற்றை கொண்டாடவும் பல நலன்கள் பெற்று மகிழ்வுடன் இனிதே வாழவும் புற்றளைச் சித்திவினாயகப் பெருமானை தொழுது ஆசிகூறி வாழ்த்துகின்றேன்!

எல்லாம் மாங்களமும் உண்டாகுக!

சுபம்!மாங்களம்!!

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P**
**இந்து மத குரு பீடாதிபதி**
**பிரதமகுரு - வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**
**தர்மகர்த்தா - புற்றளைச் சித்திவிநாயகர் தேவஸ்தானம்.**



## நல்லாசிகளும் வாழ்த்துக்களும்

திரு.க.சி சிவசுப்பிரமணியம் அகவை 75 இல் ஆங்கில ஆசான் ஐம்பது ஆண்டுகளாக ஆங்கில மொழியினை ஊட்டி வளர்த் செம்மல் வயது வேறுபாடின்றி அனைவருமே கல்வி பயின்றனர். உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி பல பேர்கள் பல துறைகளிலும் இன்று பணியாற்றுபவர்களில் பல பேர் இவரிடம் ஆங்கில மொழி அறிவுக் கல்வியை இலக்கணமுறை தவறாமல் கற்றுத் தேர்ந்தவர்கள்.

இலத்தீன், பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ்மொழிகளிலும் இவர் நன்கு பாண்டித்தியம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கில மொழி ஆசான் திரு.சி.சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள் பல்லாண்டு பலர்போற்ற கல்விச்சேவை (பன்மொழி) வழங்கி நீடித்து நலமாக வாழ மாயவனின் அருளையும் எமது ஆசிகளையும், வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றோம்.

**பிரம்ம ஸ்ரீ ச.க. சுதர்சனக் குரு J.P**
**பிரதம குரு**
**ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் புலோலி.**

## வாழ்த்துச் செய்தி

நம் தமிழர் தேசத்தின் மகத்தான சொத்து, மொழி ஞாயிறு புலோலியூர் K.C.சிவசுப்பிரமணியம் எனும் பன்மொழித் திறமையாளன். தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளை ஐயம் திரிபுற கற்று அவ் இலக்கண இலக்கியங்களை ஆழமாக ஆராய்ந்து தன் மொழியறிவால் தன்னை விஞ்ச முடியாத அளவுக்கு தன்னை உயர்த்தி அன்பும், பண்பும், கனிவும் கொண்டு தன் கற்பித்தல் திறமையால் பல அறிஞர்களை உருவாக்கி தனக்கென ஒரு தனியிடம் பதித்து பார் போற்றும் வண்ணம் வாழ்ந்து வருகின்றார். இலக்கியத்தில் எழுத்தாளர்களும் கவிஞர்களும் தங்கள் எண்ணங்களை எவ்வாறு பதிவு செய்துள்ளார்கள் என்பதை கண்டு பிடிக்க இன்று பல கவிமான்கள் கஷ்ரப்படும் போது இவரால் மட்டுமே அதை அப்படியே வெளிக்கொணர முடியும் என்பது அவரின் தனித் திறமை ஆகும். இவரின் காலத்தில் நாமும் வாழ்வது எமக்கு மிகுந்த பெருமையைத் தருகின்றது. கலாநிதிப் பட்டம் என்பது இவரின் அறிவுக்கு முன்னால் ஒரு சிறு கௌரவமேயாகும். எனினும் அக்கௌரவத்தையும் சம்பந்தப்பட்ட இன்றைய சில கல்விமான்கள் கண்டுகொள்ளாமல் இருப்பது எமது கல்விச் சமூகத்துக்கு நாம் செய்யும் மிகப்பெரும் தவறேயாகும். இன்றைய நாளில் தனது 75 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் எமது அன்பு ஆசானையும் அவரது குடும்பத்தினரையும் நல்லூர் முருகனின் துணைகொண்டு பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவதில் நான் பெருமையடைகின்றேன்.

**S. சிவசங்கர்**
**உதவி விரிவுரையாளர் - ஆங்கிலம்**
**யாழ் - உயர்தொழில்நுட்பவியல் நிறுவனம்.**

## வாழ்த்துச் செய்தி

அன்பின் ஊற்றாய் அறிவின் பெருக்காய் மனோதைரியத்தின் மறுபெயராய் மாணாக்கருக்கு தந்தையின் கண்ணியத்தையும், தாயின் அன்பையும், குருவின் வழிகாட்டலையும் ஒரு முகமாய் வழங்கி அவர்களின் மனதில் நிலையான சிம்மாசனத்திலிருக்கும் எம் மதிப்பிற்குரிய சிவசுப்ரமணிய மாஸ்ரருக்கு எமது உள்ளங்கனிந்த 75 ஆவது அகவை தின வாழ்த்துக்கள். எம் ஆசான் நீண்ட ஆயுளுடனும், உடல்நலத்துடனும், மனம் நிறைந்த சந்தோசத்துடனும், நூற்றாண்டுகள் வாழ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். இன்று வரை மாறாத அன்பும் , கனிவான சிரித்தமுகமும் அவருக்கே தனித்துவமான உண்மையில் நான் முற்பிறப்பில் செய்த புண்ணியம் தான் இத்தகைய நல்ல ஆசான் கிடைக்கப் பெற்றது. எனக்கு மட்டுமல்ல என் குடும்பத்தாருக்கே நல்ல ஆசானாய் வழிகாட்டுகின்றார். அவரின் மாணாக்கன் எனக் கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

**Dr. S. சந்திரகுமார் & குடும்பத்தினர்.**
**(கண்வைத்திய நிபுணர்)**
**யாழ் போதனா வைத்தியசாலை.**

## அகில இலங்கை இளங்கோ கழக அமைப்பாளரின் உணர்வின் வரிகள்

ஆங்கில விரிவுரையாளர், மொழி ஞாயிறு, புலோலியூர் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் அவர்கள் இன்று பவளவிழாக் காண்கின்றார் என்ற செய்தி எம்முள்ளத்திற்குப் பேருவகையை ஊட்டுகின்றது. இப்புனித நாளில் இப்பெருமகனை வாழ்த்துவதற்கு வயதில்லாத காரணத்தால் அவர் திருவடிகளைப் பற்றி அருள் வேண்டி ஒரு சில வார்த்தைகளைக் கூற விழைகின்றேன்.

புலமை ஒலி புலோலி ஆயிற்று என்பர். எம்புலமைப் பாரம்பரியத்தின் வாரிசாக எம் மத்தியில் வாழ்கின்ற புலமையாளர் கந்தமுருகேசனாரின் அன்புக்குரிய மாணவர்களில் ஒருவன். இன்று எம் மண்ணில் வாழுகின்ற ஆங்கிலப் புலமையாளர்களில் தலைசிறந்த ஒருவர். தமிழ், ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு என பன்மொழி வல்லுநர். ஆங்கிலத்தையும் தமிழையும் இரு கண்ணெனப் போற்றி வாழ்பவர். சென்னை லயோலாக் கல்லூரியின் ஆங்கில விரிவுரையாளராகப் பணியாற்றி எம்மூருக்குப் பெருமை சேர்த்தவர். இவரது இலக்கியப் பணியைப் பாராட்டி 2018 ஆம் ஆண்டு சிலப்பதிகார விழாவில் "மொழி ஞாயிறு " என்ற உயர்விருதினை வழங்கிக் கௌரவிக்கின்ற வாய்ப்பினை அகில இலங்கை இளங்கோ கழகத்தினராகிய நாம் பெற்றிருந்தோம். இது நமக்குக் கிடைத்த பெரும் பேறென நம்புகின்றோம்.

"ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கலாமோ
என் ஞான குரு பெருமை வகுக்கலாமோ "

என்று பாரதி தன் குருவைப் பற்றிப் பாடினார். இவ்வரிகள் எங்கள் ஆசானுக்கும் பொருந்தும். குருநாதரின் பணி மேலும் தொடரவும் வாழ்வு வளம் பெறவும் ஆதி மூல நாதனாம் சிவன்தாள் பணிந்து அருள்வேண்டி அமைகின்றேன்.

**இலக்கியச் செம்மல்**
**தென்புலோலியூர் பரா ரதீஸ்**
**அமைப்பாளர் பெருந்தலைவர்**
**அகில அலங்கை இளங்கோ கழகம்.**



## அண்ணனைச் சந்தித்தது முற்பிறப்பின் பயன் !

ஆங்கிலப் பேராசான் சிவசுப்பிரமணியம் அவர்களின் 75 ஆவது அகவை நிறைவில் அவரை வாழ்த்தக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை எண்ணி நான் பேரானந்தம் அடைகின்றேன். ஏனெனில் அவர் என்னுடைய ஓர் உடன்பிறவாச் சகோதரரைப் போன்றவர். என் பேரிலும் என் குடும்பத்தின்பேரிலும் எனது நிறுவனமான உதயன்
பத்திரிகையின் பேரிலும் மாசுமறுவற்ற அன்பு கொண்டவர். அவரைப் போன்ற ஓர் உத்தமமான உள்ளம் எனக்கு உறவாகக் கிடைத்தமை நான் முற்பிறப்புக்களில் செய்த புண்ணியத்தின் பலன் என்றே எண்ணுகின்றேன்.

சிவசுப்பிரமணியம் அவர்களை ஆங்கில் ஆசான் என்று மட்டும் சொல்லிவிட முடியாது. நான் லண்டனில் மேற்படிப்பைத் தொடர்ந்தவன் என்கிறபோதும், அவரது ஆங்கிலப் புலமை கண்டு சொக்கி நின்றிருக்கின்றேன். அவர் ஆங்கில இலக்கியங்களை கற்றுணர்ந்து அதை வெளிப்படுத்தும் விதமே தனி அழகு. ஆங்கில இலக்கியங்கள் குறித்து அவர் பேசினால் நாள் முழுவதும் அமர்ந்திருந்து நேரம் போவதே தெரியாது கேட்டுக்கொண்டிருக்கலாம்.

என் குடும்பத்தோடு மிக நெருக்கமான தொடர்பை எப்போதும் பேணி வந்திருக்கிறார். அண்ணன் சிவசுப்பிரமிணயம் எனது மகள் லக்ஷ்மிக்கு ஏடு தொடக்கியவரே அவர்தான். அவர் மடியிலிருந்து ஆங்கிலம் மூலம் தொடக்கிய அந்தப் பயணத்தில் எனது மகள் இன்று பல உயரங்களைத் தொட்டிருக்கிறார் என்றால் அதற்கு முற்றுமுழுதான அடித்தளம் அண்ணன் என்றே சொல்ல வேண்டும்.

1995 ஆம் ஆண்டு வலிகாமம் முழுவதும் இடம் பெயர்ந்து சென்ற போது நாமும் உதயன் குடும்பத்தினரும் அதில் அள்ளுண்டு செல்லவேண்டியவர்களானோம். அப்போது எம்மை இரு கரம் நீட்டி அரவணைத்து தென்மராட்சியில் அனைத்து உதவிகளையும் அண்ணன் செய்து தந்ததை வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது. அதற்காக அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டும் இருக்கின்றேன்.

அது மட்டுமல்ல இன்னும் பல முக்கிய உதவிகளை அண்ணன் எனக்கும் உதயன் பத்திரிகைக்கும் செய்துதந்துள்ளார். காலத்தால் செய்யப்பட்ட அந்த உதவிகளை எல்லாம் இங்கு விண்டு விவரிக்க முடியாது என்றாலும் அவற்றுக்காக என்றும் அண்ணனுக்கு செஞ்சோற்றுக் கடன்பட்டவன் நான் என்பதை இந்தத் தருணத்தில் நினைவு கூராமல் விட்டால் நான் நன்றி மறந்தவன் ஆகிவிடுவேன். அந்தளவுக்கு மிகப் பெரும் உதவிகளைச் செய்திருக்கிறார் அண்ணன்.

எமக்கு மட்டும் என்றில்லை அண்ணன் ஆற்றிய பல பணிகள் வரலாற்றின் பக்கங்களில் ஆணித்தரமாகப் பதியப்பட்டுள்ளன. காலமும் நேரமும் வரும் போது அவை பற்றி தமிழ்ச் சமூகம் நன்று அறியும். அப்போது அண்ணனின் அருமை பெருமைகளை ஏனையவர்களும் அறிந்து கொள்வார்கள்.

வல்லிபுர ஆழ்வாரின் பெரும் பக்தர் அண்ணன். அவர் அங்கு இறைவனிடம் தனக்காக வேண்டிக்கொண்டாரோ இல்லையோ என் குடும்பத்துக்காகவும் உதயன் பத்திரிகைக்காகவும் ஆண்டு தோறும் வேண்டிக் கொள்ள மறந்ததேயில்லை. பல சவால்களையும் ஆபத்துக்களையும் உயிர் அச்சுறுத்தல்களையும் கடந்து இன்றும் நிமிர்ந்து நிற்க முடியுது என்றால் அது அண்ணன் இல்லாமல் சாத்தியப்பட்டிருக்காது என்பது திண்ணம். அத்தகைய அண்ணன் சிவசுப்பிரமணியன் இன்று தனது 75 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் போது அவரோடு உடனிருந்து அவரை வாழ்த்துவதில் பெரும் மகிழ்வும் புளகாங்கிதமும் அடைகின்றேன்.

**ஈஸ்வரபாதம் சரவணபவன்**
**கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்**
**யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

## வாழ்த்துச் செய்தி

அன்புக்கும் மதிப்புக்குமுரிய எமது ஆங்கில ஆசான் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களின் 75 ஆவது பிறந்ததின வாழ்த்துச் செய்தி வழங்குதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம். அழியாச் செல்வமாம் கல்விச் செல்வத்தை பல்லாண்டு காலமாக அள்ளி வழங்கிவரும் எமது ஆசானின் கற்பித்தல் நுட்பங்கள் அவருக்கே தனித்துவமானது. பள்ளிச்சிறார்கள், உயர்கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வழக்கறிஞர்கள், விரிவுரையாளர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற வகையில் இரவு பகல் பாராது எந்நேரமும் உற்சாகத்துடன் கற்பிப்பதில் வல்லவர். இதனால் அவர்களின் தொடர்பு மொழியாம் ஆங்கில மொழியறிவை வளர்ப்பதுடன் அவர்கள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கும், தொழில் வாய்ப்புக்கள், பதவி உயர்வுகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள், புலமைப்பரிசில்கள் பெறுவதற்கும் அவரே காரணகர்த்தாவாக விளங்குகிறார். எமது குடும்பத்தை பொறுத்தவரை அவர் இரண்டு தலைமுறைகளாக கல்வியறிவூட்டியுள்ளார்.

அவரது ஆத்மார்த்தமான சேவைகளுக்கு நாமும் எமது குழந்தைகளும் என்றும் நன்றிக்கடன் பட்டவர்களாக இருக்கின்றோம்.


கற்பித்தலுடன் நின்றுவிடாது அனைவருக்கும் எல்லாவழிகளிலும் தன்னாலான உதவிகளைச் செய்வதிலும் சளைக்காதவர் எம் ஆசான். இனி வரும் காலங்களிலும் அவரது அளப்பரிய சேவைகள் எம்மினத்திற்கு தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்றும் அவரது எதிர்காலம் மிகவும் ஆரோக்கியமாக அமைய வேண்டுமென்றும் இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**வைத்திய கலாநிதிகள்**
**நாகரத்தின் ஸ்ரீஸ்கந்தராஜா**
**போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம்.**
**அம்பிகா ஸ்ரீஸ்கந்தராஜா**
**பிரதேச வைத்தியசாலை- கோப்பாய்.**



## பவள விழாப் பிறந்தநாள் வாழ்த்து

செயற்கரிய செய்வர் பெரியார் என்ற செம்மொழியின்



## 'மொழிஞாயிறு' திரு. கந்தையா சிவசுப்பிர (ஆங்கில விரி

**திரு. கந்தையா சின்னத்தம்பி சிவசுப்பிமணியம் அ**
**8 ஆம் திகதி மாசி மாதம் தனது இல்லத்தில்**

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்"" "மாதா, பிதா, குரு, தெய்வம்" ஆசி
வெறும் வார்த்தைகள் அல்ல அவற்றை தனக்கே ஆன கடமையாக கொண்
உயர்ந்து முடிவில்லாத அறிவைக் கொண்டுள்ளார். 1944 ஆம் ஆண்டு மா
புதல்வனாக அவதரித்த சிவசுப்பிரமணியம் அவர்கள் புற்றளை சாரதாபீட
யாழ்ப்பாண கல்லூரியில் ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்ச் ஆகிய மொழிகள்
தந்தையாரின் வழிகாட்டலிலே ஆங்கிலச் சிறுகதைகளை கற்பதனை வழ
ஆங்கிலத்தைக்கற்றவர். ஆங்கிலத்தை மட்டுமல்ல தமிழ் தாத்தா கந்த
இணைந்து தமிழை ஐயம் திரிபற துறைபோகக் கற்றார். பல இலக்கிய நூல்க
புலோலி, யாழப்பாணம், வன்னி என இடம்பெற்ற இ... கல்விப்
சென்னை லாயோலா கல்லூரியில் சிரேஸ்ட விரிவுரை...ளராக பணி
போதித்தார்.

இன்றும் தன் இயலாத உடல் நிலையிலும் பல மாணவர்களுக்கு அறிவொ
ஊக்கப்படுத்தி ஆங்கிலமொழியில் விருப்புடன் கற்பதற்கும் இலகுவில்
ஊக்கியாக உள்ளது. அவரிடம் கற்கும் ஒவ்வொரு மாணவனும் பெரும்பாக்
இன்று ஆங்கில மொழியை கற்பதற்கு பல ஆயிரங்களை செலவு செய்தாலு
கூறமுடியாது. ஆனால் திரு.சி.சிவசுப்பிரமணியம் அவர்கள் பணத்தி
பெற்றுக்கொள்ள தனது நேரம், காலம் எதுவும் கருத்தில் எடுக்காது பக்க
வெற்றி ஏற்றி மாணவர்களுக்கு மொழியறிவை அளித்துக்கொண்டிருக்
இலக்கியங்களின் வெளிப்படுத்தல்களாக அமைகின்றன. அவரினால் கொடு
2018 ஆம் ஆண்டு அகில இலங்கை இளங்கோ கழகத்தினர் நடத்திய சில
பெற்றுள்ள சாதனையாளர். இவரிடம் கல்வி கற்று இன்று வைத்
வழக்கறிஞர்களாக, அரச உத்தியோகத்தர்களாக அவரின் மாணவர்கள் இ
தொழில் அல்ல தொண்டு என்பது திரு.சி.சிவசுப்பிரமணியம் அவர்களுக்கே
இந்த பாரை உயர்த்திட வேண்டும் என்ற பாரதியின் கனவை நனை
போற்றப்படுகின்றார். வாழ்க நின்தொண்டு, வளர்க நின்புகழ்

கருத்ததனைச் சிந்தை தனில் நாளுமே வந்தித்து கிட்டத்தட்ட நாற்பத்து ஏழு வருட கல்விப் பணியில் கலங்கரை விளக்காய் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மொழி ஞாயிறு உயர் திரு.க.சி.சிவசுப்பிரமணியம் அவர்களின பவள விழாவிற்கு வாழ்த்துச்செய்தி தருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மஞ்சளும், குங்குமமும் எவ்வளவு புனிதமானதோ அந்தளவு புனிதமானது வெள்ளிக்கிழமை அந்தப் புனிதத் திருநாளில் அவரது வைரவிழாவினை கொண்டாடுவதில் பெரும் பேறு எய்துகிறேன்.

பேரறிஞர்.வெண்தாடிவேந்தர், தென்புலோலி தாத்தா கந்த முருகேசனார் அவர்களிடம் சங்க இலக்கியங்கள் அனைத்தையும் முழுமையாக கற்றுத் தனது பதினெட்டாவது வயதில் பால பண்டிதர் பண்டிதர் பரீட்சைகளில் முதல் முறையிலேயே சித்திபெற்றார். கந்த முருகேசனாரின் வீட்டுத் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தங்கி இருந்து அவருக்கு தேவையான ஒத்தாசைகளை வழங்கிவந்தார். அவரின் முதன்மைச் சீடரானார் அறிவுத்தேடலுக்கு இவர்போல எவரும் இருந்திரக்க முடியாது.

இவர் மனித நேயமும், மனிதத் தன்மையும் நிறையக் கொண்டவர் தமிழ், ஆலங்கிலம், லத்தீன், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தும் பாண்டித்தியச் செருக்கு அவரிடம் கிஞ்சித்தும் இருந்ததில்லை. எவருக்கும் எந்த நேரத்திலும் அவர்களுக்கு தேவையான உதவிகளை தன்னுடைய பெரும் முயற்சியால் நிறைவேற்றிக்கொடுப்பவர். அத்துணை கனிவான இதயம் கொண்டவர் வைத்திய நிபுணர்கள் பலரும் இவரது அன்பினைப் பெற்றவர்கள் அவர்கள் எல்லோரும் இவரது தேக சுகத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்கள்.

இவரிடம் கல்வி பயின்ற உயர் நீதி மன்ற நீதிபதிகள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் பலரும் இவரைப் பார்ப்பதற்கு வருகிறார்கள். மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ை பாராட்டி வாழ்த்துகின்றோம்





### மாயவன் அருளுடன் வாழ்க பல்லாண்டு

நித்திலம் போற்றும் நிறைந்த குணக்குன்றான
சொத்தென உலகுவக்கும் சிவசுப்பிரமணியம்
வித்தெனப் பதித்திங்கு விருட்சமாய் வளர்ந்தவர்
நித்தியமாய் நீடுவாழ வாழ்த்துகின்றோம்

கல்வியே கருத்தனமாய் கருதும் வடகடலோரம்
பல்கலை கற்றதில் விரிவுரையாளருமாய்
அல்லும் பகலும் அகிலமதை உய்விக்க
சொல்லும் வழி சொன்ன சிவசுப்பிரமணியம்

புலோலியூர் ஈன்ற பெருமதிப்பான மாணிக்கமாம்
மலரோடு ஈருடல் ஒருயிராக மனம் சேர்ந்து மாங்கல வாழ்வுதனை
அலைமகள் உருவான சிவபாக்கியம் பேறினை
கலைவளர மனம் மகிழ வதுவை செய்தாரே

பூவொடு பொழில் மணக்க பூஞ்சிதல் பனிக்க
தாயொடு களிப்புறும் பசுங்கன்றதன் நேசம் போல்
சேயென நீர் கருதும் நாம் வாழ்த்துகின்றோம் உமை
மாயவன் அருளுடன் வாழ்க பல்லாண்டென

கதிரவன் ஒளியென கடல்தரும் அலை என
மதிதரு ஒளியென மடல் அமிழ் மலரென
பதிதரு வாழ்த்துடன் பல இறை நலத்துடன்
அதி அன்புடன் 75வது அகவை தன்னில் நாம் வாழ்த்தி வணங்குகின்றோம்.

என்றும் அன்புடன்
Dr.ஜெனனி யுலக்ஷன்

Best Wishes

## ...ர சின்னத்தம்பி
## ...ிரமணியம்
## ...ிரிவுரையாளர்)

### ...ியம் அவர்கள் தனது 75 ஆவது ஜனனதினத்தை ...லத்தில் விமர்சையாக கொண்டாடவுள்ளார்

...ம்" ஆசிரியப் பணியே அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி என்பன ... கொண்டுள்ளார். ஆங்கிலத்தின் சிகரம் என்பதனை தாண்டி வானமளவு ...ண்டு மாசி தாம் எட்டாம் திகதி சின்னத்தம்பி – உமையாள் தம்பதியரின் ...ரதாபீட வித்தியாசாலையிலும். ஹாட்லிக் கல்லூரியிலும் கற்றார். பின்னர் ...மொழிகளிலே தோற்றி லண்டன் இளங்கலைமாணிப் பட்டதாரி ஆனார். ...ன வழக்கமாகக் கொண்டு சிறுபராயம் முதலே விடுதலறியா விருப்புடன் ...தா கந்தமுருகேசனார் அவர்களின் பண்டிதர் வகுப்பில் மாணவனாக ...ய நூல்களில் தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார்.

...விப் ...ரி புலம்பெயர்வின் காரணமாக சென்னையிலும் இடம்பெற்றது. ...ணி...றி அங்கே ஆங்கிலம். இலத்தீன். பிரெஞ் ஆகிய மொழிகளைப்

...அறிவொளியை ஏற்றிக்கொண்டிருக்கிறார். அவரின் வார்த்தைகள் மிகவும் ...லகுவில் விளங்கிக்கொள்ளுமளவிற்கு ஒவ்வொரு மாணவர்களுக்கும் ...ரும்பாக்கியம் பெற்றவர்கள் என்றே கூறலாம்.

...செய்தாலும் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவோமா என்று உறுதியாக ...பணத்திற்காக அறிவொளி ஏற்றவில்லை மொழியற்றலை திறம்பட ...து பக்கக்குறிப்புக்கள் ஏதுவுமின்றி தன் மூளை நினைவிலே அவற்றில் ...ண்டிருக்கிறார். அவர் உதாரணமாக கொடுக்கும் தமிழ் வசனங்கள் ...ல் கொடுக்கப்படும் ஆங்கில வசனங்கள் மிகவும் சிறந்தவை.

...த்திய சிலப்பதிகார விழாவில் "மொழி ஞாயிறு" எனும் உயர் விருதினை ... வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, விரிவுரையாளர்களாக. ...ர்கள் இவ் உலகம் முழுவதும் பரந்துள்ளார்கள். ஆசிரியர் பணி என்பது ...களுக்கே பொருந்தும் பொன்மொழியாகின்றது. பயிற்றப் பல கல்வி தந்து - ... நனைவாக்கவல்ல ஆசானாக திரு.சி.சிவசுப்பிரமணியம் அவர்கள்

**திரு.இ.மணிவாசகர்**
**வைத்திய கலாநிதி**
**மார்புநோய் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்.**

நன்றியாக இருக்கிறார்கள்.பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவ மாணவிகள். அவர்களைத் கற்பிக்கின்ற பேராசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பலரும் அவரது வீட்டிற்கு வந்து வெளிநாடுகளில் மேற்படிப்பைத் தொடர்வதற்கான ஆங்கில அறிவைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

இவர் இந்தியாவில் லயோலா கல்லூரியில் கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம் லத்தீன். பிரெஞ்சு ஆகிய மொழிகளில் விரிவுரைகள் ஆற்றியுள்ளார். ஷேக்ஸ்பியரின் முப்பத்தாறு நாடகங்களையும் கற்றுத் தேர்ந்து வைத்திருந்தார்.

எந்த நூலின் துணையையோ அல்லது குறிப்புரை எதையும் பாராமல் மணிக்கணக்கில் அந்த மாணவர்களுக்கு விளக்கம் கொடுத்ததைப் பார்த்த அந்த கல்லூரியின் பேராசிரியர்கள் பலரும் வியப்பில் ஆழ்ந்து போனார்கள். இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் எல்லோரும் நிறைந்த பயன் பெற்றார்கள்.

அவர் ஆரம்பக் கல்வியை புற்றளைச் சாரதா பீடத்திலும் மேற்படிப்பை ஹாட்லிக் கல்லூரியிலும் தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்றார். அறிவுசால் பெருமக்கள் அனைவரும் இவரது ஆங்கில மொழியின் வாசத்தை பெற்றுக்கொள்வதற்கு தினமும் வந்த வண்ணமே இருக்கிறார்கள். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இவரது திறமையைக் காண வருகிறார்கள். இந்த அறிவுக் களஞ்சியம். கல்விப் பொக்கிஷம் நீண்ட காலம் பூரண சுகத்தோடு வாழவேண்டும் என்பது தான் எனது பேரவா.

அவரின் நீண்ட ஆயுளுக்கும். அவரது நிம்மதியான அமைதியான வாழ்விற்கும் அவரது அன்புப் பாரியார் சிவபாக்கியம் அவர்களுக்கும் அவரது பிரியமான புத்திரி பிரியதர்சினிக்கும் அவர்தம் குடும்பத்தினர்களுக்கும் எல்லாம் வல்ல காவல் தெய்வமாம் வல்லிபுர மாயவன் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். வாழ்க வளமுடன்

**அன்புத்தம்பி ஆ. புண்ணியமூர்த்தி**
**ஓய்வுநிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர்.**
**வலயக் கல்வி அலுவலகம்**
**வடமராட்சி பருத்தித்துறை**

---

### சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் என்கின்ற புலோலியின் தனித்துவ அடையாளமும் ஆளுமையும்

மிகுந்த கல்விப்புலமையும் தனித்துவ ஆளுமையும் கொண்ட திரு சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் ஆசிரியரின் 75 ஆவது பிறந்தநாளிற்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சியடைவதுடன் அது எனக்கு கிடைத்த பெருமைதருவிடையமுமாகும். சிவசுப்பிரமணியம் சேர் என செல்லமாக அழைக்கப்படும் இவர் நீண்ட கல்விப்பாரம்பரியம் கொண்ட அதிக புலமையாளர்களைக் கொண்ட புலோலி தெற்கில் பிறந்து அந்த ஊருக்குப் பெருமை சேர்த்துள்ளார். ஏறத்தாழ 40 வருடங்களிற்கு மேலாக ஆங்கில மொழியினை மாணவர்களுக்கு கற்பித்து வருகின்றார். தமிழ். ஆங்கிலம். பிரெஞ்சு. லத்தீன் போன்ற மொழிகளில் புலமையாளராக இருந்து வருகின்றார்.

1989 ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான போது எமது சிரேஸ்ட மாணவர்கள் அவரிடம் சென்று ஆங்கிலம் கற்கும்படி கூறினார்கள். அதற்கிணங்க அவரிடம் சென்று கற்றபோது தான் அவரின் கல்வியாற்றலும் ஆளுமையும் எங்களைக் கவர்ந்தது. இவ்வாறான ஆங்கிலப்புலமை கொண்ட ஒருவரை நாம் இனிக்காண்பது அரிது என்றே நினைக்கின்றேன். அவரிடமுள்ள சொல்லாற்றல் அதனைப் பிரயோகிக்கும் முறை மொழிபெயர்க்கும் ஆற்றல் என அவர் தனித்துவ ஆளுமையாகக் காணப்படுகின்றார். இன்று பிரல்யம் பெற்றிருக்கின்ற பல வைத்தியர்கள். சட்டத்தரணிகள்.விரிவுரையாளர்கள். பொறியியலாளர்கள் போன்றோர் அவரிடம் கல்வி கற்றவர்களே. வடமராட்சியின் இன்னுமொரு ஆளுமையான பேராசிரியர் வி.பி. சிவனாதன் சேர் அவர்களையும் இவ்விடத்தில் நினைவு கொள்கின்றேன். இவர்கள் இருவரும் சிறந்த கல்வியை மாணவர்களுக்கு வழங்கியதோடு சமூகத்தின் வளர்ச்சியிலும் அக்கறையுடையவர்களாக இருந்து வருகின்றார்கள்.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்ற வள்ளுவன் வாக்குக்கேற்ப தனது மகள் பிரியாவினை இருதய சிகிச்சை சிறப்பு வைத்தியராக்கினார். "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனும் சொல்" என்ற வள்ளுவன் வாக்குக்குக்கேற்ப யாழ்ப்பாணப் பல்கலைக்கழக்தில் வைத்தியத்துறையில் பட்டம் பெற்று அமெரிக்காவில் இருதயசிகிச்சையில் சிறப்புவைத்தியராகவும் ஆலோசகராகவும் அவரது மகள் பிரியா இருந்த வருகின்றார். மதிப்புக்கும் வணக்கத்துக்குமுரிய சிவசுப்பிரமணியம் சேர் அவர்கள் மிகுந்த ஆரோக்கியத்துடன் நிறைவான செல்வங்கள் பெற்று நீண்டகாலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

**கலாநிதி சின்னத்துரை விஜயகுமார்**
**முதுநிலை விரிவுரையாளர்**
**பொருளியல்துறை**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**

---

### Mr.Kandaih Chinnathampy Sivasubramaniam Celebrates his 75th birthday on Friday.

He was born on the eight of February in 1944. His father was kandiah Chinnathampy. His Mother was Umajal.

He successfully completed his Bachelor's degree in arts in the University of Colombo. When he was nineteen years of age he succeeded in the Pundit examination also. Mr.Kantha murugesan taught him the Tamil literature and Tamil Grammer.

He was a favorite student of Kantha Murugesan. He obtained his master's degree attending the lectures of American Professors in the Jaffna college, When it was under their administration.

Thousands of students studied English under him. Some Students studied French. A few Students who studied Law learnt Latin under him. He has remarkable pedagogic skill, Those who studied under him serve as Doctors, Lawyers and the University Lecturers. Even now, Several Students after their graduation study under him. Those who got through the diploma in English examination.

He is very simple affable, accessible and unassuming. May his happy birthday return to him for ever with absolute happiness peace and tranguility.

**Dr.T.Perananatharajah**
**MBBS,MD,FRCP**
**Consultant Physician**
**Teaching Hospital Jaffna.**

---

### We wish you a very happy 75th Birthday Ammappa.

You are truly special and it is a celebration and tribute to remember for years.

May the God bless you with good health and happiness!

We got blessed by having a wonderful grandfather and we like to hear you calling us Jasmine and Rose. We love to sit on your lap and play with you.

Our one special wish is that you never get tired of being an amazing teacher and a person.

We hope that you will have a wonderful birthday filled with sweet memories to cherish always!

Lots kisses and hugs to Ammappa on your birthday!

**Jasmine (Aberam) & Rose (Suhan)**

---

### Happy 75th Birthday!

I am very blessed that I had one of the outstanding teachers in my life. your knowledge and wisdom have always inspired me. As you celebrate the joy of 75 years, I would like to express my gratitude for your dedication and guidance. May God Shower his choices blessings on you and your family.

**Greetings from Germany**
**Niruthika – Balamuhunthan.**

---

Heartiest felicitation on the occasion of the birthday of Mr.K.C.Sivasubramaniyam. May we fain felicitate him on his birthday. May his happy birthday be momentous and memorable event on the 8th of February every year.

Shall we pray to Lord Krishna for his longevity, Prosperity and Felicity.

**Dr.S.Jeyratnam**

---



### பவளவிழாக் காணும் புலோலியின் தலைசிறந்த ஆங்கில பேராசானே வாழி

இன்று பவளவிழாக் காணும் அன்பிற்கும் பண்புக்கும் உறைவிடமான மதிப்பிற்குரிய ஆங்கிலப் பேராசான் உயர்திரு. சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் அவர்களின் 75 ஆவது ஆண்டு அகவை நிறைவு நாளில் அவரிற்கு இனிய இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கக் கிடைத்த இவ் அரிய சந்தர்ப்பத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

புலவர் வாழ்ந்து பெருமை பெற்ற புலோலியம்பதியிலே அதன் பாரம்பரியமாக வழிவந்து புலவர்கள் புலமையின் சான்றாகத் திகழும் பேராசான் திரு. சி. சிவசுப்பிரமணியம் அவர்கள் கடந்த அரைநூற்றாண்டுகாலமாக ஆங்கில மொழியில் தன் புலமையை எமது சமூகத்திற்கு வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார். நடமாடும் ஆங்கில இலக்கண இலக்கியப்பொக்கிசமாக திகழ்பவர் எந்த ஒரு நூலையோ. குறிப்புக்களையோ பாராது எல்லாவற்றையும் தன் மனதில் இருத்தி அள்ள அள்ளக்குறையாத அட்சய பாத்திரம்போன்று ஆங்கில மொழி அவரின் நாவில் நடமாடும். அவரின் ஆங்கில வசன நடைப்பாணியே ஒரு தனிரகம் புலோலியிலும். யாழ்நகரிலும். தமிழ் நாட்டில் லயோலாக் கல்லூரியிலும் அவர்தன் ஆங்கில மொழிப்புலமையால் உலகெங்கும் ஏராளமான மாணாக்கர்களை தன் வாரிசாக உருவாக்கியிருக்கிறார்.

அவரின் மாணாக்கர்கள் பெரிய பெரிய வைத்தியக் கலாநிதிகள், பேராசிரியார்கள். கல்விமான்கள் உயர்தொழில் விற்பன்னார்கள் ஆக இருக்கிறார்கள். அவர் ஒரு பன்மொழிப்புலமை ஆற்றல் மிக்கவர். தமிழ். ஆங்கிலம் பிரெஞ்சு. இலத்தீன் ஆகிய மொழிகளை மிக இலகுவாக தனக்கேயுரிய தனித்துவமான பாணியில் மிகவும் இலகுவாக இனிமையாக கற்பிக்கும் ஆற்றல் மிக்கவர் தமிழ்நாட்டில் லயோலாக் கல்லூரியில் எட்டு ஆண்டுகள் ஆங்கில பிரெஞ்சு. இலத்தீன்மொழி விரிவுரையாளராகக் கடமையாற்றி பலரின் உள்ளங்களை வென்றவர். பேராசிரியர் மேத்தாவை கவர்ந்தவர். தமிழ்த்தாத்தா அறிஞர் கந்தமுருகேசனாரின் பிரதான சீடனாகத் திகழ்ந்து பண்டிதர் பரீட்சையில் சித்திபெற்றவர். இளங்கலை மாணிப்பட்டத்தைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும். முதுகலைமாணி பட்டத்தை யாழ்ப்பாணக் பகல்கலைக்கழகத்திலும் பெற்றவர். தனது இல்லத்திலும் யாழ்நகரிலும் ஆங்கில பாடத்தை திண்ணைப் பள்ளிமுறையாலே கற்பித்துவருகிறார். நேரம் காலம் பாராது கற்பிப்பதையே தன் வாழ்நாள்பணியாக வரித்துக்கொண்டவர். அன்பும் நகைச்சுவை யுணர்வுடன் கூடிய கண்டிப்பும் மிக்கவர் அவரின் அன்பு வலைக்குள் சிக்குண்டவர்கள் அதிலிருந்து மீளவே முடியாது. அவரின் ஆங்கில வசனநடையும். தமிழ் மொழிபெயர்ப்பும் எங்குமே காண முடியாது அற்புதமான தனியான தொரு பாணியில் அமைந்திருக்கும். அது இனிய நடையும் மொழிச் செழுமையும் கவரும் தன்மையுடையதாக இருக்கும்.

இத்தகைய பலசிறப்புகள் பொருந்திய பேராசான் அவர்கள் சிறப்பிற்கு அவரின் துணைவியார் என்றும் அவருக்கு உறுதுணையாகவே இருந்து அவரை நன்றாக அன்பாக பண்பாக வழிப்படுத்தி பக்கபலமாக இருப்பதும் ஒரு முக்கிய காரணமென்றால் அது மிகையாகாது. அவரின் சிறந்த கல்விச் சேவைக்குச் சான்றாக அவரின் இரு புத்திரிகளும் திகழ்கிறார்கள் எனினும் துரதிர்ஷ்டவசமாக அவர் தன் மூத்த புத்திரியை இழந்தமை அவரின் மனதில் இன்றும் நெருடலாகவே உள்ளது. இளைய புத்திரி ஐக்கிய அமெரிக்காவில் இருதய நோயில் நிபுணராகக் கடமையாற்றுகிறார். அவர் தம் பேரக் குழந்தைகளுடன் அன்பைச் சொரிந்து மகிழ்வதிலே பெரு விருப்புடையவர்.

இத்தகைய சிறப்புகளும் உடைய பேராசான் சிவசுப்பிமணியம் ஐயா அவர்கள் தன் 75 ஆவது நிறைவிலேயும் ஒரு நாளில் குறைந்தது 15 மணித்தியாலங்கள் வரை தன் இயலாத நிலையிலும் கற்பித்தல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் என்றால் அவரின் எண்ணங்கள் யாவும் தன் வாழ் நாளில் தான்பெற்ற அறிவையும். அனுபவத்தையும். ஆற்றலையும் எதிர்காலச் சந்ததிக்கு வாரிவழங்கவேண்டும் என்ற வள்ளல்தன்மையன்றி வேறேது? அவரின் மொழியாற்றலைக் கண்டு அவருடன் நட்பு பாராட்டுகின்ற ஏராளமான உயர் அரசியல் வாதிகள் கல்விமான்கள். உயர் வாண்மைத் தொழில்புரிவோர். நிர்வாகிகள் இருக்கிறார்கள். அவருக்காக தம்மை அர்ப்பணிக்க அவர்கள் என்றும் தயாராக இருக்கிறார்கள். கற்றோரைக் கற்றோரே காமுறுவர் என்பதை அவரின் வாழ்க்கையில் காணக்கூடியதாக உள்ளது. அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் தன்னுடைய குடும்பத்துடன் ஆரோக்கியமாக வாழ்ந்து இந்தச் சமூகத்திற்கு அரும்பணியாற்ற எல்லாம் வல்ல புற்றளைச் சித்தி விநாயகப் பெருமானின் ஆசியை வேண்டி அவர் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி அமைகின்றேன்.

**கி.குகநாதன்**
**அதிபர்,**
**யா/ புற்றளை மகாவித்தியாலயம்.**


## பவளவிழா ஏற்பாட்டுக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை விஜயகாந்தன் (காந்தி)



புங்குடு தீவு 7ஆம் வட்டாரம் கேரதீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை விஜயகாந்தன் 06.02.2019 புதன்கிழமை அகால மரணமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - இரத்தினபூபதி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சறோசாவின் அன்பு கணவரும் விஜிதரன், கோபிநாத், நிறோத், யனுஷா (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), பிரபாத்(மாணவன், புங்குடுதீவுகமலாம்பிகை வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிசாளினியின் (துசி) அன்பு மாமனாரும் நடேசலிங்கம், யோகராசா, விஜயரெட்ணம், பத்மயோகினி, ஜெயலட்சுமி, விஜயரூபன் (கொழும்பு), விஜயதீபன், அனுஷா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வனிதா, சசிகலா, காலஞ்சென்ற நிர்மலாதேவி மற்றும் காயத்திரி, சுகிர்தா, ஶ்ரீதரன், இரத்தினசிங்கம், கௌரி சங்கர், புஸ்பராணி காலஞ்சென்ற தர்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நயனிகாவின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**7 ஆம் வட்டாரம், ஊரதீவு,**
**புங்குடுதீவு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 003 4386**

*ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ!*



பிறப்பு 27 . 10 . 1939

இறப்பு 06 . 02 . 2019

## திருமதி ஜெயலட்சுமி நாகராஜா

## (இரத்தினக்கா)

யாழ். தட்டாதெரு அரசடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி நாகராஜா கடந்த (06.02.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - நேசரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் இராஜலட்சுமி, பராசக்தி, செல்வராஜா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ரேணுகாவின் சிறிய தாயாரும் கிருஷ்ணராஜ் (கண்ணன்), அரவிந்தன், மயூரன் ஆகியோரின் பெரிய தாயாரும் சோபிகா, மேனகாந் ஆகியோரின் மாமியாரும் பாரதிகா, கஜனிகா, ஜசிகா, அஸ்விதா, ஆதவ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**24, அரசடி ஒழுங்கை,**
**கே.கே.எஸ். வீதி,**
**தட்டாதெரு, யாழ்ப்பாணம்.** (CS 23702/15/17)

**தகவல்:**
**செல்வராஜா (சகோதரன் 076 857 1909)**
**கண்ணன் (பெறாமகன் 077 607 9112)**

## யாழ்ப்பாணம் மாநகர சபை

## 2019ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகளுக்கான கூறுவிலை கோரல்

யாழ் மாநகரசபைக்கு 2019ஆம் ஆண்டிற்கான பின்வரும் வழங்கல்கள்/சேவைகளுக்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் 01.03.2019 முதல் 30.09.2019 வரை 06 மாதங்களுக்கு விலை மாற்றமின்றி வழங்கும் வகையில் கோரப்படுகின்றன.


| பொருட்கள் | சேவைகள் |
|---|---|
| 01. காகிதாதிகள், எழுதுபொருட்கள் | 01. விளம்பரப் பலகைகள் அமைத்தல் (Reflecting sticker printing) |
| 02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரி) | 02. ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல் |
| 03. மேல்நாட்டு மருந்துவகைகள் | 03. கடைச்சல் இயந்திர வேலை - Support complete Repair, Kich Complete Repair, Tractor Trailer cup Axil works, ஏனைய சிறு கடைச்சல் வேலைகள். |
| 04. சித்த மருத்துவ மருந்துகள், மருந்துச் சரக்குகள் | 04. வாகன திருத்தம், சேர்விஸ். |
| 05. சிற்றுண்டி வகைகள் மற்றும் மதிய உணவு வகைகள், பிஸ்கற், தண்ணீர்ப்போத்தல், குடிபானங்கள் (Milk, Milo, Juice Packet, Juice Bottle & Juice Cup) | 05. வாகன Tingering & Painting Works. |
| 06. கோலவுடைத் துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிவகைகள் | 06. வாகன Seats, Interior works, Rubber மூடி அடித்தல். |
| 07. பாதணிகள் (Gum Boots), மழைக்கவசம், கையுறை, மூக்குக்கவசம், மற்றும் தோல்பொருட்கள் | 07. மின் மோட்டார்கள், மின்விசிறிகள், Rewinding & Raser மாற்றல். |
| 08. கட்டிடப்பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கூரைத்தகடுகள், சீலிங்வகைகள் முதலியன) | 08. மின் கலங்களிற்கு மீள மின்வலுவூட்டல் |
| 09. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள் முதலியன | 09. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல் |
| 10. கற்கள், சல்லிகள், கிறவல், கருங்கல் துகள்கள், மணல்கள். | 10. வாகன Injector Pump திருத்தம், சேவிஸ் செய்தல் |
| 11. மின்சார இயந்திரப்பொருட்கள், மின்கருவிகள் | 11. கணனிகள் சேவிஸ், திருத்தம். |
| 12. நீர்வழங்கு பொருட்கள், நீர் பம்பிகள், வடிகால் வேலை கழிவுநீர் அகற்றும் பம்பி, பி.வி.சி குழாய்கள் முதலியன | 12. Printer, Scanner, Fax Machine திருத்தம், சேவிஸ் செய்தல். |
| 13. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள் | 13. வளிச்சீராக்கி திருத்தம், சேவிஸ் செய்தல் |
| 14. தேங்காய் மட்டை, சாக்கு. | 14. வாடகைக்கு வாகனங்களை வழங்குதல் |
| 15. எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ் | 15. தார் கொழும்பிலிருந்து ஏற்றியிறக்கல் |
| 16. இரும்புப்பொருட்கள் | 16. Projector திருத்தம், சேர்விஸ். |
| 17. நிலவிரிப்பு | 17. மாநகரசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு அடித்தல் |
| 18. செரமிக் பொருட்கள் | |
| 19. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலியன | |
| 20. திராந்திகள், றீப்பைகள், பலகைகள் | |
| 21. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக்கயிறு, பாய், உரப்பை, இரண்டாம் தர உரப்பை, வாளி, பூட்டு, குப்பைக்கூடை, படங்கு முதலியன | |
| 22. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமிநாசினிகளும், மருந்துகளும் | |
| 23. கணனியுடன் தொடர்பான சாதனங்களும், தொலைநகல், Printer, Scanner வழங்கல். | |
| 24. Web Camera | |
| 25. Water filter, Water filter உதிரிப்பாகங்கள் வழங்கல் | |
| 26. குடிநீர் சுத்திகரிப்புக்குத் தேவையான குளோரின், சுண்ணாம்பு. | |
| 27. எரிவாயு | |
| 28. தீயணைப்புப் பொருட்கள் | |
| 29. நீர்த்தாங்கி | |
| 30. பொருத்துகைப் பொருட்களும், கண்ணாடி வகைகளும் | |
| 31. தானியவகை, அவல், சர்க்கரை. | |
| 32. தேயிலை, சீனி, அங்கர். | |

1. விலைக்கேள்விதாரர்கள் உரிய விநியோகத்திற்கேற்ற வியாபார பதிவுடையவராக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பிக்கத் தகுதியானோர் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா.500.00 இனை யாழ் மாநகரசபை முன்னரங்கு அலுவலகத்தில் செலுத்தி மேற்குறிப்பிட்ட வழங்கல், சேவைகளுக்கான மேலே 1. இல் குறிப்பிட்ட ஆவணத்துடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினையும் சமர்ப்பித்துக் கேள்வி ஆவணங்களை 11.02.2019ஆம் திகதி தொடக்கம் 22.02.2019ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப.9.30 தொடக்கம் பி.ப..4.00 மணிவரை யாழ் மாநகரசபையின் கொள்வனவுப்பகுதியில் பெற்றுக்கொள்ளமுடியும்.
3. பொருட்கள், சேவைகளின் வகைகள், தரம் கூறுவிலைகளில் குறிப்பிடப்படல் வேண்டும்.
4. பெருந்தொகையாகப் பொருட்களை விநியோகிக்கும்போது நேரடியாக வாகனத்தில் கொண்டுவந்து யாழ் மாநகரசபை களஞ்சியக்கிளையில் ஒப்படைத்தல் வேண்டும் (Bulk items - on the spot delivery).
5. கேள்விப்பத்திரங்கள் 25.02.2019ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், பெறுகைகள் குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ, பதிவுத் தபாலிலோ அலுவலக கேள்விப்பெட்டியில் இடமுடியும். கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் **கூறுவிலை இலக்கத்தினை** எழுதி அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறுபவை நிராகரிக்கப்படும்.
6. கேள்விகள் யாவும் 25.02.2019ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்குத் திறக்கப்படும்.
7. விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்கலாம்.
8. கேள்வி தொடர்பான கேள்விச்சபை/நிதிக்குழு இன் தீர்மானமே **இறுதித்தீர்**மானமாகும்.

தலைவர்
பெறுகைகள் குழு
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

## அம்பலவாணர் பரமேஸ்வரன்



பிறப்பு 18.12.1958 இறப்பு 07.02.2019

கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் பரமேஸ்வரன் நேற்று (07.02.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சாந்தினியின் அன்புக் கணவரும் சுஜீவன் (பிம்புத் பினான்ஸ்), டிசாந் (பிம்புத் பினான்ஸ்), நவீனன் (கிராமிய கூட்டுறவு சங்கம், கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவின் அதிபருக்கு ஆதரவு அளிப்போம் - ஈரான் தெரிவிப்பு



தெஹ்ரான்.பெப்.8
சிரியாவுக்குமுழுமையானபாதுகாப்புமற்றும்நிலைப்புத்தன்மையை வழங்குவதே ஈரானின் இலக்கு என்று ஈரான்அதிபர்ஹசன்ரவ்ஹானிதெரிவித்தார். ஈரான்முக்கியமான அயலுறவுக்கொள்கைகளில்சிரியாவில்நிலைப்புத்தன்மைமற்றும்முழுமையானபாதுகாப்பைஏற்படுத்துவதுதான்ஈரானின்அயலுறவுக்கொள்கையின்முக்கிய இலக்கு. சிரியா பழைய நிலைக்குத் திரும்ப வேண் டும். சிரியமக்கள்அவர்களதுவாழ்க்கையைவாழவேண்டும் என்று ரவ்ஹானி மேலும் தெரிவித்தார். சிரியாவின் அதிபர்பஷார்அல்ஆசாத்ஆட்சிக்குஎதிராகஉள்நாட்டுப்போராளிகள் 2014 ஆம் ஆண்டு முதல் போரிட்டு வருகிறார்கள். போராளிகளுக்கு ஆதரவாக அமெரிக்காவும், பஷார் அல் ஆசாத்துக்கு ஆதரவாக ரஷ்யாவும் செயற்பட்டு வருகின்றன.
இந்தநிலையிலேயேஅமெரிக்காவுக்குஎதிர்முனையாகச் சிரியாவின் அதிபருக்குக் கைகொடுக்கும் வகையில் ஈரான் கருத்து வெளியிட்டுள்ளது.

## சபரிமலை விவகாரம்

# அனைத்துப்பெண்களையும் அனுமதிக்கலாம் 'தேவசம் சபை' அடித்தது பல்டி

டெல்லி.பெப்.8
அனைத்துப்பெண்களையும்கேராளாவிலுள்ளசபரிமலைஐயப்பன்ஆலயத்துக்குள்நுழைவதற்குஅனுமதிவழங்கி உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து65வரையானமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.
சபரிமலையை நிர்வகித்துவருகின்ற திருவிதாங்கூர் தேவசம் சபையின் மனுவும்அவற்றில்ஒன்று. அந்தமனுக்களைத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் மற்றும் நீதிபதிகள் ஆர்.எப் நாரிமன், டி.ஒய். சந்திரசூட், ஏ.எம்கான்வில்கர், மற்றும் இந்து மல்ஹோத்ரா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் நேற்றுமுன்தினம் விசாரணைக்குட்படுத்தியது. ஐயப்பன் திருமணமாகாதவர் என்பது அரசியல் சாசனத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட தனிச்சிறப்புமிக்க மத அம்சம் என்று இதுவரைக் கூறி வந்த, தேவசம் சபை, . அதற்கு மாறாக இதன்போது கருத்து வெளியிட்டது.
தேவசம்சபைசார்பாகமுன்னிலையாகியவழக்கறிஞர்ராகேஷ்திவேதிதனது வாதத்தில், "சபரிமலைக் கோவிலுக்குள்பெண்கள்நுழைவதில்தவறுகிடையாது. சபரிமலையில்பெண்கள்நுழைவுக்கு எதிராகப் பழக்க வழக்கங்கள் இருந்ததாக ஆதாரம் இல்லை. அதனால்அதைக்கடைப்பிடிக்கவேண்டிய அவசியம் கிடையாது. நாங்கள் பெண்கள் நுழைவை ஆதரிக்கிறோம் என்றார். இதைக்கேட்டுஅதிர்ச்சிஅடைந்த, நீதிபதி இந்து மல்ஹோத்ரா "என்ன இது? ஏன்நிலைப்பாட்டைமாற்றிஇருக்கிறீர்கள். நீங்கள் தானே பெண்கள் நுழைவுக்குஎதிராகப்பேசியது" என்று கேள்வி எழுப்பினார். இதையடுத்து திவேதி நாங்கள் பெண்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து இருக்கிறோம். பெண்களை அனுமதிக்கும் உச்சநீதிமன்றத்தீர்ப்பைமதிக்கிறோம். பெண்கள் நுழைவை எதிர்ப்பது சம உரிமைக்கு எதிரானது. சமஉரிமைதான் அரசமைப்பின் முக்கிய நோக்கமே. சபரிமலையில்அனைத்துவயது பெண்களையும் அனுமதிக்கலாம்" என்று கூறினார்.

**பின்னணி**
கேரளாவிலுள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்தில் பருவமடைந்த பெண்கள் தரிசனம் செய்வது தவிர்க்கப்பட்டிருந்தது. பெண்களின் உரிமை மீறப்படுவதாகவும், பெண் அடிமைத்தனம் தொடர்வதாகவும் இதுகுறித்து இந்திய உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பெண்களை கோயிலுக்குள் அனுமதிக்காதது மாதவிடாய் என்ற காரணத்தால் மட்டுமல்ல, அது ஐயப்பனின் விருப்பத்துடன் தொடர்புடையது என்று இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இந்து அமைப்புகள் கூறின. வழக்கை விசாரித்த நீதிமன்று சபரிமலைக்குச் செல்வதற்கு அனைத்து வயதுப்பெண்களுக்கும்அனுமதியளித்துத் தீர்ப்ப ளித்தது. ஆனால் நீதிமன்றத் தீர்ப்புக்குஎதிராகப்போராட்டங்கள்நடந்தன. சபரிமலையை நோக்கிய பெண்களின் பயணமும் நிகழ்ந்து முரண்பாடுகளைத் தோற்றுவித்தது. நீதிமன்றத்தீர்ப்புக்குஎதிராகமனுத்தாக்கல்கள் நிகழ்ந்தன.

# சிங்கமும் இளைஞனும் நேருக்கு நேர் மோதல் இளைஞனுக்கு வெற்றி

கொலோரடோ.பெப்.8
சிங்கத்துடன்நேருக்குநேர்மோதிய இளைஞர். இறுதியில் சிங்கத்தைக்கொன்றார். இந்தச்சம்பவம்அமெரிக்காவின் கொலோரடோப்பகுதியில்நடந்தது. தற்போது அந்த இளைஞர்காயங்களுடன்மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டுள்ளார். கொலோரடோ பகுதியின் மலையடிவாரத்தில் சிங்கங்கள்அதிகஅளவில்காணப்படுகின்றன. இந்தநிலையில் மலையடிவாரத்தில் குறித்த இளைஞர் நடைப் பயிற்சியில் ஈடுபட்டார்.



அவரைப் பார்த்த சிங்கம் ஒன்று, எதிர்பாராத விதமாகப்பதுங்கிவந்து அவர் மீது பாய்ந்தது. பின்புறத்தில் இருந்து தாக்கப்பட்ட இளைஞரைமீண்டும்தாக்கிய சிங்கம், தனது பற்களால்இளைஞரின்மணிக்கட்டைக்கடித்துஇழுத்தது. இதில் இளைஞரின்முகம், மணிக்கட்டில்பலத்தகாயங்கள்ஏற்பட்டன. அதன்போது இளைஞர், சிங்கத்தின் தலையைப் பிடித்துஅருகில்இருந்தபாறையின்மீதுமோதினார். சிங்கம் அவரது மணிக்கட்டை விடும்வரை மோதிக்கொண்டே இருந்தார். பாறையில் பலமுறை மோதியதால் சிங்கம், உயிரிழந்தது. பின்னரேஅவரதுமணிக்கட்டும்விடுபட்டது. பலத்த காயங்களுக்குள்ளான அந்த இளைஞர் பின்னர் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.



# இந்துக் கோவிலுக்குத் தீ வைப்பு பாகிஸ்தானில் பரபரப்புச் சம்பவம்

இஸ்லாமபாத்.பெப்.8
பாகிஸ்தானின்சிந்துமாகாணத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற இந்துக்கோவில்ஒன்றுக்குள்நுழைந்த இனம் தெரியாத நபர்கள் அந்தக் கோவிலை அடித்து நொருக்கிச் சேதப்படுத்தியதுடன் அதற்குத் தீ வைத்தும் சென்றனர். இந்தச் சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது. கோவிலில் இருந்த புனித நூல்களுக்கும், சிலைகளுக்கும் தீயில் கருகின. கடந்த வாரம் நடந்த இந்தச் சம்பவத்துக்குப் பாகிஸ்தான் தலைமைஅமைச்சர்இம்ரான்கான் கண்டனம் தெரிவித் தார்.
அத்துடன், குற்றவாளிகளைக் கண்டுபிடித்துப் பொலிஸார் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும்இதுபோன்றசெயல்கள் குரானின்போதனைகளுக்குஎதிரானது எனவும் தனது கீச்சகப் பக்கத்தில் குறிப்பிட்டார். இந்தக் கோவில் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் இருப்பதால், பாதுகாப்புக்கு எவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.
இந்தச்சம்பவத்துக்குப்பின்னர் அந்தப் பகுதியில் உள்ள இந்துக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
கோவிலைச் சேதப்படுத்திய குற்றவாளி கள் மீது விரைந்து நடவடிக்கைஎடுக்குமாறுபொலிஸ்நிலையத்தில் முறைப்பாடும் அளித்தனர்.
இஸ்லாமியர்கள் செறிந்து வாழும் பாகிஸ்தானில் 220 மில்லியன் மக்களில், 2சதவீதம்இந்துக்கள்என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனா டொலர்களை வாரி வழங்குகிறது

## அமெ. அதிபர் ட்ரம்ப் பெருமிதப் பேச்சு

வோஷிங்டன்.பெப்.8
அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அண்மையில்காங்கிரஸ்கூட்டுஅமர்வில் உரையாற்றினார். அந்த உரையில், 'அமெரிக்காவின்வேலைகளையும்செல்வங்களையும், அறிவுசார் சொத்துடைமைகளையும் திருடிச்செல்லும் சீனா, நம் தொழிற்துறையைக் குறிவைப்பதற்கு இனி முடியாது. அனைத்தும் முடிவுக்கு வந்துவிட்டது என்று நாம் சீனாவுக்குத் தெள்ளத் தெளிவாக அறிவித்துள்ளோம். ஆகவேதான், சீனப்பொருள்கள்மீதுநாம் 250 பில்லியன் டொலர்கள் கூடுதல் வரியைச் சுமத்தினோம். இப்போது நமக்குச் சீனாகோடிகோடியாகக்கொட்டிக்கொண்டிருக்கிறது.' என்று தெரிவித்தார்.
சீனப் பொருள்களுக்கான வரியை அதிகரித்ததால் அமெரிக்கப் பொருள்கள் சீனப் பொருள்களை விட மலிவாகக் கிடைக்கின்றன என்று கூறிய ட்ரம்ப், இந்த விடயத்தில் தான் சீனாவைக் குறை கூற மாட்டேன் என்றும் இதற்கு முன்னால் அமெரிக்காவை ஆண்ட தலைவர்களின் தவறுகள் அவை என்றும் தெரிவித்தார்.
அமெரிக்காவின் பொருளாதார வெற்றிகளைத் தொடர வேண்டுமெனில் காலங்காலமாகஇருந்துவரும்மோசமானவர்த்தகக் கொள்கைகளைத் தலைகீழாக்க வேண்டும் என்று ட்ரம்ப் தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இதுவரை அமெரிக்காவை ஆண்ட அதிபர்களைத் தாழ்த்தித் தன்னைப் பெருமைகொள்ளச் செய்யும் நோக்கில் ட்ரம்ப் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார் என்கின்றனர் பன்னாட்டு அரசியலவதானிகள்.



# ரோஹிங்கியாக்களுக்கு நியாயம் வேண்டும் நடிகை ஏஞ்சலினா ஜூலி வேண்டுகோள்

டாக்கா.பெப்.8
பங்களாதேஷின் காக்ஸ் பஸார் மாவட்டத்தில்சுமார்7 இலட்சத்து 40ஆயிரம்ரோஹிங்கியாமுஸ்லிம்கள் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தமுகாம்களுக்குச் சென்று, மியன்மாரில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட வன்முறையால்பாதிக்கப்பட்டரோஹிங்கியப் பெண்களைச் சந்தித்தார் ஹொலிவூட்நடிகை ஏஞ்ஜலினா ஜூலி. 'மியான்மரின் ராக்கைன் மாநிலத்தில் ரோஹிங்கியார்கள் கால்நடைகளைப்போலநடத்தப்பட்டிருக்கிறார்கள். பெண்கள் வன்புணர்வுக்குஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று அவர்கள் நாடற்றவர்களாகப்பக்கத்துநாடுகளில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வீடு திரும்பவேவிரும்புகிறார்கள். மியான்மரில்நடக்கும்வன்முறைகள்முடிவுக்குக்கொண்டுவரப்படவேண்டும்' என்று அதன்போது அவர் கருத்துரைத்தார். ரோஹிங்கியா அகதிகளுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் நிதி திரட்டுவதற்காக மூன்று நாள் பயணமாக அவர் அங்கு சென்றிருப்பதுகுறிப்பிடத்தக்கது.

**ரோஹிங்கியர்கள் விவகாரம்**
மியான்மரின் ராக்கூன் மாகாணத்தில் நீண்ட காலமாக முஸ்லிம்கள் அதிக அளவில் வசித்தனர். அவர்களுக்குக்குடியுரிமை வழங்குவதற்குமியன்மார்அரசு மறுத்து வந்தது.
முஸ்லிம்களுக்கும் அந்த நாட்டின் பெரும்பான்மையினரான பௌத்த மதத்தினருக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டது. இந்த மோதல் கடந்த ஆண்டுஓகஸ்ட்மாதம்உச்சக்கட்டத்தை எட்டியது.
இஸ்லாமியர்கள் மீது கொடூரத் தாக்குதல்கள்நடத்தப்பட்டதுடன், அவர்களது இருப்பிடங்கள் அழிக்கப்பட்டன. பெண்களுக்கு எதிரான பாலியல் வதைகளும் நடந்தன. பெரும்பான்மையினருடன்இணைந்துஇனஅழிப்புத் தாக்குதலில்அந்தநாட்டுஇராணுவமும் இஸ்லாமியர்களுக்கு எதிராக ஈடுபட்டது.
இதனால், அங்கிருந்து இலட்சக்கணக்கானரோஹிங்கியா இஸ்லாமியர்கள் பக்கத்து நாடான பங்களாதேசத்தில் அகதிகளாகக் குடியேறினர்.
இந்த விவகாரத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற பன்னாட்டுச் செய்திச்சேவையின்செய்தியாளர்கள் இருவர் மியன்மார் அரசால் சிறைப்பிடிக்கப்பட்டனர். இந்த விவகாரம்தொடர்பாகமியன்மாரின் தலைவர் ஆங் சாங் சூகிக்கு அவப் பெயர் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழரின் ஒற்றுமை!

தேர்தல் காலம் நெருங்க நெருங்க தமிழ் கூறும் அரசியல் நல்லுலகில் ஒற்றுமை குறித்த கதையாடல்கள் அதிகரித்து வருகின்றமையைப் பார்க்க முடிகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் போன்றவற்றில் ஒன்றாகப் போட்டியிட்டவர்கள், தமது சுய நலன்களுக்காக, தமிழ் மக்களின் பொது நன்மைக்காக என்று முழக்கமிட்டுக்கொண்டு ஒற்றுமையைக் காற்றில் பறக்கவிட்டு, மக்களின் ஆணையைத் தூக்கி வீசிவிட்டு தனித் தனியே போனவர்கள் எல்லோரும் இப்போது ஒற்றுமையைப் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டார்கள். அதற்கான முழுக் காரணமும் ஒரே காரணமும் வாக்குகளை வேட்டையாடுவதுதான்.

யார் யாரோடு அரசியல் கூட்டு வைத்துக் கொள்வது என்பதில் தொடங்குகிறது இந்த ஒற்றுமைப் படலம். ஏனெனில் தனித் தனியாகக் கேட்டால் ஒற்றையாசனத்தைக்கூடத் தம்மால் கைப்பற்ற முடியாது என்கிற உண்மை பல தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் தெரியும். தனித்துப் போட்டியிட்டால் தாம் பெறக்கூடிய வாக்குகளைவிட கொழும்பில் ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் சிங்களக் கட்சிகளின் தமிழ்க் கையாள்கள் அதிகளவில் பெற்றுக்கொள்வார்கள் என்பதை உணர முடியாத அளவுக்கு முட்டாள்கள் அல்லர் அவர்கள்.

அதனால்தான் தொடங்கப்படுவதற்கு முன்னரே தேர்தல் கூட்டணி குறித்துச் சில தமிழ்க் கட்சிகள் பேசத் தொடங்கி விடுகின்றன என்கிற அபத்தமும் இங்கு நிகழ்ந்தேறுகிறது. இப்போது தமிழ் அரசியலின் முன்னணியில் உள்ள குதிரையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கப் போவதில்லை என்கிற வாக்குறுதிகளோடு கொள்கை ரீதியான ஒற்றுமை பற்றிய பேச்சுத் தொடங்கப்படுகிறது.

தமிழர் ஒற்றுமை, இன ஒற்றுமை, தமிழ்த் தேசியம், தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமை, கொள்கை ரீதியான ஒற்றுமை என்கிற சொல்லாடல்கள் எல்லாவற்றுக்குமே தமிழ் அரசியலில் ஒரே பொருள்தான். தேர்தலில் வாக்குகளை வேட்டையாடுவதற்கான உத்தி என்பதுதான் அதன் பொருள். தேர்தலில் எத்தனை ஆசனங்களைக் கைப்பற்ற முடியும் என்கிற ஆசைக்கு மறு பெயர்கள்தான் மேலே குறிப்பிடப்பட்ட சொற்கள் அனைத்தும். கடந்த 30 ஆண்டுகால அரசியலில் தமிழ் மக்கள் கண்டுணர்ந்த வரலாற்று உண்மை இது.

திம்பு முதற்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி வழியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரைக்கும் ஒற்றுமை என்பதன் வழியாகப் பெறப்பட்ட ஒரே அடைவு நாடாளுமன்ற ஆசனங்களே தவிர வேறொன்றும் இல்லை. புதிய மொந்தையில் பழையகள்ளைப் போல மீண்டும் மீண்டும் புதிய சொல்லாடல்களுடன் ஒற்றுமை பற்றிப் பேசி வரும் அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் அனைவரது நோக்கமும் வாக்குகள் மட்டுமே தவிர வேறெதுவும் இல்லை.

தமிழ் மக்களின் பிரச்சினையைக் கொள்கை ரீதியில் அணுகுவதற்கு ஒற்றுமை பற்றிப் பேசும் அரசியல் தலைவர்கள் அனைவரும் விரும்பியிருப்பார்களாயின் மக்கள் வாக்குகளைப் பெறும் அரசியல் கட்சி எதுவோ அது மக்களாணையில் இருந்து விலகிப் போகாத வகையிலான அழுத்தக் குழுக்களாகச் செயற்பட்டிருப்பார்கள். மக்கள் ஆணையைப் பெற்ற அரசியல் கட்சி ஒன்று அதிலிருந்து வழுகிச் செல்லும்போதும் மக்களைத் திரட்டிப் போராடி அந்தக் கட்சியை மீண்டும் சரியான வழிக்குக் கொண்டுவருபவர்களாக இருந்திருப்பார்கள்.

அண்ணன் எப்போது சாவான், திண்ணை எப்போது காலியாகும் என்று எண்ணிக் கிடப்பவனைப்போன்று, மக்களாணை பெற்ற கட்சி எப்போது வழி தவறும் அந்த இடைவெளியில் புகுந்து நான் ஒரு அரசியல் கட்சியைத் தொடங்கி அதிகாரத்தைப் பிடித்துவிடலாம் என்று நினைத்திருக்க மாட்டார்கள்.

அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு அதன் போதையை அனுபவிக்கத் துடிப்பவர்கள்தான், தேர்தலின்போது ஒற்றுமை குறித்து முழக்கமிடப்போகிறார்கள். அதற்காக அவர்கள் இப்போதே தங்க முலாம் பூசப்பட்ட வார்த்தைகளைத் தடவத் தொடங்கிவிட்டார்கள்.

அப்படியென்றால், தமிழ் மக்களுக்கு அரசியல் ஒற்றுமை தேவையில்லையா என்கிற கேள்வி எழலாம். ஒற்றுமை தேவைதான். ஆனால், அந்த ஒற்றுமை அரசியல்வாதிகளை வாழ வைப்பதற்கானதாக இருக்கக்கூடாது, அது இனத்தை வாழ வைப்பதற்கானதாக இருக்கவேண்டும். கொழும்பு அரசுக்கு எதிரானதாக இருக்கவேண்டும். தமிழ் இன அடக்குமுறைக்கு எதிரானதாக இருக்கவேண்டும். பிரிக்கப்பட முடியாத ஒரே நாட்டுக்குள்கூட ஒரு தீர்வைத் தரமாட்டோம் என்கிற பௌத்த சிங்கள பேரினவாதச் சக்திகளுக்கு எதிரானதாக இருக்கவேண்டுமேயல்லாமல், இதையெல்லாம் செய்வோம் என்று, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் போலி வேசம்போடும் அரசியல்வாதிகளுக்கானதாக அந்த ஒற்றுமை இருக்கக்கூடாது.

மக்களே! உங்கள் ஒற்றுமை வாக்குப் பெட்டிகளை நிரப்புவதற்கான தாக அல்ல, அறவழிப் போராட்டக் களங்களை நிரப்புவதற்கான இருக்க வேண்டும். அதுதான் ஒரு தீர்வையோ விடுதலையையோ வென்றெடுப்பதற்கான ஒரே வழி.



# மன்னார் புதைகுழியும் நிலவும் சந்தேகங்களும்

ஜோசப் நயன்

மன்னார் மாவட்டம் தீவகப் பகுதி, பெரு நிலப் பகுதி என்று இரு பெரும் பகுதிகளைக் கொண்டது. பெரு நிலப் பகுதி பெரும்பாலும் மக்கள் விகிதாசாரத்தில் குறைவாகக் காணப்பட்டது. போர்க் காலத்தில் பெரும் நிலப் பகுதியில் சில பகுதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் வசம் காணப்பட்டன. சில பகுதிகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் பெரு நிலப் பகுதியில் தங்களின் முகாம்களையும், மாவீரர் துயிலும் இல்லங்களையும் அமைத்திருந்தார்கள். பெரும் நிலப் பகுதிக்குரிய விடயங்களுக்கு இராணுவம், புலிகள் என்று இரு தரப்புமே பதில் சொல்லவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

ஆனால் மன்னார் மாவட்டத்தின் தீவகப் பகுதியானது போர் தொடங்கிய காலப் பகுதியிலிருந்து இராணுவத்தினரின் பிடியில் மாத்திரமே இருந்தது. இராணுவத்தினதும், கடற்படையினதும் கண்ணுக்குத் தெரியாமல் ஈ, காக்கா கூட தீவக நிலப் பரப்புக்குள் நுழைய முடியாத சூழலே நிலவியது. அந்தளவு தூரம் கழுகுக் கண் பார்வையுடன் பாதுகாப்புத் தரப்பினர் இருந்தனர்.

மன்னார் நகரத்தின் நுழைவாயிலில், அதாவது தீவக நிலப் பரப்பில் சதொச கட்டடம் அமைப்பதற்கு மண் தோண்டப்பட்டது. அந்த மண்ணில் சந்தேகத்துக்கு இடமான வகையில் எலும்புக் கூடுகள் காணப்பட்டன. அதனையடுத்து அந்தப் பகுதி ஆழமாக, அகலமாக மேலும் தோண்டப்பட்டபோது மேலும் பல எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கு அமைவாக, சட்டமருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தலைமையில் தொல்லியல்துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ் உள்ளிட்ட குழுவினர் அந்தப் பகுதியில் ஓராண்டுக்கு மேலாக அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை 247 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 26 சிறுவர்களினுடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் இரு விதமான பகுதிகளில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

### மத்திய பகுதி

மத்திய பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் அதிகம் சிதைவடைந்தனவாகவும் ஒழுங்கான முறையில் புதைக்கப்பட்டும் காணப்பட்டன.

### வளாகத்தின் ஓரப்பகுதி

வளாகத்தின் ஓரப்பகுதியில் ஆரம்பத்தில் சில மண்டையோடுகளே தென்பட்டன. ஆனாலும் தோண்டத் தோண்ட அதிர்ச்சியளிக்கும் வகையில் கொத்துக் கொத்தாக மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன. இந்த மனித எச்சங்கள் சிதைவுகள் குறைவாகவும் அதே நேரத்தில் அவசர அவசரமாக புதைக்கப்பட்டதைப் போன்றும் காணப்பட்டன. அதேநேரத்தில் ஒன்றுடன் ஒன்று கோர்த்த விதமாகவும் முறையற்ற விதமாகவும் காணப்பட்டது.

அதைத் தொடர்ந்து மத்திய பகுதியை விடுத்து ஓரப்பகுதியை ஆழப்படுத்தியும் அகலப்படுத்தியும் அகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போதே சகலரது கவனமும் மன்னார் புதைகுழி வளாகம் மீது திரும்பியது. இங்கே மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் அவதானிப்புக்குரியனவாகவும் இருந்தன.

கால்கள் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டதாக, கைகள் இரண்டும் விடுவிக்கமுடியாதவாறு கட்டப்பட்டதாக, தாய் குழந்தை அருகருகே இருக்கத்தக்கதாக, சங்கிலியால் பிணைக்கப்பட்டதாக, வாய்கள் கொடூரமாக திறக்கப்பட்டதாக, எலும்புகளில் காயங்கள் காணப்படுவதாக இவை இருந்தன.

இந்தப் புதைகுழியில் பெருமளவு மனித எலும்புக் கூடுகள் தொடர்ச்சியாக மீட்கப்பட்ட சூழலில், இது தொடர்பில் பல கதைகள் மக்கள் மத்தியில் உலாவந்தன.

அந்தப் பகுதி முஸ்லிம் மக்களின் மையவாடி என்று கூறப்பட்டது. அவ்வாறு மையவாடியாகவோ மயானமாகவோ இருந்திருந்தால், உடல்கள் ஒன்றுடன் ஒன்று ஒரே சீராக அதே நேரம் ஒரேயிடத்தில் இவ்வளவு புதைக்கப்பட்டிருக்குமா என்ற நியாயமான கேள்வி எழுகின்றது.

மன்னாரில் பரவிய ஒரு நோயால் உயிரிழந்திருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. அப்படியானால் ஏன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கவேண்டும்? எலும்புக் கூடுகளில் ஆடைகளின் எச்சங்கள் காணப்படவில்லையே? இதுவும் நியாயமான கேள்விகளே.

சங்கிலிய மன்னனால் மதம் மாறியவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. ஆனால் அதற்கான வரலாற்று ஆதாரங்கள் எவையும் முன்வைக்கப்படவில்லை.

இறுதியாக பலமான சில சந்தேகங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இராணுவம் அல்லது கடற்படையினருக்குத் தெரியாமல் இவை நடந்திருக்க வாய்ப்பில்லை. அவர்களின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இருந்த இந்தப் பகுதிக்குள் அவர்களுடன் இணைந்து இயங்கிய ஒட்டுக்குழுக்களால் இவை நடத்தப்பட்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, 2009ஆம் ஆண்டு போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் பேருந்துகளில் ஏற்றிச் செல்லப்பட்டார்கள். அவர்களாகக் கூட இருக்கலாம் என்ற பலமான சந்தேகம் மக்களிடம் எழாமல் இல்லை.

இந்தச் சந்தேகங்கள், வினாக்களுக்கு இன்று பெரும்பாலும் முடிவு கிடைக்கக் கூடும். இங்கு மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் மாதிரிகள் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்துக்கு கார்பன் பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளன. கார்பன் பரிசோதனை என்பது, எலும்புக் கூடுகள் புதைக்கப்பட்ட காலத்தைக் கண்டறிவதற்கான சோதனை முறையாகும். இதன் முடிவு இன்று வெளியாகும்போது, இருட்டில் நடந்த பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வரக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துவின் மைந்தர்களின் வழிகாட்டியான தந்தை

## அதிபர் இ.சபாலிங்கத்தின் 100ஆவது பிறந்த தினம்

கலாநிதி ஆறு.திருமுருகன்



எம்மண்ணில்தன் ஆளுமையால் நிலைத்து நிற்கும் புகழைப் பெற்ற அமரர் இ.சபாலிங்கத்தின் ஜனன நூற்றாண்டை உலகம் முழுவதும் வாழும் இந்துவின் மைந்தர்கள் பெருமையோடு கொண்டாடி வருகிறார்கள்.

**பிறப்பு**

1919ஆம் ஆண்டு மாசி மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இளையதம்பி லட்சுமிப்பிள்ளை தம்பதியினருக்கு புதல்வனாகப் பிறந்தவர் அமரர் இ.சபாலிங்கம். நல்லைநகர் நாவலர் பெருமானின் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியை கற்ற இவர் தந்தையாரோடு மலேசியா நாடு சென்று கோலாலம்பூர் விக்ரோரியாக் கல்லூரியில் தனது இடைநிலைக்கல்வியைத் தொடர்ந்தார்.

**கல்வி**

1932இல் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்றார். 1931ஆம் ஆண்டுவரை இந்துக் கல்லூரியில் விளையாட்டுத்துறையில் சிறந்த விளையாட்டு வீரனாக பலருக்கும் அறிமுகமானார். இவரது உடன்பிறந்த சகோதரன் இ.கனகலிங்கமும் (முன்னாள் அதிபர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) கால்பந்தாட்டத் துறையிலும் ஏனைய விளையாட்டுத் துறையிலும் கல்லூரிக்குப் பெருமை தேடிக் கொடுத்தனர். இந்துக் கல்லூரியில் இருந்து யூனியர் கேம்பிரிஜ் சான்றிதழ், லண்டன் மற்றிக்குலேசன் சான்றிதழ், இன்ரர்மீடியற் (விஞ்ஞானம்) பரீட்சைகள் யாவற்றிலும் மிகச் சிறந்த பெறுபேறு பெற்றார். 1937ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக கல்லூரிக்கு தெரிவாகி விஞ்ஞானமானி பட்டம் பெற்றார்.

கணிதத்துறையிலும், பௌதீகத்துறையிலும் சிறந்த விற்பன்னராக விளங்கிய இவரை பல தனிமுகாமைத்துவ கல்லூரிகள் ஆசிரியப்பணிக்காக அழைத்தன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிகாரசபை 1942ஆம் ஆண்டு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இவரை ஆசிரியராக நியமித்தது.

**ஆசிரியப் பணி**

கணிதத்துறையிலும், பௌதீகத்துறையிலும் சிறந்த விற்பன்னராக விளங்கிய இவரை பல தனிமுகாமைத்துவ கல்லூரிகள் ஆசிரியப்பணிக்காக அழைத்தன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிகாரசபை 1942ஆம் ஆண்டு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இவரை ஆசிரியராக நியமித்தது. உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இருந்து அரச ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்று பட்டப்பின் ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெற்றார். பயிற்சி நிறைவடைந்ததும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகத் தனது சேவையைத் தொடர்ந்தார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தர விஞ்ஞானத்துறைக்கு பொறுப்பாசிரியராக அரிய சேவையை ஆற்றினார். 1960இல் கொக்குவில் இந்துக் கல்லூரி உப அதிபராக நியமிக்கப்பட்டார். பின் 1964 முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபராக தன்பணி தொடர்ந்தார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இவர் பொறுப்புக்களை ஏற்றபோது பெரும் சவால்களை சந்தித்தார். ஆனால் எதற்கும் அஞ்சாத ஆளுமை மிக்க அதிபர் அவர்கள் தன் ஆற்றலை வெளிப்படுத்தி அனைத்து சவால்களையும் முறியடித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வித்துறையும் விளையாட்டுத்துறையும் இவரது சேவைக்காலத்தில் மிக உன்னத நிலையை அடைந்தது. அந்தக் கல்லூரியில் அதிபர் தரத்தில் உயர்வு பெற்று பெருமை பெற்றார். 1971ஆம் ஆண்டு ஜூன் மாதம் தன் தாய் வீடு போல் என்றும் கருதிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராக பதவியேற்றார். 1975 ஓகஸ்ட் வரை இந்துக் கல்லூரியின் அதிபர் அரியாசனத்தை மிக உன்னதமாக அலங்கரித்தார். சகல துறைகளிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தேசியமட்டத்தில் துலங்குவதற்கு வித்திட்டார். கூடுதலான மாணவர்கள் இவரது காலத்தில் இந்துக் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகம் செல்லும் நிலையை உருவாக்கினார். இந்துக் கல்லூரியில் அனுமதி பெற வேண்டும் என்று இலங்கையின் பல பாகங்களிலிருந்து மாணவர்கள் இந்துக் கல்லூரியை நாடி வந்தனர். விடுதிச்சாலை நிரம்பி வழிந்தது.

**ஆளுமை**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பதவியேற்ற அன்றே தன் ஆளுமையை வெளிப்படுத்த தொடங்கினார். தண்ணீரைக் குடித்துவிட்டு குழாய் சரியாக மூடாத மாணவனுக்கு முதுகில் போட்டார். வந்த அன்றே மாணவர்கள் திடுக்குற்றனர். ஆசிரியர் இல்லாத வகுப்பில் தானே சென்று வகுப்பு எடுக்கத் தொடங்கினார். கல்லூரி அதிர்ந்தது. பிரார்த்தனை மண்டபத்தில் இருமருங்கிலும் ஆசிரியர்கள் காத்துநின்றனர். வரிசை குழப்பிய மாணவனுக்கு இரண்டாம்நாள் வீழ்ந்த அடி அனைவரையும் அதிரவைத்தது. பிரார்த்தனை மண்டபத்தில் தினமும் ஐந்து நிமிடம் அவர் ஆற்றும் உரை மந்திரமாக விளங்கியது. கடிகாரம் ஓடும்முன் கடமைக்கு வந்துவிடுவார். தாமதமாய் வந்தவர்கள் இவரது பார்வையிலே அகப்பட்டுத் திருந்தினர். சமய விழாக்கள் யாவும் ஒழுங்காக நடைபெற்றது. வெள்ளிக்கிழமைகளில் அதிகாலை 4மணிக்கு நல்லூரை நோக்கி மாணவர்கள் நடந்து செல்லவேண்டும். கந்தர்மடத்தில் இருந்து அதிபரும் இணைந்து கொள்ளுவார். ஓர் கட்டளைத் தளபதிக்கு கீழ் படைவீரர்கள் பிரதானிகள் செல்வதுபோல் அதிபருக்கு பின்னால் இந்துக் கல்லூரி மாணவர்கள் வெள்ளிக்கிழமைப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட காட்சி மெய்சிலிர்க்க வைத்தது. அகில இலங்கை சேக்கிழார் கழகத்தில் தலைவராக விளங்கிய அதிபர் தனது சேவைக்காலத்தில் நடத்திய சேக்கிழார் விழாக்கள் என்றும் மறக்கமுடியாது.

**அஞ்சாநெஞ்சன்**

நேரம் தவறாத, நேர்மை தவறாத நேர்த்தியான தலைமைத்துவத்தை நிலைநாட்டிய அதிபர் சபாலிங்கத்திடம் யாருடைய பரிந்துரையும் எடுபடுவதில்லை. அரசியல்வாதிகள் கல்லூரி வளவுக்குள் வருவதில்லை. அதிகாரிகள் கல்லூரி வளவுக்கு வருவதற்கு அஞ்சுவர். மந்திரியின் பரிந்துரையோடு பாடசாலை அனுமதி கோரி வந்தவரின் கடிதத்தை, கொண்டு வந்தவர் முன்னிலையி லேயே கிழித்து குப்பைத்தொட்டியில் போட்டார். சிமோல் அருளம்பலம் இந்துவின் பழைய மாணவன். நல்லூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர். கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் முக்கிய மானவர். அவரது பரிந்துரையை நிராகரித்தார். அவருக்கே தொலைபேசியில் நண்பரே என்னைக் குழப்பாதே என்றார். இந்தத் துணிவு இனிமேல் எவரிடமாவது காணமுடியுமா?

1972ஆம் ஆண்டு கல்வி அமைச்சர் பதியுதீன் முகமத் இந்துக் கல்லூரிக்கு வருவதாக அறிவித்தார். தரப்படுத்தலால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் கறுப்புக் கொடிகளைக் காட்டினர். கல்லூரிச் சுவர் எல்லாம் எழுதித்தள்ளினர். திணைக்களம் சார்ந்தவர்கள் மீளவும் வர்ணம் தீட்டினார்கள். மீண்டும் எழுதப்பட்டது. அதிபர் சபாலிங்கம் அழைப்புக் குழுவினருக்கு எடுத்துரைத்தார். மாணவர் குமுறலை அமைச்சரும் அறியட்டும், இனி எழுதியதை அழிப்பதால் பயனில்லை. அமைச்சர் வந்தார். அதிபர் தலைமையுரையிலேயே மாணவரின் கொந்தளிப்பு பற்றி எடுத்துரைத்தார். என்ன நடக்குமோ என சிலர் அஞ்சினர். எதுவும் நடக்கட்டும் என்று அதிபர் துணிந்தார்.

**நேரம் தவறாமை**

பாடசாலை விழாக்களுக்கு மிகத் தகுதியானவர்களை அழைப்பது வழக்கம். ஒருமுறை கல்லூரியின் கண்காட்சி விழாவின் போது தலைமை விருந்தினர் வடமாநிலக் கல்வி அதிபதி தி. மாணிக்கவாசகர் உரிய நேரம் வந்து சேரவில்லை, அதிபர் நாடாவை வெட்டி விழாவை ஆரம்பித்து வைத்தார். தாமதமாக வந்தவர் மன்னிப்புக் கேட்டார். நான் மன்னிக்கலாம், மணிக்கூடு மன்னிக்காது நண்பரே என்று பதில் சொன்னதாக இன்றும் பலர் சொல்லி ஆச்சரியப்படுவார்கள்.

அதிபர் 1975ஆம் ஆண்டு தனது 56 வயதில் இளைப்பாறினார். நைஜீரியா நாட்டுக்குச் செல்வதற்காக அவர் திடீர் என இளைப்பாறிய பொழுது கல்லூரி சமூகம் மிகவும் கவலையுற்றது. கந்தர் மடத்தில் உள்ள கற்பகம் இல்லம் வரை ஆசிரியர்களும் மாணவர்களும் ஊர்வலமாகச் சென்று விடைகொடுத்தனர். கண்ணீர் மல்க அவரது காலில் மாணவர்கள் வீழ்ந்து வணங்கிய காட்சி இன்றும் பசுமையாக உள்ளது.

**தொழிற்சங்கவாதி**

அன்னார் சமூகத் தொடர்போடு பல பொதுப்பணிகளை ஆற்றியவர். சிறந்த தொழிற்சங்கவாதி. யாழ்ப்பாணப் பட்டின ஆசிரியர் சங்கத் தலைவராக, வடமாகாண ஆசிரிய ஒன்றியத் தலைவராக, தேசிய ஆசிரிய ஒன்றியத் தலைவராக பங்காற்றியவர். 1959இல் இலங்கைப் பிரதிநிதியாக பரிஸ் நாட்டில் ஆசிரியர் மகாநாட்டில் பங்குபற்றி உரையாற்றினார். 1959 ஓகஸ்ட் மாதம் அமெரிக்கா வொசிங்டன் மாநிலத்தில் நடைபெற்ற உலக ஆசிரியர் மகாநாட்டில் இவர் பங்குபற்றி உரையாற்றி உள்ளார். 1959ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் பிரிட்டிஸ் கவுன்சிலில் அதிதியாகப் பங்குபற்றும் பேறு இவருக்குக் கிடைத்தது.

வடமாகாண விஞ்ஞானக்கழகம், வடமாகாண சாரணர் சங்கம், யாழ்ப்பாண விளையாட்டுச்சங்கம், போன்றவற்றில் இவர் ஆற்றிய சேவைகள் உன்னதமானது. சைவபரிபாலன சபையில் தலைவராகவும், அகில இலங்கை சேக்கிழார் மன்றத் தலைவராகவும் அரிய சேவை ஆற்றினார். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் ஆரம்பகால ஆலோசகராக விளங்கினார்.

இவரது மனைவி திருமதி மலர்சோதி சபாலிங்கம் இவரது வெற்றிக்கு பெரும் துணையாக விளங்கினார். அன்னாரின் பிள்ளைகள், மருமக்கள் கல்வியில் மிக உன்னத நிலையில் இன்று இருப்பது பெருமைக்குரிய விடயமாகும். அன்னாரது மைந்தன் மருத்துவக் கலாநிதி ச.ஜோதிலிங்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தனது தந்தையின் நினைவாக ஒரு மண்டபத்தை உருவாக்கியுள்ளமை நன்றிக்குரிய விடயமாகும்.

**பிரிவு**


1988ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மூன்றாம்நாள் லண்டனில் அதிபர் அமரரானார். அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு யாழ்ப்பாணச் கல்விச்சமூகம் மிகவும் துயருற்றது. நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் அவரது இறுதிக் காலம் லண்டனில் நிறைவாகிவிட்டது. ஒரு கல்லூரியில் அதிபராக எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதை அதிபர் சபாலிங்கம் எம் சமூகத்துக்கு விளங்கவைத்துவிட்டு சென்றுவிட்டார். தூய வெள்ளைவேட்டி, நஷனல், மடிப்புக் குலையாத சால்வை, எதற்கும் அஞ்சாத நடை, துணிவு இம்மனிதனின் தனித்துவத்தை நீளநினைந்து சிந்திக்க வைக்கிறது.

அன்னாரின் ஜனன நூற்றாண்டு இந்துவின் மைந்தர்களால் பல நாடுகளிலும் கொண்டாடப்படவிருப்பது மகிழ்வைத் தருகிறது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நாளை அன்னாரின் நூற்றாண்டு விழா விமரிசையாக கொண்டாடப்படுவது நன்றிக்குரிய விடயமாகும். அன்னாரின் ஆத்மா என்றும் எம் கல்விச் சமூகத்தை ஆசீர்வதிக்க வேண்டி பிரார்த்தித்து அமைகிறேன்.

*கட்டுரையாளர்*
*பழைய மாணவன்,*
*யாழ். இந்துக் கல்லூரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டுவோம்



# நீர் யானை



- நீர்யானை ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பாலூட்டியாகும்.
- இது ஒரு தாவர உண்ணி ஆகும். கூட்டங்களாக வாழும்.
- ஒரு கூட்டத்தில் 40 நீர்யானைகள் வரை காணப்படும்.
- இவை 40 முதல் 50 ஆண்டுகள் உயிர்வாழ்கின்றன. இவை 3.5 மீட்டர் நீளமானவை; 1.5 மீட்டர் தோளுயரமுடையவை; 1500 முதல் 3200 கிலோகிராம் நிறையுடையவை.
- பெண் நீர்யானைகள் ஆண் நீர்யானைகளைவிட சிறியவை.
- நீர்யானைகள் தாமாக மனிதரைத் தாக்குவதில்லை. ஆனால் அவற்றின் ஆள்புலத்தினுள் நுழைவோரை மூர்க்கமாகத் தாக்கக் கூடியவை.
- நீர்யானைக் குட்டிகள் நீரினுள்ளேயே பிறப்பதால் தம் முதல் மூச்சுக்காகவே நீந்தி நீர்மட்டத்திற்கு வருகின்றன.
- நீருக்கடியிலேயே முலைப்பால் அருந்துகின்றன.

## அனுபவ மொழிகள்

புத்தகத்தால் வரும் அறிவை விட, அனுபவத்தால் கிடைக்கும் அறிவு மேலானதாகும்.

*எளிமையாக வாழ்ந்தால் மனநிம்மதியுடன் வாழலாம். மிஞ்சும் பணத்தை தானம் செய்யுங்கள்.

*நல்லவர்களின் கோபம், கையிலுள்ள மோதிரம் கழற்றுவதற்குள் மறைந்து விடும்.

*நல்லவர் நட்பு, மாலை நிழல் போல வளரும்.
தீயவர் நட்பு, உச்சிவேளை நிழல் போல சுருங்கி விடும்.

*நியாயமற்ற வழியில் வரும் பணத்தை கையால் கூட தொடாதீர்கள்



## யானையும் பன்றியும்

காலையிலே யானை ஒன்று
குளித்துவிட்டு வந்தது
கடவுளின் பூசைக்காக கையில்
பூவுங் கொண்டு வந்தது

பாலமொன்றில் வந்தபோது
பன்றியொன்றும் வந்தது
யானை அருகே ஒதுங்கி நின்று
பன்றிக்கு வழிவிட்டது

ஆரவாரம் செய்த பன்றி
யானை தனக்குப் பயந்து தான்
அடங்கி ஒடுங்கிச் செல்கிறது
அதனைப் பார் ரென்றது

அங்கு வந்த பசுவுமொன்று
யானையிடம் சென்றது
சிறிய பன்றிக் கொதுங்கி நின்ற
காரணத்தைக் கேட்டது


சேறு பூசி நாறுமந்தப்
பன்றியில் என் கால்பட்டால்
சிறிய பன்றி இறந்துபோகும்
சேறென்னிலே படுமென்றது
இக்கதையைப் போலவே
கெட்டவர் நம்மை நெருங்கினால்
கூடியவரை ஒதுங்கி நின்று
பெருமை சேர வாழுவோம்

## தெரிந்து கொள்வோம்



### கிளி

கிளிகள் மரப்பொந்துகளில் வசிக்கின்றன. இவை பழங்கள், விதைகள், பூக்களின் மொட்டுக்கள் போன்றவற்றை உண்கின்றன. கிளியின் அலகு சிவந்த நிறம் உடையது. இது கூர்மையாகவும் வளைந்தும் பலமாகவும் இருக்கும். எமது நாட்டுக் கிளிகள் மஞ்சள் நீலம், சிவப்பு, ஊதா, வெள்ளை இப்படிப் பல நிறங்களில் உள்ளன. சில நாட்டுக் கிளிகள் 5 நிறங்கள் ஒருங்கமைந்தவை. இவை பஞ்ச வர்ணக் கிளிகள் எனப்படும். பறவைகளில் கிளிகளே பேசும் தன்மை வாய்ந்தவை.



### புறா

முற்காலத்தில் புறாக்கள் மூலமே செய்திகள் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு கொண்டுசெல்லப்பட்டன. அதாவது இவற்றின் கால்களில் அல்லது கழுத்துகளில் செய்திகள் செப்புக்கம்பிகளால் சுற்றப்பட்டு அனுப்பப்படும். புறாக்கள் சிறிய மரக்குச்சிகளைக் கொண்டு கூடு கட்டுகின்றன. புறாக்களின் பார்வை மிகவும் சக்தி வாய்ந்தது. இவற்றால் வண்ணங்களைப் பார்க்க முடியும். இவை தானியங்களையும் பூச்சிபுழுக்களையும் உண்ணும். இவற்றில் பல்வகையுண்டு. இவை வெள்ளை, கறுப்பு, சாம்பல், பிறவுண் நிறங்களில் காணப்படும். மனிதரிடம் நெருங்கிப் பழகும் தன்மையும் உடையவை.

# சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்



போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்ததினால் அவனால் வெல்ல முடியவில்லை.
எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் வெற்றி பெற்றான். தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான். அதனால் அவன் காட்டிற்கு ஓடிச் சென்றுஅங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.
தோல்வி கண்ட அரசன் மிகவும் மனவருத்தம் கொண்டான். மனச்சோர்வினால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே வீழ்ந்துவிட்டது.
இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கடைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் "இச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விடவேண்டும்?
நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும்" என்று எண்ணினான் மறுபடியம் தன் எதிரியுடன் போர் புரிய தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தன் நம்பிக்கையான ஆட்களைச் சந்தித்தான்.
தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்தச் சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.

## விடுகதைகள்

1. அடர்ந்த காட்டின் நடுவே ஒரு பாதை
2. அடி மலர்ந்து நுனி மலராத பூ
3. அத்தானில்லா அத்தான் என்ன அத்தான்?
4. அந்தரத்தில் தொங்குவது செம்பும் தண்ணீரும்
5. அரையடிப் புல்லில் ஏறுவான் இறங்குவான்
6. அள்ளலாம் கிள்ள முடியாது
7. அறுக்க உதவாத கருக்கு அரிவாள்
8. அள்ளவும் முடியாது கிள்ளவும் முடியாயாது

### விடைகள்

1. வகிடு
2. வாழைப்பூ
3. மொடக்கத்தான்
4. இளநீர்
5. பேன்
6. தண்ணீர்
7. பிறைச்சந்திரன்
8. காற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச, நகர சபைகளுக்கு கழிவகற்றல் வாகனங்கள்



யாழ்ப்பாணம், பெப். 8

உள்ளூராட்சி அமைச்சால் 'எமது நகரத்தைத் தூய்மையாக வைத்திருப்போம்' என்ற கருப்பொருளுக்கு அமைவாக நேற்றைய தினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 7 பிரதேச, நகர சபைகளுக்கான வாகனங்கள் அம்பாந்தோட்டைப் பகுதியில் வைத்து வழங்கப்பட்டன.

வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை பிரதேச சபை, கரவெட்டி பிரதேச சபை, சாவச்சேரி நகர சபை, சாவச்சேரி பிரதேச சபை, வலிகாமம் மேற்கு பிரதேச சபை ஆகியவற்றுக்கே தலா 80 லட்சம் ரூபா பெறுமதியான குறித்த வாகனங்கள் வழங்கப்பட்டன.

(ம-26)


## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை பண்டத்தரிப்பு வீதியில் யூனியன் கல்லூரிக்கு மிக அருகில் காணி உடனடி விற்பனைக்கு உண்டு. 8திகதி, 9, 10, நாள்களில் காலை 10 மணி தொடக்கம் 4 மணிவரை பார்வையிடலாம். தரகர் தேவையில்லை.

**தொடர்பு - 077 854 4600**


# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 22.05.1949

விண்ணில் 06.02.2019



## அமரர் மிக்கேல் அன்ரனி வின்சலோஸ்

**(மிக்கேல் ராசா)**

(முன்னாள் குருநகர் கடற்தொழில் சிறகுவலைச் சங்கத் தலைவர்,
முன்னாள் வடமாகாண கடற்தொழில் சமாச உப தலைவர்)

அன்பின் உறைவிடமாய்
பண்பின் நிறைவிடமாய்
பாசத்தைப் பொழிந்து
எமது உறவுகளின்
மனதில் இடம்பெற்று விட்ட
மங்காத மாணிக்கமே!
உங்கள் இழப்பு
எங்கள் குடும்பங்களுக்குப்
பேரிழப்பு என்பதை யாரறிவார்?
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை இறைஞ்சுகிறோம்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.02.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

**இல.30, கொண்டடி றோட்,**
**குருநகர், யாழ்ப்பாணம்.** (cs 23163)

**குடும்பத்தினர்**
**077 722 3632**
**077 670 5669**


உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com





# மரண அறிவித்தல்

தோற்றம்
05
04
1927



மறைவு
07
02
2019

## தில்லையம்பலம் சின்னத்தங்கம்

குமுழமுனை 5ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் பண்டாரிக்குளம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சின்னத்தங்கம் 07.02.2019 அன்று காலமானார். அன்னார் காலம் சென்றவர்களான தம்பையா வள்ளியம்மையின் புதல்வியும் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் மனைவியும் காலம் சென்றவர்களான கந்தப்பிள்ளை சின்னாச்சியின் மருமகளும் காலஞ்சென்ற கந்தையாவின் சகோதரியும் சிதம்பரம்,தெய்வானை,சிவபாதம் (ஓய்வு பெற்ற விவசாய திணைக்கள உத்தியோகத்தர்), குமாரையா, காலஞ்சென்ற இரத்தினம், கெங்காதரன் (பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா), கெங்காதேவி (ஜேர்மனி) ,சிவராசா (ஆசிரியர் இறம்பைகுளம் மகளீர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் , செல்வராசா , சுசீலா , சரோஜினிதேவி, கமலாதேவி (கனடா), சிவராஜி , றொபின்சன் (ஜேர்மனி) , ஞானப்பிரபா (ஆசிரியர் வவுனியா விபுலானந்தா கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் குணபாக்கியவதி -தியாகராசா ( வீதி அபிவிருத்தி அதிகார சபை வவுனியா) , உதயசூரியன் ( வீதி அபிவிருத்திஅதிகாரசபை வவுனியா)- குமுதினி , செல்வரெத்தினம்- இராஜேந்திரன், கோடீஸ்வரி - தர்மரெட்ணம், காலஞ்சென்ற சந்திரன், செல்வமலர்- சிவானந்தன் , காலஞ்சென்ற திருமால், ராமராவ் (பிரான்ஸ் )- சசி, சர்மிளா -கோவிந்தராஜா , ஜனார்த்தனன் ( வீதிஅபிவிருத்திஅதிகாரசபை கிளிநொச்சி )- தீபகலா , சாயினிய- சுகிர்தன் (லண்டன்),சாரங்கன் (பிரான்ஸ்),பிரியங்கன்(லண்டன்), துளசிகா, சரணியன், பிறேமிளா- பிரதீபன் ( வீதிஅபிவிருத்திஅதிகாரசபை கிளிநொச்சி ) , பிறேமிதா- ஜெயபாலன், சுபா, மதனிகா- தமிழ்நம்பி( லண்டன்), மேனகா- பவானந்தன் , கம்சிகா -றாகுலன் (லண்டன்) , அனங்கன், ரூபினி- யெகதீஸ்வரன்( கனடா ), விஜயகுமார்- தசிக்கா (கனடா) , விஷ்ணுவர்த்தன் (கனடா ), யாழினி (கனடா), மாதங்கி, மாதுரி, சிவலக்ஸன் , சுவேதிகா , சுலக்ஸனா ஆகியோரின் அன்பு பேத்தியும் சோபனா -உஷாந்தன் (கனடா) , ஜீவன், மதுஷா, மதுஷன், சுகிர்தன் (சுவிஸ்) ,துர்க்கா- பிரசாத் (சுவிஸ்), அனோஜன், திவ்வியா, ரிதுர்ஸன், சதுர்ஷன், ஜன்சிகா, சாகித்தியன்,கரிகரன் , லதுர்ஷன், அத்விகா (லண்டன்), மதுசாளினி, சஜிந், அபிசாளினி, கிஷாளினி, தேன்சிகன் , ஜனனியா , அக்ஸித் (லண்டன்),அஷ்விக் (லண்டன்) ,பிரித்திகா, அத்விக்,லர்சனா(லண்டன்), அகிலினி(கனடா), விதுஷ்(கனடா),வினித்( கனடா) , ஆகியோரின் அன்பு பூட்டியும் அதித்ரி (சுவிஸ்) இன் கொப்பூட்டியும் ஆவார்

**அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 08.02.2019 மதியம் 12.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் தட்சநாதன்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அறிய தருகிறோம்**

**தகவல் : குடும்பத்தினர்**




# பணி நிலை வேண்டுகை

## பாதுகாப்பு உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம் மாநாகர சபை எல்லைக்குள், பஸ் நிலையத்தில் இருந்து 1/4km தூரத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு இரவு நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

* கடமை நேரம் – கிழமை நாட்களில் பி.ப 5.10 முதல் மறுநாள் காலை 8.30 மணி வரை
* சனிக்கிழமைகளில் பி.ப 5.10 மணி முதல் திங்கட்கிழமை காலை 8.30 மணிவரை பணிதொடரும். (ஞாயிற்றுக்கிழமைகளில் மேலதிக நேர பணி வழங்கப்படும். (Over Time)
* புகைத்தல், மதுபானம், வெற்றிலை போன்ற பழக்கமுடையவர்கள் இப்பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
* அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* கவர்ச்சிகரமான சம்பளத்திட்டம் (அனைத்துக் கொடுப்பனவு 24900/= வரை பெற்றுக்கொள்ள முடியும்)

12ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்கவும்

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

தபாற் பட்டி இல. 168, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மொழி ஞாயிறு சி.சிவசுப்பிரமணியம்

கட்டுரை

பரா.றமேஸ்

"தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற பொய்யாமொழிக்கு வரைபிலக்கணம் கொடுத்து இவ்வுலகில் பிறந்தவர்கள் ஒரு சிலரே. அவர்களுள் தனித்துவமான அடையாளங்களால் பெருமையும் புகழும் பெறுபவர் இன்றைய தினம் பவள விழாவைக் காணுகின்ற ஆங்கில விரிவுரையாளர் சி.சிவசுப்பிரமணியம், 1944ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி சின்னத்தம்பி உமையாள் தம்பதியாரின் புதல்வனாகப் புலோலியில் பிறந்தார். புற்றளை சாராத பீட வித்தியாசாலையிலும் ஹாட்லிக்கல்லூரியிலும் கற்று பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு ஆகிய மூன்று மொழிகளிலும் தோற்றி லண்டன் இளங்கலைமாணிப் பட்டதாரி ஆனார்.

தந்தையாரின் வழிகாட்டலிலே ஆங்கிலச் சிறுகதைகளைக் கற்பதை வழக்கமாகக் கொண்டு ஆங்கிலத்தில் ஆர்வம் கொண்ட சிவசுப்பிரமணியம், யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் அருட்தந்தை டேவிட் யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர்களான முனைவர் பீற்றர், முனைவர் மேரி ஜோர்ஜ், முனைவர் ஜோன், முனைவர் திருமதி றோஸ் டேவிட் ஆகியோரிடமும் ஆங்கில இலக்கண, இலக்கியங்களை ஐயம் திரிபு அறக் கற்று விடுதல் அறியா விருப்புடன் அத்துறையில் தன்னை மிகவும் வளர்த்துக் கொண்டதனூடாக ஈழத்தின் புகழ் பூத்த ஆங்கில விற்பன்னர்களில் ஒருவராகத் திகழ்ந்து வருகின்றார்.

அத்துடன் தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனாரிடம் கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், மணிமேகலை, நாலடியார், கலித்தொகை முதலிய பழந்தமிழ் இலக்கியங்களை நயத்துடனும் ஆதவத்துடனும் கற்றுத் தேறியவர். இதனாலே விரிவுரையாளரின் ஆங்கில விரிவுரைகளில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் Julius Cisar, Romeo and Juliet, Mac Beth, Henry the tourth போன்ற கதைகளோடு பழந்தமிழ் இலக்கிய கதைகள், பாடல்களைக் கேட்டும் வாய்ப்பைப் பெறுவர்.

புலோலியில் ஆரம்பித்த விரிவுரையாளரின் கல்விப் பணி யாழ்ப்பாணம், வன்னி எனப் பரந்து சென்னை லயோலாக் கல்லூரி வரை விரிந்தது. சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் சோமசுந்தரம் மதலான பல பேராசிரியர்களையும் தனது விரிவுரைகளின்போது மாணவர்களாக்கிய பெருமைக்குரியவர்.

வள்ளுவர் வலியுறுத்திய 'தக்கார்' என்பதை தனது பிள்ளைகள் ஊடாகவும், மாணவர் ஊடாகவும் நிரூபித்தார். தனது 17ஆவது வயதிலே காலமாகிய யோகதர்சினி, அமெரிக்காவில் இருதய சிகிச்சை நிபுணராகப் பணியாற்றுகின்ற திருமதி பிரியதர்சினி ஸ்ரீகணேஸ் ஆகிய இரு புதல்விகளும் நிறைந்த ஆங்கிலப் புலமை மிக்கவர்கள். இன்று உலக அரங்கிலே பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற மருத்துவ நிபுணர்கள், பொறியியலாளர்கள், நீதிபதிகள், சட்ட வல்லுனர்கள், பேராசிரியர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள், விரிவுரையாளர்கள் இவரின் மாணவராகத் திகழ்கின்றமை அவரவர் பாக்கியமே ஆகும்.

இன்றும் கூட புலோலி தெற்கில் தனது இல்லாள் சிவபாக்கியத்தின் அன்பரவணைப்போடு ஆங்கில விரிவுரைகளை நடத்துகின்ற ஆசிரியர், நேர வரையறையினுள் கற்பித்தலை நடத்த விரும்புவதில்லை. பவள விழா வயதிலும் மாணவர்கள் தொலைபேசி ஊடாக சந்தேகங்களை எழுப்பும்போது எந்நேரம் எனப்பாராது என்ர குஞ்சு சொல்லு என்று ஆறுதலாக சந்தேக நிவர்த்தி செய்வதே அவருக்கே உரித்தான பெருமை ஆற்றும் அருமை ஆகும்.

இவ்வாறு மாணவர்களை வாழ்த்தி வளப்படுத்தி அவர்களின் உயர்வால் மண்ணுயிர்க்கெல்லாம் இனிது எனும் களிப்புக் கொள்ளும் மொழி ஞாயிறு சின்னையா சிவசுப்பிரமணியத்தின் பணி மேலும் தொடரவும் வாழ்வு வளம்பெறவும் இறைவனைப் பிரார்த்தனை செய்வோமாக.


அதிர்ஷ்ட கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 519
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.02.07
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 60,873,415/-
வெற்றி இலக்கங்கள் 01 08 10 22 ஆங்கில எழுத்து D
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1542
சீட்டிழுப்பு திகதி 07.02.2019
வெற்றி இலக்கங்கள் 19 23 33 39 ஆங்கில எழுத்து O
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
ரூ 25 , 956, 440/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 07.02.2019
வெற்றி வாரம் 2452
வர்ணம் கபிலம்
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 26 34 53 54
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 000, 000 /=
08.02.2019ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு



கடந்த (18.12.2018) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி

### அமரர் யோகேஸ்வரி அப்பையா

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (08.02.2019) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கூவில் கொட்டடி ஞானவைரவர் ஆலய முன்றலில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். நாளை சனிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

'அம்பிகை வாசம்'
கூவில் புலோலி தென்மேற்கு, புலோலி.

குடும்பத்தினர்.
021 226 4280

# புகைப் பரிசோதனை சான்றிதழ் இல்லாது வாகனம் செலுத்தியவருக்கு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், பெப். 8

புகைப் பரிசோதனைச் சான்றிதழ் இல்லாது வாகனம் செலுத்திய சாரதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் எச்சரிக்கப்பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எஸ்.பி.போல் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குறித்த வாகனச் சாரதிக்கு எதிராக புகைப்பரிசோதனைச் சான்றிதழ் இல்லாது வாகனம் செலுத்திய குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. குறித்த குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட சாரதி தாம் வைத்திருந்த புகைப் பரிசோதனைச் சான்றிதழை மன்றில் காட்டினார். இதனை ஆராய்ந்த நீதிவான் இனிவரும் காலங்களில் புகைப்பரிசோதனைச் சான்றிதழ் இல்லாது வாகனம் செலுத்தக் கூடாது என எச்சரித்து விடுதலை செய்தார். (ம-8)

## தவறிவிட்டது

நகைகளைக் கொண்ட பொதியொன்று 01.02.2019 வெள்ளிக்கிழமையன்று யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து **0763432521** என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்.

# கரைச்சி புளியம்பொக்கனண நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவம் தொடர்பான கலந்துரையாடல்

கொடிகாமம், பெப். 8

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய முன்றலில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மார்ச் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்கல் உற்சவம் தொடர்பாக இன்று நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், உபயக்காரர்கள், தொண்டர்கள் எனப் பலரும் பங்குபற்றவுள்ளனர். குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்குமாறு தலைவர் வீ.இராமநாதன் அறிவித்துள்ளார். (ம-159)

## மரண அறிவித்தல்



### திருமதி பொன்னம்மா இளையதம்பி

யாழ். அச்சுவேலியை பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா இளையதம்பி நேற்று (07.02.2019 ) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - மாரிமுத்துதம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், முத்துப்பிள்ளை, கிருஸ்ணபிள்ளை, ஜெகநாதன் (சேனாதி) ஆகியோரின் சகோதரியும், தவமணி, தங்கம்மா காலஞ்சென்ற நாகராசா மற்றும் நாகபூசணி, நாகேஸ்வரி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு தாயும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராமகிருஷ்ணன் மற்றும் ஜெயசிறி, கோபாலகிருஷ்ணன், சிற்சபேசன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2019) வெள்ளிக்கிழமை ந.ப12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தீர்த்தங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பாரதி வீதி, பத்தமேனி**
**அச்சுவேலி**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** நண்பரின் உதவி எதிர்பாராமல் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க ஆர்வமுடன் செயல்படுவீர்கள். பணபரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**இடபம்:** செயல்கள் திட்டமிட்டபடி இனிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த தாமதம் சரியாகும். தாராள பணவரவில் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

**மிதுனம்:** நிகழ்வுகள் மனதில் சங்கடம் தரலாம். பொது இடங்களில் நிதானித்து பேச வேண்டும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணிபுரிவது அவசியம்.

**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் தாமதகதியில் இயங்கும். பணவரவு வழக்கத்தை விட குறையலாம். பொருட்கள் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**சிங்கம்:** சிறப்பான செயலால் புதியவர் நட்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** தொல்லை கொடுத்தவர் இடம் மாறி போவர். புதியவர்களின் ஆதரவில் தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

**துலாம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நல்வழி தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஓரளவு கூடும். பணப்பரிவாத்தனை சீராகும்.


**விருச்சிகம்:** கவனக்குறைவால் பணிகளில் சிரமம் வரலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு அவசியம். பணவரவு சிக்கன செலவுகளுக்கு பயன்படும்.

**தனுசு:** நடை, உடை, பேச்சில் வசீகரம் உருவாகும். தொழிலில் உற்பத்தி விற்பனையின் அளவு அதிகரிக்கும். தாராள பணவரவில் குடும்பத்தின் தேவை பெருமளவில் நிறைவேறும்.

**மகரம்:** பணிகளை தாமதமின்றி நிறைவேற்றவும். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். பணவரவு முக்கிய செலவுகளுக்கு பயன்படும்.

**கும்பம்:** உடன் பிறந்தவர்கள் ஆதரவாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் உள்ள குளறுபடி புதிய முயற்சியால் சரியாகும்.

**மீனம்:** குடும்ப உறுப்பினர்களின் மனம் அறிந்து பேச வேண்டும். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும். சேமிப்புப் பணம் செலவாகும்.




# விஷாலின் அயோக்யா டீசர் வெளியானது

தெலுங்கில் ஜூனியர் என்.டி.ஆர் நடிப்பில் வெளியாகி ஹிட்டடித்த 'டெம்பர்' திரைப்படத்தின் அதிகாரப்பூர்வ மறுதயாரிப்பில் விஷால் நடித்து வரும் 'அயோக்யா' திரைப்படத்தின் டீசரை ஏ.ஆர்.முருகதாஸ் வெளியிட்டார்.

இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸிடம் உதவி இயக்குநராக பணியாற்றிய வெங்கட் மோகன் என்பவர் இந்தப் படத்தை இயக்குகிறார். விஷாலுக்கு ஜோடியாக ராஷி கண்ணா நடித்துள்ள இந்தப் படத்தின் அதிரடி டீசர் தற்போது வெளியாகியுள்ளது.

இந்தப் படத்தில் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார், சச்சு, பார்த்திபன், வம்சி உள்ளிட்ட பலர் நடித்து வருகின்றனர்.

## ருவீற்ஸ்

புன்னகை மன்னன் @Punnagaiman



அனுபவம் என்பது பெரிதாக ஒன்றுமில்லை,, எல்லாவற்றையும் இழந்தபின் எஞ்சி நிற்பதே....

மெத்த வீட்டான்@HAJAMYDEENNKS



புத்தகங்கள் படிப்பது மட்டும்தான் உடல் நலத்திற்கு தீங்கில்லாத போதை !

mohanram.ko@mohanramko



தலை சீவிய பின், சீப்புல முடி இருக்கானு பார்த்தா மனுஷன், தலையில முடி இருக்கானு பார்த்தா பெரிய மனுஷன்..

முகிலன்™@MJ_twets



பிறர்க்கு உதவி செய்யும் போது தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பாத தருணங்களில் மனிதன் கடவுளாகிறான்.!

பணமும் ஒருவகையில் ஜாதி மாதிரிதான்...




இருப்பவன் உயர்ந்த சாதி....
இல்லாதவன் தாழ்ந்த சாதி....!



ஒரு மாலை போட்டிருந்தா.. புது வண்டி..!
நிறைய மாலை போட்டிருந்தா.. கடைசி வண்டி..!
இவ்ளோதாங்க.. வாழ்க்கைப் பயணம்..!






# மிதிபடும் உலகம்

காலையில் கண்விழித்ததிலிருந்து இரவு கண்ணுறங்குவது வரை எத்தனை எத்தனை சண்டைகள்! சில நேரம் நாம் சண்டையிடுகிறோம் பிறர் பார்க்கின்றனர்! பலநேரம் பிறர் சண்டையிடுகிறார்கள் நாம் பார்க்கிறோம்!

இப்படி நடக்கும் எல்லாச் சண்டைகளுக்கும் நானறிந்த காரணம் சுயநலம்!

சுயநலமின்றி வாழ நாம் என்ன மரங்களா? என்று சிலர் கேட்கலாம். மரங்கள் கூடத் தாம் வாழத் தேவையான தண்ணீரைச் சுயநலத்தோடு உறிஞ்சத்தானே செய்கின்றன என்று சிலர் சொல்லாம்..

எந்த மரங்களும் தம் தேவைக்கு அதிகமாக ஒருதுளி நீரைக்கூட உறிஞ்சுவதில்லையே என்பதுதான் பார்வையாக உள்ளது.

இப்போதெல்லாம் நடைபெறும் ஊழல்களைப் பாருங்கள் ஆயிரம் கோடி.. இரண்டாயிரம் கோடி என்று.. சுயநலம் பேராசையாக மாறிப்போனதால்..

தான் வாழ யாரை வேண்டுமானலும் மிதித்துவிட்டுச் செல்லலாம் என்பது தான் ஒவ்வொருவரும் பின் பற்[illegible]

குணம் உள்ளவன் சொல்வதை விட பணம் உள்ளவன் கூறும் கருத்துகளே இப்போது சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

நாங்கள்...
செருப்பாக வேண்டும் என்று முடிவெடுத்தப் பின்
மிதிப்பவர்களின் நற்மதிப்பை பெற நினைப்பதில்லை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு...

விவசாயத் திணைக்கள அதிகாரிகள் கமநலசேவைகள் திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது, வடக்கில் அதிகளவு மழைவீழ்ச்சி கிடைத்தும் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுவதற்கான காரணங்கள், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகள், குடிதண்ணீரைத் தக்க வைப்பதற்கான ஏற்பாடுகள், மற்றும், ஆறுமுகம் திட்டம், தொண்டமானாறுத்திட்டம் போன்றன ஆராயப்பட்டன என்று தெரியவருகிறது. (ம-21,105)

### அரசியல்...

விஸ்வமடு கிராமத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளுக்கு தாயான திருமதி ரவீந்திரன் மதனி (வயது 31) என்பவரே அவ்வாறு விடுவிக்கப் பட்டவராவார்.

குறித்த நபர் 2014ஆம் ஆண்டு பயங்கரவாத விசாரனை பிரிவினரால் கைது செய்யப்பட்டார். வெலிமடை பொலிசாரால் பதவிய சுற்றுலா நீதவான் நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்கத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கின் தீர்ப்பு நேற்று வியாழக்கிழமை கெப்பரிக் கொல்லாவ நீதவான் நீதிமன் றில் வழங்கப்படும் என எதிர்பார்த்தபோதும் வழக்கை விசாரித்து வந்த நீதவான் ரி.ஜெ.பிரபாகரன் இடம்மாற்றம் பெற்றுள்ளமையால் வழக்குக்கான கோவை தீர்ப்புக்காக அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இருந்தும் குறித்த நபர் கெப்பரிக் கொல்லாவ நீதவான் நீதிமன்றில் சிறைச்சாலை அதிகாரிகளால் முன்னிலைப்ப டுத்தப்பட்டார். அவரை 25ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. எதிர்வரும் 27ஆம் திகதி தீர்ப்புக் காக வழக்கை நீதிவான் ஒத்திவைத்துள்ளார். வழக்குக்கான செலவுகளை மன்னார் பிரஜைகள் குழு மேற்கொண்டமை குறிப்பிடத் தக்கது. (ம-60)

## விகிதாசார முறையில் மாகாணத் தேர்தல்

### சுமதிபால விருப்பம்

கொழும்பு, பெப். 8

பழைய விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சி தீர்மானமொன்றை முன்வைக்குமாக இருந்தால் அதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆதரவு வழங்குவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது சில மாகாண சபைகளுக்காக ஆயுட்காலம் நிறைவடைந்து ஒன்றை வருடங்கள் கடந்துள்ளன. எதிர்வரும் ஓரிரு மாதங்களில் மேலும் சில மாகாண சபைகளுக்கான ஆயுட்காலம் நிறைவடையவுள்ளது. எனவே உரிய காலத்தில் இவற்றுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். பழைய விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சி தீர்மானமொன்றை முன்வைக்குமாக இருந்தால் அதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆதரவு வழங்குவோம் - என்றார். (ம-61)

# மனித உரிமைகள் பேரவை குறித்த மைத்திரியின் விமர்சனம் தவறானது

## கருஜெயசூரிய கடும் கண்டனம்

கொழும்பு, பெப். 8

அரசமைப்புப் பேரவையின் செயற்பாடுகள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் பேரவை குறித்து மிகவும் மோசமான வகையில் அரச தலைவர் முன்வைத்த விமர்சனங்கள் தவறானவை. மோசமான கருத்துக்களை அவர் சபையில் முன்வைத்துவிட்டார் என அரசமைப்புப் பேரவையின் தலைவரும் சபாநாயகருமான கருஜெயசூரிய தெரிவித்தார்.

பன்னாட்டு அளவில் எமது மனித உரிமை ஆணைக்குழு அங்கீகாரம் பெற்றுள்ள நிலையில் அரசதலைவர் தவறாக விமர்சிக்கக்கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கூடிய வேளையில் நேற்றுமுன்தினம் அரசமைப்புச் சபை குறித்து அரச தலைவர் சபையில் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் குறித்து சபாநாயகர் சிறப்பு அறிவிப்பொன்றை விடுத்தார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்புப் பேரவையின் செயற்பாடுகள் தொடர்பில் கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி நான் அறிவிப்பு ஒன்றினை விடுத்தேன். அதில் அரசமைப்பு 41 (அ) உறுப்புரிமைக்கு அமைய சுயாதீன ஆணைகுழுக்கான உறுப்பினர் பெயர் பட்டியல் வெளியிட்டதுடன் அரசமைப்பின் அமைப்பு 41 (எ) பிரிவின் பிரகாரம் பதவி வகிக்கும் உறுப்பினர்கள் குறித்து அரச தலைவரால் தீர்மானிக்கப்படும் பெயர் தெரிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் ஏற்றுகொள்ளக்கூடிய விதிமுறைகளை உள்ளடக்கிய அறிக்கை ஒன்று 2016ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஹன்சாட் படுத்தப்பட்டுள்ளது. இந்த விடயங்களை மீண்டும் ஒருமுறை உறுப்பினர்கள் அறிந்து கொள்வதற்காக நாளைய தினம் மீண்டும் ஹன்சார்டில் பதியப்படும். பதவிகளுக்கான உறுப்பினர் தெரிவின் போது அவர்களின் சிரேஷ்டத்தன்மை சுயாதீனமான செயற்பாடுகள் மற்றும் பக்கச்சார்பற்ற தன்மைகளை கருத்தில் கொண்டு அவை அரசமைப்புப் பேரவையில் அவதானம் செலுத்தப்படுவதுடன், அரசமைப்புப் பேரவையின் நியாயத்தை அடையாளப்படுத்த நான் எதிர்பார்க்கின்றேன்.

பேரவையின் உறுப்பினர்களாக அரச தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தி தலைமை அமைச்சரும், எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவரும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் அரச தலைவரால் நியமிக்கப்படுவார். இருவர் தலைமை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் இணக்கத்தின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவதுடன் இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினர் சிறு கட்சிகளின் பொது இணக்கப்பாட்டில் தெரிவு செய்யப்படுவர். சிவில் சமூக பிரதிநிதித்துவமாக நாடாளுமன்ற அனுமதியை பெற்ற நபர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆகவே ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதி த்துவப்படுத்தி இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பிரதிநி தித்துவப்படுத்தி மூன்று உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணி சார்பில் ஒரு உறுப்பினரும் சிவில் சமூக பிரதிநிதிகளாக மூவரும் அரசமைப்புப் பேரவையின் பிரதிநிதித்துவத்தை பெறுவார்கள். இந்த நியமனம் மூலமாக நாடாளுமன்றத்தின் சகல பிரதிநிதிகளின் பிரதிநிதித்துவத்தையும் உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ளது என்பதே எனது தனிப்பட்ட எண்ணமாகும்.



இந்த நிலையில் நீதியரசர் நியமனம் தொடர்பில் அரசமைப்புப் பேரவையின் செயற்பாடுகள் குறித்து அரச தலைவர் நேற்று சபையில் தனது கருத்தினை முன்வைத்தார். அவர் முன்வைத்த காரணிகளில் சிலது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டியது அரசமைப்புப் பேரவையின் கடமையாகும். நீதியரசர் தெரிவில் நாம் கையாளும் முறைமை குறித்து 2019ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி நாம் அரச தலைவருக்கு அனுப்பிய கடித்தத்தில் தெளிவுபடுத்தியுள்ளோம். எனினும் சிரேஷ்டத் தன்மையை நாம் கருத்தில் கொள்வதில்லை என அரசதலைவர் நேற்று நாடாளுமன்றத்தில் கூறியுள்ள கருத்து தவறன கருத்தாகும். சிரேஷ்டத் தன்மையை மட்டுமே நாம் கருத்தில் கொள்வதில்லை என்ற காரணியையே சுட்டிக் காட்டியுள்ளோம். அரசதலைவர் அங்கீகரிக்கும் பெயர்களையே இறுதியாக அங்கீகரிப்பது எனவும் அதற்கு அப்பால் அரசமைப்பு பேரவை தனது எண்ணத்திற்கு நபர்களை நியமிக்காது எனவும் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளோம். இதில் நாம் எந்தத் தவறையும் செய்யவில்லை என நினைக்கின்றேன். எனினும் 12 நீதியரசர் பெயர்களை நாம் நிராகரித்ததாக கூறியது தவறான கருத்தாகும். ஒரு சந்தர்ப்பத்தில் மூன்று அல்லது நான்கு பெயர்கள் அனுப்பப்பட்டால் அதில் ஒருவரது பெயரையே நாம் நியமிப்போம். அவ்வாறான நிலையில் நாம் பெயர்களை நிராகரிக்கின்றோம் என கூறுவது அரசமைப்பு பேரவைக்கு செய்யும் அவமதிப்புச் செயலாகும். வயது மூப்பை மட்டுமே பார்த்து நியமிக்க வேண்டும் என்றால் அரசமைப்புப் பேரவை ஒன்று அவசியமில்லை. அரசதலைவரால் அவ்வாறான செயற்பாடே கூறப்படுகின்றது. அதனை கூறி தர்க்கம் செய்ய நாம் தயாராக இல்லை. வாக்குவாதம் நடத்துவதை நாம் நிறுத்திக் கொள்வோம்.

19ஆம் திருத்தத்திற்கு அமைய நாம் எமது கடமையை சரியாக செய்துள்ளோம் என நினைக்கின்றோம். அரசமைப்புப் பேரவையில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை. ஒரு பெயரைத் தெரிவு செய்வதில் எந்தத் தலையீடுகளும் ஏற்படப்போவதில்லை. இதில் சுயாதீனமாக தீர்மானம் எடுக்க அனைவருக்கும் வாய்ப்புகள் வழங்கப்படும்.

அதேபோல் அகுணகோலபலச சிறைச்சாலையில் விசேட அதிரடிப்படை குழுவொன்று நியமிக்கப்பட்டமை குறித்து எந்தவொரு முரண்பாட்டுக் கருத்துக்களும் முன்வரவில்லை. காரணிகளை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே ஆணைக்குழுவிற்கு இருந்தது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் இன்று பன்னாட்டு அளவில் பேணப்பட்டு வருகின்றது. அவ்வாறு இருக்கையில் மோசமாக விமர்சிப்பது ஏற்றுகொள்ள முடியாது - என்றார். (ம-31)

# அரச தலைவருக்கு கண்டனமா கருவுக்கு எதிராக அமளிதுமளி!

கொழும்பு, பெப். 8

அரசமைப்புப் பேரவை மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பில் அரசதலைவரின் விமர்சனத்துக்கு தனது அதிருப்தியையும், கண்டனத்தையும் சபாநாயகர் கருஜெயசூரிய நேற்று விடுத்திருந்த நிலையில் அவருக்கு எதிராக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கினார்கள். இதையடுத்து சபையில் பெரும் அமளிதுமளி இடம்பெற்றது.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சபை அமர்வுகள் ஆரம்பிக்கப்பட்ட போது அரசமைப்புப் பேரவை மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறித்து நேற்றுமுன்தினம் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன சபையில் முன்வைத்த கருத்துக்கள் குறித்து சபாநாயகர் சிறப்பு அறிவித்தல் ஒன்றினை விடுத்து அதில் அரசதலைவர் தவறாக விமர்சனங்களை கையாண்டுள்ளார் என சுட்டிக்காட்டியதை அடுத்து அரசதலைவரைப் பிரநிதித்துவப்படுத்தும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் சபையில் சபாநாயகர் கருஜெயசூரியவுடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். சபாநாயகர் அறிவிப்பை விடுத்த பின்னர் எதிர்க்கட்சி ஆசனங்களில் இருந்து ஆக்ரோசமாக எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டு சபாநாயகரை பார்த்து உரத்த குரலில் விமர்சிக்க ஆரம்பித்ததுடன் அனைவரும் தமக்கான ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினர். எனினும் யாருக்கும் ஒழுங்குப்பிரச்சினைக்கு இடமளிக்க மாட்டேன் என சபாநாயகர் தெரிவித்ததை அடுத்து சபையில் கூச்சலிட்டு குழப்பத்தை ஏற்படுத்தினர்.

தொடர்ந்தும் சபையில் குழப்பம் நிலவிய நிலையில் அவசர கட்சித் தலைவர் கூட்டத்தை சபாநாயகர் கூட்டினார். அதற்கமைய நாடாளுமன்றம் 10.55 மணிக்கு 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது. கட்சித் தலைவர் கூட்டத்தின் பின்னர் மீண்டும் கூடியது. (ம-31)

### யானையால்...

சென்ற 64 வயதுடைய சி.நல்லையா என்பவரே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றார்.

யானையால் தாக்கப்பட்ட போது அவர் எழுப்பிய கூக்குரலை அடுத்து அயலிலுள்ளவர்கள் விரைந்துவந்து அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

வலது கையிலும் நெஞ்சுப்பகுதியிலும் யானை தாக்கியுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று தற்போது 5ஆம் இலக்க விடுதியில் குறித்த நபர் சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில்...

கூட்டு அரசை நிறுவுவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுப்பதற்கு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜேவிபி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. குறிப்பாக அரசில் ஓர் அங்கமாக இருக்கும் தமிழர் முற்போக்குக் கூட்டணிகூட 'அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக கூட்டு அரசு அமைக்கப்படுமானால் நாம் அதற்கு ஆதரவளிக்க மாட்டோம்' என்று வெளிப்படையாக அறிவித்திருந்தது.

இதையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நேற்றுமுன்தினம் இரவு ஒன்றுகூடி இந்த விவகாரத்தை தீவிரமாக ஆராய்ந்தது. இந்தப் பின்னணியிலேயே கூட்டரசுஅமைப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த தீர்மானம் பிற்போடப்பட்டது.

நேற்று வரை இது சபைக்கு அறிவிக்கப்படாத நிலையில் எதிர்க்கட்சியினர் கூட்டு அரசு அமைக்கப்படுவது குறித்த விவாதத்தில் கலந்து கொள்ள வந்த போதிலும்கூட அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. எதிர்வரும் 20ஆம் திகதிய நாடாளுமன்ற அமர்வில் கூட்டு அரசு அமைப்பது குறித்த தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ம-31)

## தகவல்...

இரவு பதியப்பட்டுள்ளது.

அரச தலைவரால் நடைமுறைப்படுத்தப்பட்ட போதை ஒழிப்பு வாரத்தின்போது பாடசாலைகளிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கோணாவிலில் பாடசாலை ஒன்றில் பொலிஸார் இதேபோன்று விழிப்புணர்வுச் செயற்பாட்டை முன்னெடுத்த போது, பாடசாலை மாணவன் ஒருவன் தனது ஊரில் இடம்பெறும் கஞ்சா மற்றும் கசிப்பு வியாபாரம் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளான்.

இதன் பின்னர் மாணவனின் வீட்டுக்குச் சென்ற சிலர், மாணவனின் பெற்றோருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இரண்டு தினங்களின் பின்னர் இரவு நேரம் ஈருருளியில் சென்ற மாணவனை உந்துருளியில் வந்த மூன்று பேர் இடித்து வீழ்த்தியுள்ளனர். மாணவன் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். இந்தச் சம்பவம் விபத்து என்று வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்து வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிலும், வடக்கு மாகாண ஆளுநர் ராகவனிடத்திலும் முறைப்பாடு செய்திருந்தார்.

வன்னிப் பிராந்தியப் பொலிஸ்மா அதிபருக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கியதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் அவர் நேரடியாக இந்த விசாரணையை முன்னெடுத்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் உயர் அதிகாரிகளையும் அழைத்து, மாணவனின் தந்தையையும் அழைத்து மூன்று மணி நேரம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார். இதன் போது பல விடயங்கள் வெளிவந்துள்ளன.

மருத்துவமனைக்கு வந்த போக்குவரத்துப் பொலிஸார், மகனின் ஈருருளியில் முன்பக்க விளக்கு இல்லை என்றும், முன்பக்க பிரேக் வேலை செய்யவில்லை என்றும் கூறினர். இந்த விடயத்தை நீதிமன்றுக்கு கொண்டு சென்றால் தண்டப்பணம் செலுத்தவேண்டி வரும் என்றும், வழக்குக்கு அலைந்து திரிய வேண்டி வரும் என்றும் கூறினர். தினமும் மேசன் வேலை செய்து சம்பாதிப்பவன். என்னால் வழக்குக்கு அலைந்து திரிய முடியாது என்று வந்த போக்குவரத்துப் பொலிஸாரிடம் தான் கூறியதாக மாணவனின் தந்தை பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் சிங்களத்தில் எழுதிய கடிதத்தில் போக்குவரத்துப் பொலிஸார் கையெழுத்து வாங்கியதாகவும் மாணவனின் தந்தை குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்துப் பொலிஸார் சிங்களத்தில், விபத்தை நீதிமன்றுக்குப் பாரப்படுத்தவேண்டாம் என்று எழுதி அந்தக் கடிதத்திலேயே கையெழுத்து வாங்கியமையைப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கண்டறிந்துள்ளார்.

மேலும், சம்பவம் நடைபெற்றபோது காயமடைந்த மாணவனை வீட்டுக்கு கொண்டு வந்து சேர்ப்பித்த கடைக்காரரிடமோ வேறு எவரிடமோ பொலிஸார் விசாரணை நடத்தவில்லை என்பதும் தெரியவந்துள்ளது. இதனையடுத்து பொலிஸ் அதிகாரிகளை கடுமையாகக் கடிந்து கொண்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் புதிதாக முறைப்பாடு செய்யுமாறு மாணவனின் தந்தையைப் பணித்துள்ளார்.

இதனையடுத்து மாணவனின் தந்தை புதிய வழக்கைப் பதிவு செய்துள்ளார். (ம-ஓ.5)

## ஒரு தொகுதிக்...

மக்களிடம் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (ம-21,6)

## மலையக...

மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் தேசிய உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் தேயிலை தொழிற்துறையானது பொருளாதாரத்தில் நேரடியாக செல்வாக்கு செலுத்துகின்றது. ஆனால் பெருந்தோட்டப்புற மக்களின் பொருளாதார நிலையானது மூன்றாம் மட்டத்திலேயே காணப்படுகின்றது. இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. குறிப்பாக அரசின் சில செயற்பாடுகளையும் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகும்.

தோட்டப்புற மக்களின் பின்தங்கிய நிலமைக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆட்சி செலுத்திய அரசை மாத்திரம் குற்றம் சுமத்த முடியாது. இந்த நாட்டில் பதவியில் இருந்த அனைத்து அரசுகளும் இந்த நிலமைக்கு பொறுப்புக்கூற வேண்டும்.

பெருந்தோட்ட பிரதேசங்களில் கல்வித்துறை ஏனைய மக்களுடன் போட்டியிடும் அளவுக்கு இன்று முன்னேற்றமடைந்துள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் காணப்பட்டாலும் கல்வித்துறையில் முன்னேற்றமடைந்துள்ளமை வரவேற்கத்தக்கது. அரசும் ஏனைய தொழிற்துறையினருக்கு வழங்குகின்ற சலுகைகளை மலையக மக்களும் வழங்க வேண்டும். தேசிய ரீதியில் இன்று முன்னெடுக்கப்படுகின்ற கம்பெரலிய செயற்திட்டம், கிராமிய சக்தி செயற்திட்டம் ஆகியவற்றில் மலையக மக்களும் உள்வாங்கப்பட வேண்டும் - என்றார். (ம-61)

## தமிழ்...

அந்தநாட்டு வானொலி ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாம் 100 வீதம் எங்கள் முடிவுகளை சரியாகச் செய்துள்ளோம். ஆனால், அரசு வழங்க வேண்டியவற்றை வழங்காமல் காலத்தை இழுத்தடிக்கின்றது. இதுதான் உண்மை. எம்மை விமர்சிக்கும் மாற்றுக் கட்சிகள் திருப்திகரமான, ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டத்தை முன்வைத்திருக்கின்றார்களா? 2010ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் மாற்றுக் கட்சிகளை எமது மக்கள் நிராகரித்தார்கள். 2015ஆம் ஆண்டு தேர்தலிலும் மாற்றுக் கட்சிகளை அவர்கள் நிராகரித்தார்கள்.

வெளிநாட்டில் இருக்கும் பல புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மாற்றுக் கட்சிகளுக்குத்தான் ஆதரவு வழங்கின. ஆனால், களத்தில் நின்ற எமது மக்கள், மாற்றுக் கட்சிகளைத் தோற்கடித்தனர். இது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தொடரும்.

விக்னேஸ்வரனுக்கு அரசியல் தெரியாது. அப்படிப்பட்ட ஒருவரைக் கொண்டு வந்து வடக்கு மாகாண முதலமைச்சர் ஆக்கியமை முதலாவது பிழை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைதான் விக்னேஸ்வரனை முதலமைச்சர் ஆக்கியது. கூட்டமைப்பில் இருந்தவர்கள் பலரும் அதனை அன்றே எதிர்த்தார்கள்.

விக்னேஸ்வரனை வடக்கு மாகாண முதலமைச்சராக களமிறக்க கூட்டமைப்பின் தலைமைப்பீடம் முடிவெடுத்தபோது எனது பத்திரிகைகளான 'உதயன்' 'சுடர் ஒளி'ப் பத்திரிகைகள் அவரைப் பற்றி எழுதின.

விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவிக்குப் பொருத்தம் இல்லை எனவும், மாவை சேனாதிராசாதான் அந்தப் பதவிக்கு நூறு வீதம் பொருத்தம் எனவும் செய்திகளையும் ஆசிரியர் தலைப்புகளையும் எனது பத்திரிகைகள் அன்று எழுதின. விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவியில் இருந்தபோது எவரினதும் சொல்லையும் கேட்காமல் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டார்' - என்றார். (ம-22)

## தோற்கடிக்கப்பட்டது...

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றிய அவற்றைத் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் 2017ஆம் ஆண்டு முழுமையாக விடுவிக்கப்பட்டது. சிரியாவில் அந்த அமைப்பு தொடர்ந்தும் வேரூன்றியிருந்தது. இதனால் சிரியாவில் ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரை மிகத் தீவிரமாக முன்னெடுத்து வந்தது அமெரிக்கா.

பல்மைரா, டமஸ்கஸ், இட்லிப், அலெப்போ, மேற்கு அலெப்போ என்று ஒவ்வொரு நகராக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை மீட்டு வந்தது. இந்த நிலையில் சிரியாவில் இருந்தும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டது என்று நேற்று அறிவித்தார் ட்ரம்ப்.

எனினும், அந்த அமைப்பின் ஆயுததாரிகள் சிலர் ஆங்காங்கே குழுக்களாகச் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் மிகவும் வலிமையானவர்கள். அவர்கள் மிகமிக விரைவில் வீழ்த்தப்படுவார்கள். இன்னும் ஒரு வாரத்தில் சிரியாவில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். வழித்துத் துடைக்கப்படும் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டார். முன்னதாக ட்ரம்ப் சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறும் முடிவை அறிவித்திருந்தார். இதற்கு பல தரப்புக்களில் இருந்தும் கண்டனங்கள் குவிந்தன. இந்த நிலையில் தற்போது சிரியாவில் இருந்து ஐ.எஸ். முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## இலங்கை...

அதற்குக் காரணம், இவ்வாறு முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சரும், நிதி அமைச்சருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இலங்கை தொடர்பான விவகாரம் நிகழ்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடரிலும் புதிய தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பித்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறீதரன் ஆகியோர் ஜெனிவாவுக்குச் செல்லவுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை இணை அனுசரணை வழங்கி தீர்மானத்தை நிறைவேற்றியபோது அயலுறவுத்துறை அமைச்சராகப் பணியாற்றிய மங்கள சமரவீரவிடம் இது தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நாம் நடைமுறைப்படுத்தினோம். ஆனால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதற்கு எதிராகச் செயற்பட்டார். தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தடுத்தார். அவரது செயற்பாடுகளால் இலங்கை மீது பன்னாட்டுச் சமூகத்தின் அதிருப்தி அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு இலங்கை மீதான பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தம் இன்னமும் அதிகரிக்கும். அதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே பொறுப்பு - என்றார். (ம-ஓ.5,22)

## மலக் கூடத்தில்...

இந்தச் சம்பவம் மீசாலை மேற்கு பங்களா சாலையில் நேற்று இடம்பெற்றது.

கச்சாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மனோகரன் (வயது -63) என்ற முதியவரே அவ்வாறு உயிரிழந்தார். இவரது சாவு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையினைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச சாவு விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் மூலம் விசாரணைகளை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சாவகச்சேரி மருத்துவமனையில் சாவு விசாரணைகளை மேற்கொண்ட திடீர் சாவு விசாரணை அதிகாரி மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (ம-9)

## பால்மா...

கொண்டனர். இதன்போது சபையில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதுதொடர்பில் வாக்குவாத்திலும் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் கருஜய சூரிய தலைமையில் கூடியது. சபாநாயகரின் அறிவிப்புக்களை அடுத்து, ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் ஒழுங்கு பிரச்சினையொன்றை முன்வைத்து தெரிவிக்கையில், இறக்குமதி செய்யப்படும் பால்மாகளில் பன்றிக்கொழுப்பு கலந்திருப்பதாக பிரதி அமைச்சர் புத்திக்க பத்திரண இந்தச் சபையில் அறிவித்திருந்தார். அதுதொடர்பாக பரிசீலனை செய்யுமாறு நுகர்வோர் அதிகார சபை தெரிவித்திருக்கின்றபோதும் அந்த நிறுவனங்கள் முறையாக பரிசீலனை செய்வதில்லை. அதனால் இது தொடர்பில் சந்தேகம் எழுகின்றது.

இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களை பயன்படுத்துவதா இல்லையா என்பது தொடர்பில் நாட்டில் இருக்கும் 20 வீதமான மக்கள் சிக்கலுக்கு உள்ளாகி இருக்கின்றனர். இந்த விடயத்தின் பாரதூரத்தை கருத்திற்கொண்டு இதுதொடர்பாக ஆய்வு மேற்கொள்ள தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

இதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அறிவுறுத்துகின்றேன் - என்றார்.

இதன்போது சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிக்கையில், இறக்குமதி செய்யப்படும் பால்மாக்கள் தொடர்பாக சபைக்கு தெரிவித்த விடயங்கள் உண்மைக்கு புறம்பானதாகும். அதுதொடர்பில் பூரண பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எமது அமைச்சின் உணவு பாதுகாப்பு பிரிவினர் அதுதொடர்பான பூரண அறிக்கையை எனக்குக் காட்டினார்கள். அதனை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கின்றேன். அந்த அறிக்கை நியூசிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை மற்றும் எமது நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் பாலைத்தவிர வேறு எந்த விடயங்களும் குறித்த பால்மாவில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் வேறு எங்கிருந்தோ வந்த முற்றிலும் பொய்யான அறிக்கையே பிரதி அமைச்சரால் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார்.

இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர் ரஞ்சித் சொய்சா ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து தெரிவிக்கையில், பிரதி அமைச்சர் புத்திக்க பத்திரண அவரிடம் இருக்கும் அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டே பால்மா தொடர்பாக சபைக்கு அறிவித்திருந்தார். ஆனால் தற்போது பிரதி அமைச்சர் சபையில் இல்லாத நேரத்தில் முழு தேசத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் பிரதி அமைச்சரின் கூற்றை சுகாதார அமைச்சர் பொய்யான கூற்று என தெரிவிப்பதன் மூலம் பிரதி அமைச்சருக்கு பதிலளிக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போயுள்ளது. பால்மா நிறுவனங்களிடம் பணம் பெற்றுக்கொள்பவர்கள் தொடர்பாகவும் எங்களுக்கு தெரியும் - என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆனந்த ஆளுத்கமகே, இறக்குமதி செய்யப்படும் பால்மா தொடர்பில் பிரதி அமைச்சர் இந்த சபையில் ஒரு கருத்தை முன்வைத்தார். ஆனால் சுகாரதார அமைச்சர் அந்த கருத்து பொய்யென தெரிவிக்கின்றார். இவர்களில் யார் உண்மை தெரிவிக்கின்றார்கள் என்பதை மக்களுக்கு தெரிவிக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ம-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முத்தமிழ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளளது.

அரியாலை 100ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் தாச்சிப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலிட்டிபாரதிவிளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சுதுமலை யுவசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆலடிசிந்து விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான பிரிவு 3 இற்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்றும் நாளையும் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியலாய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மன்னார் சித்தி விநாயகர் கல்லூரி அணியை எதிர்த்து அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியலாய அணி மோதவுள்ளது. (ஓ.23)



# கால்ப்பந்தாட்டம் நசரேத் அணி வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 8

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நசரேத் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

நசரேத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்ட நிறைவில் நசரேத் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஓ.23)

# காரைநகர் பிரதேச கபடித் தொடர் கலாநிதி, ஒளிச்சுடர் வி.க. வெற்றி





யாழ்ப்பாணம், பெப். 8

காரைநகர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவில் இருபாலருக்குமான கபடித் தொடரில் ஆண்கள் பிரிவில் ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் கலாநிதி விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட் கிழமை இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஒளிச்சுடர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரை சலஞ்சஸ் விளையாட்டு கழக அணி மோதியது. 43:26 என்ற புள்ளி அடிப்படையில் ஒளிச்சுடர் விளையாட்டு கழக அணி வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கலாநிதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தென்;றல் விளையாட்டு கழக அணி மோதியது. 28:12 என்ற புள்ளி அடிப்படையில் கலாநிதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ஓ.23)

# விங்ஸ் மற்றும் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகங்கள் வெற்றி





நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டித் தொடரில் இருபாலருக்குமான எல்லேப் போட்டியில், ஆண்கள் பிரிவில் விங்ஸ் விளையாட்டு கழக அணியும், பெண்கள் பிரிவில்சென்.அன்ரனிஸ்விளையாட்டுக்கழக அணியும் வெற்றிபெற்றன.

உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில்இறுதியாட்டங்கள்கடந்ததிங்கட்கிழமை இடம்பெற்றன.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் விங்ஸ் விளையாட்டு கழக அணியை எதிர்த்து சென்.பற்றிமா விளையாட்டு கழக அணி மோதியது.

முதலில்துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிமா விளையாட்டு கழக அணி 40 பந்துகளில் 3 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்கு ஆடிய விங்ஸ் விளையாட்டு கழக அணியினர் 28 பந்துகளில் 4 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றனர்.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.அன்ரனிஸ் விளையாட்டு கழக அணி மோதியது. 30 பந்துகளில் இரண்டு அணிகளும் ஓட்டங்கள் எதனையும் பதிவு செய்யவில்லை.

மேலதிகமாக 6 பந்துகள் வழங்கப்பட்டன. முதலாவதாக துடுப்பெடுத்தாடிய சென்.அன்ரனிஸ் 2 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் விளையாட்டு கழக அணி எந்தவொரு ஓட்டங்களையும் பதிவு செய்யவில்லை. (ஓ.23)

# பருத்தித்துறை ஐக்கியம் பூப்பந்தில் வெற்றி

கரணவாய், பெப். 8

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான பூப்பந்தில் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

நெல்லியடி மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் இறுதியாட்டம் அண்மையில் இடம்பெற்றது. பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக்கழக கழமும் வியாபாரி மூலை திருநாவலூர் விளையாட்டுக்கழக கழமும் மோதின. மூன்று தனிநபர் இரண்டு தனிநபர்களையும் கொண்ட இந்தப் போட்டியில் 3 மூன்று தனிநபர் ஆட்டங்களையும் வெற்றி கொண்ட பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது. (ஓ.108)

# யூடோவில் முல்லைத்தீவு வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 8

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டச் செயலகங்களுக்கு இடையிலான யூடோவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணி ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தப் போட்டியில், முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணி 4 தங்கப் பதக்கங்கள், 4 வெள்ளிப் பதக்கங்கள், 5 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று முதலாம் இடத்தையும், கிளிநொச்சி மாவட்டச் செயலக அணி 3 தங்கப் பதக்கங்களையும், 2 வெள்ளிப் பதக்கங்களையும், 3 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று இரண்டாம் இடத்தையும், வவுனியா மாவட்டச் செயலக அணி 2 தங்கப் பதக்கங்களையும், 2 வெள்ளிப் பதக்கங்களையும், 4 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. பெண்களுக்கான போட்டியில் கிளிநொச்சி மாவட்டச் செயலக அணி 5 தங்கப் பதக்கங்களையும், 2 வெள்ளி பதக்கங்களையும், 2 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று முதலாம் இடத்தையும், முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணி 3 தங்கம், 3 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று இரண்டாம் இடத்தையும், வவுனியா மாவட்டச் செயலக அணி ஒரு தங்கம், 3 வெள்ளிப் பதக்கங்களுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ஓ.422)

# சிறிமுருகன் கரம் அணி மாகாணத்துக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 8

ஏழாலை சிறிமுருகன் வித்தியாலய கரம் அணியினர் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்கு உட்பட்டோருக்கான கரம் இறுதிப் போட்டியில் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலய கரம் அணியினர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியுடன் விளையாடி வலய மட்டத்தில் முதலிடம் பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

அதே பாடசாலையைச் சேர்ந்த 17 வயதுக்குட்பட்ட கரம் அணியினரும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியுடன் 3ஆம் இடத்துக்கான போட்டியில் விளையாடி வலய மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர். (ஓ.5)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிச்சர்ட்ஸ், இம்ரான்கானை நினைவுபடுத்துகிறார் கோக்லி

## ரவிசாஸ்திரி புகழாரம்



உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக இந்திய அணித் தலைவர் விராட்கோக்லி ஜொலிக்கிறார்.

கடந்த ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர், டெஸ்ட் வீரர், ஒருநாள் போட்டி வீரர் என பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விருதுகளுக்கு தேர்வான உலகின் முதல் வீரர் என்ற சாதனையை அவர் பெற்றார்.

ஒரே ஆண்டில் மூன்று விருதுகளைப் பெற்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இந்த நிலையில் கோக்லிக்கு இந்திய அணியின் பயிற்சியாளரும், முன்னாள் அணித் தலைவருமான ரவிசாஸ்திரி புகழாரம் சூட்டி யுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்;

கோக்லி துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் ரிச்சர்ட்ஸை நினைவு படுத்துகிறார். பல வழிகளிலும் பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் இம்ரான்கானையும் நினைவுப்படுத்துகிறார் என்று பாராட்டியுள்ளார்.

நான் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரரை அருகாமையில் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். இதற்கு விராட்கோக்லி ஒரு அடையாளம். அவர் முற்றிலும் மாறுபட்ட ஒரு வீரர். அவரது தலைமை இந்திய அணிக்கு வேண்டும்.

பயிற்சி பெற வருவது, ஒழுக்கம், தியாகம், தனிப்பட்ட விருப்பங்களை தவிர்ப்பது என அனைத்திலும் அவருக்கு நிகர் எவரும் இல்லை. இப்படி ஒரு அணித் தலைவரை பெற்றது இந்தியாவின் அதிர்ஷ்டம் என்று நான் நினைக்கிறேன்.

அவர் மேலும் நன்றாக வளர்ந்து கொண்டு இருக்கிறார் என்பதற்கு நடைபெற்று முடிந்த ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரை அவர் வென்றதைக் குறிப்பிடலாம் - என்றார்.



# சிமித், வோர்னர் உலக் கிண்ணத்தில் இல்லையென்றால் அது துரதிர்ஷ்டம்

## ஜஸ்டின் லாங்கர் ஆதங்கம்

பந்தை சேதப்படுத்தினர் என்ற விவகாரத்தில் ஆஸ்திரேலியா வீரர்கள் சிமித், வோர்னர் இருவருக்கும் பன்னாட்டு கிரிக்கெட் சபை ஒரு வருட கால தடை விதித்திருந்தது. இவர்களுடைய தடைக்காலம் எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. இதனால் இருவரும் ஆஸ்திரேலிய தேசிய அணியில் இடம் பிடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகக் கிண்ணத்துக்கான அணியில் வோர்னர் இடம்பெற வாய்ப்புள்ளது. சிமித் ஆஷஸ் தொடரில்தான் விளையாடுவார் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் உலகக் கிண்ணத்துக்கான ஆஸ்திரேலிய அணிக்கு ஸ்மித், வோர்னரை தெரிவு செய்யவில்லை எனில், அது பைத்தியக்காரத்தனமானதாக இருக்கும் என்று அந்த அணியின் தலைமை பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; "இருவரும் அணிக்கு திரும்பும் முன் சில போட்டிகளில் விளையாடுவது அவசியம். இது எல்லாம் நிர்வாகத்தின் ஒரு பகுதி. நாம் சற்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அவர்களுக்கு இது கடினமான நேரம் என்பது எங்களுக்குத் தெரியும். அணிக்கும் கடினமான நேரம்தான். கடந்த 9 அல்லது 10 மாதங்களாக ஒருங்கிணைந்து சென்று கொண்டிருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும்.

தற்போதும், வரும் காலத்திலும் அவர்கள் எவ்வளவு கிரிக்கெட் விளையாடுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். அவர்களும் வாய்ப்பை தேடுவார்கள், நாங்களும் வாய்ப்பை தேடுவோம்.

நாம் இரண்டு சிறந்த வீரர்களை பற்றி பேசி வருகிறோம். அவர்களை நாங்கள் உலகக் கிண்ணத்துக்கான அணியில் சேர்க்கவில்லை என்றால், அது பைத்தியக்காரத்தனமாகும்" - என்றார்.

# இந்தியாவுக்கு எதிரான ஆஸி. அணி அறிவிப்பு


இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தற்போது விளையாடி வருகின்றது. இதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு ரி-20 போட்டிகளிலும் ஐந்து ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளது.

முதலாவது ரி-20 போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகி[illegible]து. உலகக் கிண்ணத்துக்கு மு[illegible]பு நடைபெறும் இந்த ஒரு நாள் போட்டி மீது அதிக எதிர்பார்ப்பு உள்ளது.

இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. வேகப்பந்து வீச்சாளர் ஸ்டார்க் காயம் காரணமாக அணியில் இடம்பெறவில்லை. பீற்றர் சிடில், மார்ஷ், ஸ்டான்லேக் ஆகியோர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியா அணி விவரம்; ஆரோன்பிஞ்ச் (அணித் தலைவர்), உஸ்மான் கவாஜா, ஷான் மார்ஷ், ஹேன்ட்ஸ்ஹோம், மக்ஸ்வெல், ஆஸ்டன் டர்னர், மார்கஸ் ஸ்டோனிஸ், அலெக்ஸ் கேரி, கம்மின்ஸ், நாதன் கோல்ட்டர், ஜானே ரிச்சர்ட்சன், ஜோசன் பெக்ரன் மார்ப், நாதன் லயன், ஆடம் ஜம்பா, டி ஆர்சி ஷார்ட்.





எதிர்வரும் வாரங்களில் இடம்பெறவுள்ள கட்டார் பகிரங்க ரென்னிஸ் தொடரில் உலகின் முதல் நிலை வீராங்கனையும், ஆஸ்திரேலியா பகிரங்க ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டம் வென்றவருமான யப்பானின் நவோமி ஒசாகா காயம் காரணமாக இடம்பெறமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# பார்சிலோனா - மட்ரிட் ஆட்டம் சமநிலையில்



ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் கோபா டெல் ரே போட்டியில் முதலாவது அரையிறுதியில் பார்சிலோனா - ரியல் மட்ரிட் அணி மோதியது. இதில் முதலாவது லெக் போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் இருக்க போட்டி முடிவடைந்தது.

முதலாவது ஆட்டம் ஆரம்பமாகி 6ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணி வீரர் லூகஸ் வஸ்குயிஸ் முதலாவது கோலைப் போட்டார். முதலாவது பாதி ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி 57ஆவது நிமித்தில் பார்சிலோனா வீரர் மல்கோம் ஒரு கோலைப் போட இரு அணிகளும் சமநிலையானது.

ஆட்டம் சிறிது நேரம் சூடு பிடித்தது. இன்னொரு கோல் போட்டால் வெற்றியடைந்து விடலாம் என்று இரு அணி வீரர்களும் போட்டி போட்டுக் கொண்டு விறுவிறுப்பாக ஆடினர். ஆனால் இறுதியில் இரு அணி வீரர்களாலும் முடியாமல் போக 1:1 என்ற சமநிலையில் ஆட்டம் முடிவடைந்தது. இரு அணிகளுக்குமான இரண்டாவது லெக் அரையிறுதி எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதில் வெற்றி பெறும் அணியே கிண்ணத்தைக் கைப்பற்றும் என்பது குறிப்பிடத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அணி ஆறுதல் வெற்றி



தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் இடம்பெற்று வரும் போட்டித் தொடர்களில் ரி-20 போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் செஞ் சுரியனில் இடம்பெற்றது. நடைபெற்று முடிவடைந்த இரண்டு ரி-20 போட்டிகளிலும் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி 27 ஓட்டங்களால் ஆறுதல் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி தென்னாபிரிக்கா அணி முதலில் பாகிஸ்தான் அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது. பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பாபர் ஆசம், பகர் சமான் களமிறங்கினர். அணி 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பாபர் அசாம் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அணி 100 ஓட்டங்களுக்குள் 5 இலக்குகளை இழந்து தடுமாறியது. எந்தவொரு வீரரும் 30 ஓட்டங்களைத் தாண்டியிருக்கவில்லை. அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் ஹென்றிக்ஸ் 4 இலக்குகளையும், மோரிஸ் 2 இலக்குகளையும், சிபேமல், பெலுக்குவேயோ தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

169 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஹென்ரிக்ஸ், மலன் களமிறங்கினர். அதிகபட்சமாக மோரிஸ் 55 ஓட்டங்களையும், வான் டீர் டஸ்சன் 41 ஓட்டங்களையும் பெற்றனர். தென்னாபிரிக்கா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 27 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்து வீச்சில் அமீர் 3 இலக்குகளையும், சாட்ப் கான், பஹீம் அஷ்ரப் தலா இரண்டு இலக்குகளையும்,,அப்ரிடி, வாசிம் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் வீரர் சாட்ப் கான் தெரிவு செய்யப்பட்டார். தொடராட்ட நாயகனாக தென்னாபிரிக்கா அணி வீரர் டேவிட் மில்லர் தெரிவு செய்யப்பட்டார்.

போட்டிப் பரீட்சை
இறுதிக் கருத்தரங்கு
P.உமாசங்கர்
வளவாளர்
Feb 17 இல் நடைபெறவுள்ள
சுகாதார முகாமை உதவியாளர்
Feb 10 ஞாயிறு 9am- 4pm
உளச்சார்பும் மொழித்திறனும், முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம்
077 469 6695,
077 741 7143
(C8231541(1.17)

# ஐ.சி.சி தரவரிசையில் ஹோல்டர், கம்மின்ஸ் முன்னேற்றம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை பந்து வீச்சு தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது அதனடிப்படையில் மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் ஹோல்டர், ஆஸ்திரேலியா அணி வீரர் கம்மின்ஸ் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டி இடம்பெற்று வருகின்றது. இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி அபார வெற்றி பெற்று 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இந்த வெற்றிக்கு மேற்கிந்தியத் தீவுகளின் அணித் தலைவர் ஹோல்டர் முக்கிய காரணமாகவிருந்தார். இவர் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். இதன்மூலம் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் தரவரிசையில் 6ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் ஒருவர் 6ஆவது இடத்துக்கு 18 வருடங்களின் பின்னர் முன்னேறியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

ரபாடா முதலிடத்திலும், கம்மின்னிஸ் 2ஆவது இடத்திலும், ஜேம்ஸ் அண்டர்சன் 3ஆவது இடத்திலும், பிலாண்டர் 4ஆவது இடத்திலும், ஜடேஜா 5ஆவது இடத்திலும் உள்ளனர்.



17 ஆம் ஆண்டு நினைவலைகள்





மண்கும்பானின் மைந்தன்
அமரர்
ஐயம்பிள்ளை நடராசா
(உரிமையாளர் - நியூ மைதிலி ஜுவலர்ஸ்)

அன்புள்ள அப்பா!



அன்புள்ள அப்பா!
தோற்றச் சுடரொளியாய்
சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்து வந்துதித்த அப்பாவே!
உங்கள் பிரிவு இன்றுடன் பதினெழு வருடமாச்சு
தேற்றுவதற்கு யாருமில்லை தெளிவு பெற முடியவில்லை
ஆற்றாமல் ஐயா
அழுகின்றோம் நாள்தோறும்
நீக்கமின்றி எம்மனத்தில்
நிலைத்திருப்பீர் எப்போதும்.

மலர்வு 14.04.1947
உதிர்வு 17.01.2002
திதி: 08.02.2019
(தை மாத வளர்பிறை சதுர்த்தி)

அன்னாரின் நினைவையொட்டி இன்று (08.02.2019) வெள்ளிக்கிழமை சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்திலுள்ள வாழ்வகத்தில் இடம்பெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நியூ மைதிலி ஜுவலர்ஸ்
(ந.கஜந்தன்)
38,40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன் வாழும்:
குடும்பத்தினர்,
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

021 221 7878 / 021 221 7877 n.5568) (13.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.